கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



காதலில் உருகியிருக்கிறேன்!

KALKI • 08.11.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



யூத் ஸ்பெஷல்!

Blog-ன் பிரதர்!

ஆஃபீஸ் அலர்ஜி!

யூத் மில்லியனர்!

"ஐ'ம் எ பிஸினஸ் கேர்ள்!"

புற்றுநோய்க்கு ஒரே இடத்தில் தீர்வு!

ONE STOP SOLUTION FOR CANCER



- PET CT SCAN
- All Endoscopies
- Linear Accelerator & Brachy Therapy
- Radiation
- IGRT
- Surgical Oncology
- Medical Oncology

- பெட் சீடி ஸ்கேன்
- அனைத்து என்டோ ஸ்கோபி
- கதிர்வீச்சு
- லீனியர் ஆக்ஸிலரேடர் & உட்கதிர்வீச்சு
- IGRT
- புற்றுநோய் அறுவை சிகிச்சை
- புற்றுநோய் மருத்துவம்

இலவச ஆலோசனைக்கு:

(044) 2246 9200
(044) 66 300 300

PET CT CENTRE AT CANCER INSTITUTE (WIA)
CANAL BANK ROAD, GANDHI NAGAR, ADYAR, CH-20

24 HRS PHARMACY & AMBULANCE SERVICES AVAILABLE

Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL

1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Ph: 2246 9200, 66300300 Fax : 22463282 66300400
E-mail: info@drkamakshimemorialhospital.org.
Website: drkamakshimemorialhospital.org.

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு
இந்த count down கியாரண்டி

543210

5 இலக்கச் சம்பளம்

4 சக்கர வாகனம்

3 பெட்ரூம் வீடு

2 க்யூட் குழந்தைங்க

1 லவ்விங் லைஃப் பார்ட்னர்

0 எதிரிங்க...

‘யூத்’ துவம்



✉ தலை நிறைய மல்லிகைப்பூ; கை நிறைய வளையல்; முகத்துக்கு அழகு சேர்க்கும் மூக்குத்தி; அட்டகாசமாய் அட்டைப் படத்தில் இருக்கும் கிராமத்துக் குயில்... அட! நம்ம நயன் தாராவா? வாவ்!

-எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்

✉ தருமபுரம் ஆதினத்தில் தேவாரப் பாடசாலை ஒன்று இயங்கி வருகிறது.

- வி.எஸ்.சுந்தரராஜன், சென்னை - 15

✉ இமயமலைக்கு அண்ணன் அண்ணாமலை கட்டுரை அறியாத பல விஷயங்களை அறியத் தந்தது!

- சு.ஸ்ரீகாந்த், நெய்வேலி

✉ கல்கி தீபாவளி மலர் வெளிவரா விட்டாலும் கூட, அமுதசுரபி மலரை வானளாவப் புகழ்ந்திருப்பதற்கு சபாஷ்!

- எஸ்.அமிர்தா, வடபழனி

✉ கஷ்டப்படாமல் கெட்ட பெயரைத்தான் சம்பாதிக்க முடியும் என்ற கிரேஸியின் பதில் அருமை.

- உமரி.பொ.கணேசன், மும்பை-37

✉ எங்கள் மாவட்டத்தின் அருமை, பெருமைகளைப் பறை சாற்றச் செய்த 'கல்கி'க்கு நன்றிகள் பல.

- அ.சுகுமார், கல்புதூர்

✉ 'நோ பிளானிங்' என்றாலும், அன்புக்கதிரின் ஓவியங்கள் அனைத்தும் மனத்தில் பதியும் படி 'பளீச்!'

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

✉ 'ஏழை நாடு என உதவுகிற மேலைநாடுகள்' ஏமாத்துகிற நாடு என ஏளனம் செய்கிற நிலை வரலாமா!' என சுனாமி நிதிசுருட்டியவர்களின் தலையில் குட்டியது தலையங்கம்.

- மல்லிகா அன்பழகன், சென்னை-78

✉ 'திருமா'வின் உருக்கமான பேட்டி கண்டிப்பாக உண்மையான தமிழ் நெஞ்சங்களை உருக வைக்கும். அவரின் தன்னிலை விளக்கம் தமிழர்களுக்குப் புரிந்திருக்கும். பாவம்... அவர்தான் என்ன செய்ய முடியும்...?

- 'வானவில்' மூர்த்தி, கூத்தப்பாக்கம்

✉ கடவுள் காதலித்த இடம் என்று வித்தியாசமான தலைப்பைத் தந்து ஒரு (புதிய) கோயிலைத் தெரியப்படுத்தியதற்குப் பாராட்டுகள். - எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்

✉ கூடா நட்பு வைத்திருக்கும் திருமாவளவன் இப்படி பேசுவது சரியல்ல!

- ஆர்.நாகராஜன், சென்னை - 117



✉ இசைப் பேறிஞர் தருமபுரம் பசுவாமிநாதனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி எழுதப்பட்டுள்ள கட்டுரையில், அன்னாரின் நினைவாக தேவாரப் பாடசாலை ஒன்று நிறுவப்படுவது பொருத்தமாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். அக்கருத்துக்கு மாற்றுக் கருத்து ஏதுமில்லை. எனினும் அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதுபோல், இன்று தமிழ்நாட்டில் தேவாரப் பாடசாலை ஒன்றுகூட இல்லை என்பது தவறான செய்தியாகும். சிதம்பரத்தில் இராசா சர். அண்ணாமலைச் செட்டியாரின் குடும்பத்தாரால் தொடர்ந்து தொய்வின்றி நிர்வகிக்கப்பட்டு வரும் வி.எஸ்.அறக்கட்டளையில் தேவாரப் பாடசாலை ஒன்று பல்லாண்டுகளாக இயங்கி வருகிறது. இங்கு பயின்று தேவார இசைமணி பட்டம் பெற்றுச் சென்ற பல மாணவர்கள், இன்று சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும், நம் நாட்டில் உள்ள பல கோயில்களிலும் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள்.

- கு.சேதுசுப்ரமணியன்,
(மேலாளர், வி.எஸ்.அறக்கட்டளை)
சிதம்பரம்.

அந்தக் குயில்?

✉ வேலூர் - திருவண்ணாமலை ஸ்பெஷல் இதழ்களைப் படித்ததும் இரண்டு மாவட்டங்களையும் இண்டு இடுக்கு விடாமல் சுற்றிப் பார்த்த திருப்தி!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

✉ த.கி.நீலகண்டனின் மணிகள் பற்றிய விவரங்கள் மணியாக இருந்தன. ஆனால், அத்தனை நவரத்தினங்களையும் வாங்கி அணிய 'மணி(money)' வேண்டுமே!

-ஜே.துரைராஜ், சென்னை

✉ மேலாண்மை பொன்னுச்சாமியின் 'அக்னி வாசம்' கதை மூலம் உயிரோட்டமுள்ள ஒரு முழு நாவலைப் படித்த உணர்வு!

- கே. சண்முகம், ஆதமங்கலம்புதூர்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



ஐ பாட்டி! ஹை பாட்டி!

நிறைய வெற்றிடங்களைக் கொண்டிருக்கும் குழந்தை இலக்கியத் தளத்தில் கவிஞர் வைரமுத்துவின் மகன் மதன் கார்க்கியும் அவரது மனைவி நந்தினியும் இணைந்து உலகத் தரத்தில் 'i பாட்டி' என்ற குழந்தைப் பாடல்கள் கொண்ட நூலையும் ஆடியோ CD-யையும் சமீபத்தில் வெளியிட்டுள்ளனர். சுயத்தைத் திருப்தி செய்துகொள்ள நூல் வெளியிடும் இக்காலச் சூழலில், தமிழ்க் குழந்தைகளின் அகத்தை வருடிக் கொடுக்கும் இந்த அரிய முயற்சி பற்றிப் பேசிய போது...

திரைப்பாடலிலிருந்து குழந்தைப் பாடலுக்கு மடை மாறியதேன்?

''திரைப்பாடல் எனக்குப் பொழுது போக்கு. குழந்தைப் பாடலும் அதன் நூல் வடிவமும் எங்கள் கனவுக்கான ஆதாரப் பணிகள்.''

எது உங்கள் கனவாயிருக்கிறது? இந்த நூலை வெளியிட்டிருக்கும் 'மெல்லினம்' எப்படிக் கருக்கொண்டது?

''நானும் என் மனைவியும் உலகத் தரத்தில் ஒரு தமிழ்ப் பள்ளியை உருவாக்கத் திட்டமிட்டோம். அதுதான் எங்கள் கனவு. ஆங்கிலம் ஒரு பாடமாயிருக்கும். ஆனால் எல்லாப் பாடங்களும் செயல் முறைகளும் தமிழிலேயே அமைக்கத் திட்டமிட்டோம். இன்னும் ஐந்து வருடத்தில் முடிந்துவிடும். அந்தப் பள்ளிக்கான அடிப்படையான விஷயங்களை நாங்களே உருவாக்க முனைந்தோம். குழந்தையின் குண சாயலில் இந்த 'மெல்லினம்' துவங்கி குழந்தை மனத்தில் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக் கொண்டு வரும் விதத்தில் இந்தக் குழந்தைப் பாடல்களை வெளியிட்டோம்.''

குழந்தைப் பாடலுக்கு 'i பாட்டி' என்ற தலைப்பிட்டது ஏன்?

''சிட்டி லைஃப்ல குழந்தைகள் மிஸ் பண்ணும் முக்கிய விஷயம் பாட்டிதான். இன்றைய சூழலில் அந்தப் பாட்டி மாடர்னா இருக்கணும்னு நெனைச்சேன். அதனால i பாட்டி (i for இன்பர்மேஷன்)''

''அங்க பாரு மேகம்
பஞ்சு பஞ்சா மேகம்
மழை மழையாய்ப் பொழியுது
நனைஞ்சிடலாம் பறபற'' இப்படியான குழந்தை மொழியை எங்கே கைப் பற்றினீர்கள்?

''குழந்தைகளிடமிருந்துதான்.''

ஒரே துறையில் கணவன் - மனைவி. பிரச்னை இருக்காதா?

''ஈகோ இருந்தாதானே பிரச்னை? குழந்தையின் மனநிலைக்கு மாறி நான் பாடல் எழுதினேன். அம்மாவோட மன நிலையில் நந்தினி அதைச் செப்பனிட்டார்.''

இதுவும் இலக்கியம்

குழந்தைப் பாடல்களை எழுதி உலகத் தரத்தில் நூலாகக் கொண்டு வந்ததில் நிகழ்ந்த சுவாரஸ்யப் பதிவு என்ன? எல்லா பாடல்களும் வழக்குத் தமிழில் ஏன்?

''முதல்ல சுத்தத் தமிழில்தான் எழுதினோம். அதைக் குழந்தைகளிடம் பாடிக் காட்டியபோது அவர்கள் அதை விரும்பவில்லை. அதைத் தமிழாகவே உணரவில்லை. பிறகுதான் இந்த மொழிக்கு மாற்றினோம். 50 பாடல்களில் குழந்தைகளிடம் பாடிக் காட்டியதில் 15 பாடல்களை அவர்களே நிராகரித்தனர். ('அங்கிள் இது நல்லாவே இல்ல.') அவர்கள் ஓ.கே. சொன்ன பாடல்கள்தான் நூலில் வந்தன.''

ஒரு நூல் 500 ரூபாய் என்றால், இது வசதி



"குழந்தையின் மனநிலையில் நான் எழுத, அம்மாவாக மாறிச் செப்பனிட்டார் நந்தினி"

யான குழந்தைகளுக்கு மட்டுமேயான வரமா?

''இல்லை. மற்றவர்களுக்கும் அரசு மூலம் இலவசமாகவோ சலுகை விலையிலோ கிடைக்க ஏற்பாடு செய்ய முயல்கிறோம். தனியார் சேனல் நிறுவனம் மூலம் பரவலாக்கவும் திட்டம்.''

'சில் சில் சில்'னு ஒரு பாட்டு இருந்தா ஆங்கிலவாசிப்புக்கென்று sil sil sillunu லிபி மாற்றிப் போட்டிருக்கீங்க... ஏன்?

''தமிழ்நாட்டுப் பெற்றோர்கள் பலருக்கு, தமிழ்ப்பாட்டைப் படித்து குழந்தைக்குச் சொல்லித்தரத் தெரியாமலிருக்கிறது. தமிழ் அவர்களின் பயன்பாட்டில் இல்லை. எனவேதான் இந்த முறையையும் இதில் நுழைத்தோம்.''

ஆலமரத்தின் (வைரமுத்து) தலையீடு இருந்ததா?

''இல்லை. புத்தகத்தின் பிரதி வந்த பிறகுதான் காண்பிச்சோம்.''



i பாட்டி சொல்லித்தரும் அஞ்சு பூதம் பாட்டு

அஞ்சு பூதம் தெரியுமா?
அஞ்சு பூதம் தெரியுமா?
ஒண்ணு ரெண்டு மூணு நாலு
அஞ்சு பூதம் தெரியுமா?

வானம் ஒரு பூதம் - அதில்
மிதந்திடுமே மேகம்!

தண்ணி ஒரு பூதம் - அது
தீத்திடுமே தாகம்!

நெருப்பு ஒரு பூதம் - அதில்
சமச்சிடுவோம் சாதம்!

காத்து ஒரு பூதம் - அது
சிலுசிலுன்னு ஊதும்!

பூமி ஒரு பூதம் - அதில்
பதிச்சிடுவோம் பாதம்!

ஒண்ணு ரெண்டு மூணு நாலு
அஞ்சு பூதம் தெரிஞ்சுக்க!
அஞ்சு பூதம் ஒவ்வொண்ணுமே
நல்ல பூதம் தெரிஞ்சுக்க!

(பேசிக் கொண்டிருக்கையில் நந்தினி குறுக்கிட்டு)

''ஒரு வருடம் தயாரித்து உருவாக்கினோம். இது எங்கள் முதல் பிரசவம். முதல் குழந்தை. தரமான விஷயம் தானாகவே பரவும் என்பதால் வெளியீட்டு விழாகூடக் கிடையாது'' என்றார் விரைவில் அம்மாவாகப் போகும் நந்தினி.

ஹை! பாட்டியாகப் போறாரு பொன்மணி வைரமுத்து!

- அமிர்தா



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன் : 22760612, 22762299,29710350
City Office No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 22 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 150 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர். மேலும் கூடுவாஞ்சேரியில் உள்ள எங்களது குருகுலத்தில் 30 மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது, ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

யூத் பார்லிமெண்ட்

நமது மக்களவையில் நாற்பது வயதுக்கு உட்பட்டவர்கள் 83 உறுப்பினர்கள். ''இளைஞர்கள் நிறைய அரசியலுக்கு வரவேண்டும்'' என்று பலமான குரல்கள் எழும் சூழலில், பதினைந்து சதவிகிதம் இளைய தலைமுறை மக்களவையில் இருப்பது நம்பிக்கை அளிக்கும் ஒன்று. அவர்களில் சிலரை இங்கே பார்ப்போமா?

மீனாட்சி நடராஜன் *(மாண்ட்சோர், மத்தியப் பிரதேசம்):*

இவரது குடும்பத்துக்குத் தமிழ்நாடுதான் வேர் என்றாலும், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே மத்தியப் பிரதேசத்தில் செட்டிலானவர்கள். மாணவர் காங்கிரஸில் இறங்கித் தூள் கிளப்பியவர். இதன் காரணமாக ராகுலின் கவனத்தைக் கவர்ந்தவர். பாபாஅம்தே, சுந்தர்லால் பகுகுணா, அன்னா ஹசாரே ஆகிய சுற்றுச்சூழல் ஆர்வலர்களுடன் இணைந்து பொதுப் பிரச்னைகளில் போராடி இருக்கிறார். மகாத்மா காந்தி, உருதுக் கவிஞர் இக்பால், விவேகானந்தர் என்று மேற்கோள் காட்டி சரளமாக இலக்கண ஹிந்தியில் அமைந்த இவரது கன்னிப் பேச்சு, பாராளுமன்றத்தில் எல்லோரையும் கட்டிப்போட்டது. எந்த விதமான அரசியல் பின்புலமும் இல்லாமல் வந்திருக்கிறார் இந்த வழக்கறிஞர்.

* அகதா சங்மா





* சச்சின் பைலட்



* வருண்காந்தி

மாணிக்க தாகூர் *(விருதுநகர், தமிழ்நாடு):*

இவரது பெயரைக் கேட்டவுடன் வடக்கேயிருந்து இறக்கிவிடப் பட்டவரோ என்று

இந்தப் படை போதுமா; இன்னும் கொஞ்சம் வேணுமா?

தொகுதியில் எல்லோரும் சந்தேகப்பட்டார்கள். பக்கா தமிழன். அப்பா பஹீரதன் ஆசிரியர். சிவகாசிக்காரர். தாத்தா மாணிக்கம்பலம் பெயரையும் ரபீந்திரநாத் தாகூரையும் இணைத்து பையனுக்கு மாணிக்க தாகூர் என்று பெயர் வைத்து விட்டார். காங்கிரஸ் சார்பாக வேறு ஒருவர் வேட்பாளர் என்று களத்தில் இறக்கிவிடப்பட, கடைசி நேரத்தில் அவர் மாற்றப்பட்டு இவரை இறக்கினார் ராகுல். முயல், ஆமை கதை போல வைகோவை ஓரங்கட்டியவர். பெங்களூரு, தில்லியில் படிப்பு. தில்லி பல்கலைக்கழகத்தில் மாணவர் காங்கிரஸ் கை ஓங்கப் பாடுபட்டவர்.



* ஜோதிர் ஆதித்ய சிந்தியா

துஷ்யந்த் சிங் *(ஜாலவன் பாரன், ராஜஸ்தான்):*

தோல்பூர் சமஸ்தான இளவரசர். ஹோட்டல் நிர்வாகத்தைச் சிறப்பாகப் படித்து மேலாண்மை முதுநிலைப் பட்டம் பெற்றவர். பல நாடுகளில் படா படா ஹோட்டல்களில் வேலை பார்த்த அனுபவமும் உண்டு. அம்மா வசுந்தரா ராஜே சிந்தியா பாதையில், பா.ஜ.க.வில் அணி வகுக்கிறார். ஆனால், எந்த உட்கட்சிப் புயலிலும் சிக்காமல், 'தான் உண்டு; தனது தொகுதி உண்டு' என்று இருப்பவர்.

சச்சின் பைலட் *(ஆஜ்மீர், ராஜஸ்தான்):*

ராகுலின் நம்பிக்கைக்குரிய தோழர். மறைந்த காங்கிரஸ் தலைவர் ராஜேஷ் பைலட்டின் மகன். இவரும் எம்.பி.ஏ. பட்டதாரிதான். பள்ளிப்படிப்பை விமானப்படைப் பள்ளியில் துவக்கியதாலோ என்னவோ, குட்டி விமானங்களில் உயரே உயரே பறப்பதை தமது ஹாபியாக வைத்திருக்கிறார். இவரது ஜெய் ஜவான், ஜெய் கிசான் அறக்கட்டளை பல நல்ல பணிகளைச் செய்து வருகிறது. தொலைத்தொடர்புத் துறையில் இளநிலை அமைச்சர் (ராஜாவுக்கு செக்!). இவரது மாமனாரும் ஐ.மு. அரசில் அமைச்சர். ஆம்! ஃபரூக் அப்துல்லாவின் மகள் சாராவைத் தமது திருமதியாக்கிக் கொண்டிருக்கிறார்.

சிவகுமார் (எ) ரித்திஷ் *(ராமநாதபுரம், தமிழ்நாடு):*

பாராளுமன்றத்துக்குப் புதுமுகம். ஆனால், தமிழ்த் திரையுலகுக்கு, பார்த்த முகம். 'நாயகன்' திரைப்படத்தைத்

தயாரித்து, அதில் நாயகனாகவும் நடித்தவர். மூத்த தி.மு.கழகப் பிரமுகர் சுப.தங்க வேலனின் சொந்தக்காரர். அழகிரியை ஆராதித்து அடித்தார் லக்கி பிரைஸ். தேர்தல் நெருக்கத்தில் 'பின் தங்கியிருக் கிறார்' என்று பத்திரிகைகள் கூறின. ஆனால், 'திருமங்கலம்' பாணியில் தாரா ளத்தைக் காட்டியதால் பெற்றார் வெற்றி என்கிறார்கள். படிப்பால் என்ஜினியர். இடையில் அ.தி.மு.க.வுடன் நெருக்கம்



* சதாப்தி ராய்



* மாணிக்க தாகூர்



* மீனாட்சி நடராஜன்

காட்டியவர் என்று உள்ளூர் உடன் பிறப்புகள் புலம்புவதுண்டு.

வருண்காந்தி *(பிலிபெட், உத்தரப் பிரதேசம்):*

குடும்பப் பூசலில் முகாம் மாறி பா.ஜ.க.வில் இருக்கும் ராகுல் சகோதரர். இவருக்கு அம்மா மேனகா காந்திதான் அரசியல் ஆசான். மகனுக்காகத் தமது பிலிபெட் தொகுதியை விட்டுக் கொடுத்து விட்டார். தேர்தலில் வெற்றி பெறுவதை நோக்கமாகக் கொண்டு, தமது அதிரடிப் பேச்சால் மத வெறியைக் கிளப்பிவிட்டார் வருண். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ளே போட்டு விட்டார் மாயாவதி. அதனாலென்ன? தாம் நினைத்தபடி பரபரப்பைக் கிளப்பி வெற்றி பெற்று விட்டார். ஆனால், நேரு குடும்பத்து நபர் என்பதால் அந்தக் குடும்பத்தைச் சங்கடப் படுத்தவே வருண் பா.ஜ.க.வில் முன்னி லைப்படுத்தப்படுகிறார் என்பதும், அவர் எந்தக் காலத்திலும் தலைவர் ரேஞ்சுக்குப் போக முடியாது (கூடாது!) என்பதும் சங்கக் குடும்பத்தில் எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்!

ஜோதிர் ஆதித்ய சிந்தியா *(குணா, மத்தியப் பிரதேசம்):*

குவாலியர் ராஜ குடும்பத்து இளவர சர். இவரது பாட்டி யும், அத்தையும் பா.ஜ.க. என்றாலும் இந்த ஜூனியர் சிந்தியா அப்பா மாதவ ராவ் சிந்தியாவின் கையைப் பிடித்து காங் கிரஸில் நுழைந்தவர். அப்பா விமான விபத்தில் இறந்ததும், ராகுல் காந்தியால் முன்னணிக்குக் கொண்டுவரப்பட்டவர். 'வெட்டி வா' என்றால் கட்டி வரும் பய மறியா இளங்கன்று. அப்படியிருக்க சோனி யாவுக்கும் ராகுலுக்கும் இவரைப் பிடித் திருப்பதில் வியப்பென்ன? பல ரகசியப் பின்னணி வேலைகளை இவரிடம் நம்பி ஒப்படைக்கிறார்கள். ஹார்வர்டு பல்கலை



* ரித்திஷ்

யில் மேலாண்மை பட்டம் பெற்றவர். இப்போது வர்த்தகம், தொழில் இலாக்கா இணை அமைச்சர்.

சதாப்தி ராய் *(பிர்பூம், மேற்கு வங்கம்):*

வங்காளப் படங்களில் தோன்றிய நடிகை. நடிப்பு இவரது ரத்தத்துடன் கலந்தது. திரிணாமுல் காங்கிரஸின் இளைய தளபதி



* துஷ்யந்த் சிங்

களுள் ஒருவர். நேரம் கிடைக்கும் போது நடிப்புக் கல்லூரி பேராசிரியர். கவிஞர். மம்தாவின் முந்தானை முடிச்சு! அடிதடி, வெட்டுக் குத்து, துப்பாக்கி, வெடிகுண்டு என்று பயமுறுத்தும் மார்க்ஸிஸ்ட் தொகுதியில் புயலெனப் புகுந்து சென்று, வென்று, தோழர்களைக் கடுப்படித்தவர்.

அகதா சங்க்மா *(துரா, மேகாலயா):*

அகதாவுக்கு வயது இருபத்தேழுதான். அரசியலில் மூழ்கி முத்தெடுத்த பி.ஏ.சங்க்மாவின் வாரிசு. அவரைப் போலவே தேசியவாத காங்கிரஸில் பிடிப்பு. பிரிவினைவாதிகளும், தீவிரவாதிகளும், களம் அமைத்திருக்கும் வடகிழக்கில், தேசியத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் குடும்பம். ''மேகாலயாவை மற்ற

* ஹர்சிம்ரத் கவுர் பாதல்



வளர்ந்த மாநிலங்கள் போல் மாற்றிக் காட்டுவேன்'' என்று சபதம் செய்திருக்கும் அகதா, இப்போது கிராமப்புற வளர்ச்சி இலாக்காவின் இணை அமைச்சர்.

ஹர்சிம்ரத் கவுர் பாதல் *(பதிந்தா, பஞ்சாப்):*

மருமகளான ஹர்சிம்ரத்தைக் களத்தில் இறக்கிவிட்டுவிட்டார் அகாலி தளம் பிரகாஷ் சிங் பாதல். கணவர் சுக்பீர் சிங் பாதல் பஞ்சாப் துணை முதலமைச்சர். மாமனார் முதல்வர். (அடடே தமிழ்நாடு காற்று வீசுகிறதே!) இப்படிப்பட்ட பின்னணி இருந்தாலும் கொஞ்சம் அடக்கியே வாசிக்கிறார் ஹர்சிம்ரத்.

- கௌசி



ஆதவன்

- வழக்கமான, அதேநேரத்தில் பழக்கமான அப்பாவைக் காப்பாற்றும் மகனின் (கோலிவுட்) கதை
- 'அயன்' படம் போலவே இதிலும் மாடிக்கு மாடி சூர்யா தாவுகிறார்.
- ஆலமரம், பஞ்சாயத்து, சொம்பு, வெட்டுக் குத்துக்குப் பதிலாக வெடிகுண்டு, துப்பாக்கி, ரவுடியிஸம் (ஹைடெக்காமாம்) என மாறியிருக்கிறார் கே.எஸ். ரவிக்குமார்.
- மியூஸிக் சேர் விளையாட்டில் இடம் கிடைக்காமல் பரிதாபமாக ஒதுங்கும் அழகான பெண் போல கும்பலில் தவிக்கிறார் நயன்தாரா. (முகத்தில் ஏன் அத்தனை முதிர்ச்சி?)
- வித்தியாசம் என்ற பெயரில் பத்து வயசுப் பையன் முகத்தில் சூர்யா முகத்தை ஒட்ட வைத்து விளையாட்டு காட்டியிருக்கிறார்.
- வடிவேலு வரும் ஸீன்களிலெல்லாம் வெடிவேலு! முதல் பாதியில் சூர்யாவை டம்மியாக்குவதே இவர்தான். எப்படி இயக்குநர் கவனிக்காமல் விட்டாரோ... இல்லை கவனித்தும் கவனிக்காதது போல இருந்தாரோ?
- வில்லன் ராகுல்தேவ் திரையில் தோன்றும் காட்சிகளிலும் ரசிகர்கள் மனத்திலும் ஒருவித இறுக்கம் தோன்றுகிறது.
- 'ஹசிலி பிசிலி, வாராயோ, வாராயோ' இரண்டு பாடல்களில் மட்டும் ஹாரிஸ் ஜெயராஜின் இருப்பு தெரிகிறது. பின்னணியில் செம வெறுப்பு.
- கனல் கண்ணன் சண்டையில் அனல்!
- ரா.கணேஷின் கேமராவில் வேகமோ வேகம்!

ஆதவன் - சுடாத சூரியன்

- மகிமைராஜன்

கோலிவுட்டின் கொத்து புரோட்டா படங்களுக்கு மத்தியில் மண்வாசத்தோடும் மண் நேசத்தோடும் கிளைத்து வேறு பாதையில் பயணிக்கும் படம் பேராண்மை. அந்நிய விஷமிகளின் ஆபத்தான திட்டங்களை அழித்தொழிக்கிறான் அடர்ந்த காட்டின் பேருண்மை அறிந்த மலைஜாதி துருவன் என்பதுதான் கதை. துருவன் - ஜெயம் ரவி.

பழுக்கக் காய்ச்சிய இரும்பாக சூடும், சுவையுமான கதாபாத்திரம் ஜெயம் ரவிக்கு. ரவியும் ரஃப் அண்ட் டஃப்பாகவே செய்திருக்கிறார். கோவணம் கட்டிக்கொண்டு மாட்டுக்குப் பிரசவம் பார்ப்பதிலிருந்து, அவமானங்களைச் செரித்துக் கொண்டு அடங்க மறுப்பது என... ஃப்ரேமுக்கு ஃப்ரேம் விறைப்பு கூடிக் கொண்டே போவது கதாபாத்திரத்தோடு நம்மை ஒன்ற வைக்கிறது. வெளிநாட்டு வில்லன் ரோலண்ட் கிக்கிங்கர். வெள்ளை மலையாக விதிர்விதிர்க்க வைக்கிறார். ஆனாலும், காடுகளில் அவரை அலைய விட்டிருப்பதில் கோலிவுட் அலப்பறை தெரிகிறது. கும்மாளமும் குறும்புமாகச் சுற்றித் திரியும் ஐந்து பெண்களும் (ஹீரோயின்ஸாம்) குறிப்பறிந்து சீரியஸ் ஆவதில் அப்ளாஸ் வாங்குகின்றனர். எனினும் என்.சி.சி. பெண்க ளை ராக்கெட் லாஞ்ச்சர் இயக்க வைத்திருப்பதில் இயக்குநர் நம் காதுக்கு மட்டுமல்ல; கண்களுக்கும் பூ சுற்றிவிட்டிருக்கிறார். வடிவேலு இருக்கிறார்; ஆனால் இ...ல்...லை...

குத்துப்பாட்டு இல்லை, கொட்டும் ரத்தம் இல்லை, ஆடைக் குறைப்பு இல்லை, அதனால் அலுப்பும் இல்லை...

வித்யாசாகர் பின்னணி இசையில் பின்தங்கி, பாடல்களில் 'இருக்கிறேன் ஸார்' என்கிறார். காடுகளின் ரகசியத்தைக் கண்களுக்குள் நிறைக்கும் சதீஷ்குமாரின் கேமராவுக்கு திருஷ்டி சுத்திப் போடணும்.

வித்தியாசமான கதைகளோடு களத்துக்கு வந்திருக்கும் இயக்குநர் ஜனநாதனுக்கு ஜே!


பேராண்மை - உண்மையில் பேராண்மைதான்! **- முத்து**

பேராண்மை





கல்கி



2009 நவம்பர் 8
விரோதி ஐப்பசி 22
மலர் : 68
இதழ் : 15


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


ராஜ ஊழல்!

அரசுக்கு இருபத்திரண்டாயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு என்பதை சி.பி.ஐ.யின் முதல் தகவல் அறிக்கை உறுதி செய்கிறது. ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் நடந்துள்ள இந்த மோசடி மூலம், யார் யாருக்கு எவ்வளவு தொகை லஞ்சமாகப் போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதை அந்த அறிக்கை குறிப்பிடவில்லை! யாரோ சில அதிகாரிகள் மோசடி செய்துவிட்டதாகக் கூறுகிறது! அரசு இழந்துள்ள இருபத்திரண்டாயிரம் கோடி ரூபாய் என்பது மக்களின் பணம். ஆகவே, மேற்கொண்டு விவரங்களை அறியும் உரிமை மக்களுக்கு இருக்கிறது.

"நஷ்டம் ஏற்படவில்லை," என்று முதலில் மறுத்த டெலிகாம் துறை அமைச்சர் ராஜாவோ, தற்போது, "பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் தெரிந்தேதான் அன்றைய விதிமுறைகளின்படி அனைத்தும் நிகழ்ந்துள்ளன. ஊழல் ஏதும் இல்லை" என்பதாகப் பேசித் தப்பிவிடப் பார்க்கிறார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாகவே, ராஜா தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்தபோதே, ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரம் வெடித்துவிட்டது. சந்தேகத்தின் நிழலில் இருந்த ராஜாவுக்கே மீண்டும் அதே அமைச்சகம் தரப்பட வேண்டும் என்று தி.மு.க. போராடி, காங்கிரஸ் தலைமையை கிட்டத்தட்ட பிளாக்மெயில் செய்தே பெற்றுக்கொண்டது! அதே அமைச்சகத்தை, அதே அமைச்சருக்குக் கேட்ட பிடிவாதத்தையும் தற்போது





வெளிப்பட்டிருக்கும் உண்மைகளையும் இணைத்துப் பார்க்கிறபோது, ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் புதைந்து கிடக்கும் ஊழல்கள் பல என்றே யாருக்கும் எண்ணத் தோன்றும். அவற்றை மறைப்பதற்காக, இப்போது சில அதிகாரிகள் பலிகடாவாக்கப்பட இருக்கிறார்கள் என்றும் கருத இடமுண்டு.

பிரதமருக்குத் தெரிந்தே யாவும் நடந்தன என்று கூறும் ராஜா, அந்த வாதத்தைக் கொண்டு தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. எந்த அமைச்சரும் ஒரு முடிவை எடுக்கையில் நாட்டுக்கு எது மிக நல்லது என்று ஆய்ந்து எடுக்கக் கடமைப்பட்டுள்ளார். முதலில் வந்தவர்களுக்கு முதல் உரிமை என்கிற அடிப்படையில் ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றைகளை விற்பதில் உள்ள அபாயங்களை அத்துறை அதிகாரிகள் அமைச்சருக்கு எடுத்துச் சொல்லாவிட்டாலும், அமைச்சர் தீர ஆலோசித்து, 'இந்த விற்பனை முறை பழுதானது; நஷ்டம் விளைவிக்கக்கூடியது' என்று சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்.

இப்போது, நஷ்டம் உறுதியாகிவிட்ட நிலையிலாவது ராஜாவின் ராஜினாமா கோரப்படுவது அவசியம். பிரதமர் நடவடிக்கை எடுக்கும் முன், தி.மு.க. தலைவர் ராஜாவை ராஜினாமா செய்யச் சொல்லி அறிவுரை வழங்குவது கௌரவமாக இருக்கும்.

சி.பி.ஐ. தந்துள்ள முதல் தகவல் அறிக்கையின் பேரில் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்படுவதும் அதி முக்கியம். அந்த வழக்கு, சில அதிகாரிகளைப் பலிகடாவாக்கும் கண்துடைப்பாக முடிந்துவிடக் கூடாது. உண்மைகள் கண்டறியப்பட்டு, குற்றவாளிகள் யாராயினும் உரிய தண்டனை வழங்கப்பெற்றால்தான் மக்களுக்கு நீதி கிடைக்கும். இதுபோன்ற சுரண்டல்கள் தொடராமல் இருக்கும். ○

சுருளிப்பட்டி தைலா

தொற்றுநோய் மருத்துவமனையில் எந்தப் பொருளும் காணாமல் போகவில்லை...

தொற்றுநோய் கூடவா?

“**க**டவுள் மீது நம்பிக்கை போய்விட்டது.”

- பால் தாக்கரே

அதனால் என்ன? வன்முறை மீது நம்பிக்கை இருக்கில்லை, போதாதா?

“**நா**ட்டில் உள்ள எல்லா நீதிமன்றங்களிலும் உள்ள வழக்குகளையும் 2011க்குள் தீர்க்க நடவடிக்கை.”

-மொய்லி

எப்படி தீர்க்கலாச்சுன்னு யாராச்சும் வழக்கு போட்டா..?



கட்சி அலுவலகத்துக்கு ஜெ. திடீர் வருகை!

அச்சோ பாவம்! ஆரத்தி எடுக்க முடியாம போயிடுச்சில்ல..?

டாஸ்மாக் கடையில் பஸ் புகுந்தது. மது வாங்க நின்றவர் நசுங்கி பலி!

ஷார்ட் கட்டில் ஸ்வர்கம்னு நினைச்சு வந்தவர் கட் சர்வீஸ்ல போயிட்டாரா?

‘**த**மிழகத்தில் காங்கிரஸ் சொந்தக் காலில் நிற்க வேண்டும்.

- சாந்தாராம் நாயக்
(காங்கிரஸ் தமிழக மேலிட பொறுப்பாளர்)

முறிஞ்ச கால் திரும்ப முளைக்குமா?

தெரியாமத்தான் கேட்கறேன்...

'கோவா' படத்தின் மூலம் தயாரிப்பாளர் ஆகியிருக்கிறார் ரஜினியின் இரண்டாவது பெண் சௌந்தர்யா. வயதில் இருபதின் இரண்டாம் பாகத்திலிருக்கும் சௌந்தர்யா தூக்கிச் சுமக்கும் பொறுப்புகளில் ஒரு CEO லெவலுக்கு நம்மை ஆச்சர்யப்படுத்துகிறார்... இதோ அவருடனான இனிமை இளமைச் சந்திப்பு...



ஐ'ம் எ பிஸினஸ் கேர்ள்!

கிராஃபிக்ஸ் ஸ்டூடியோஸ் நடத்தி வந்த நீங்கள் தயாரிப்பாள ரானது எப்படி?

''ஆக்கர் ஸ்டூடியோ எனக்குக் குழந்தை மாதிரி. மூன்றரை ஆண்டு களுக்கு முன் பத்துப் பேருடன் ஆரம் பிக்கப்பட்டது. இன்று 120 பேருடன் பெரிய குடும்பமாகியிருக்கிறது. இங்கு கிராஃபிக்ஸ் வேலைகள், டிஜிட்டல் எடிட்டிங், கலர் கிரேடிங், அனிமேஷன் என்று வளர்ந்து, இன்று அடுத்த கட்ட மாகப் படத் தயாரிப்புக்கு வந்திருக்கிறது. சினிமாவில் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பளிப்பது தயாரிப்புத் துறைதான். அதனால்தான் நான் படம் தயாரிக்க முடி வெடுத்தேன்.''


உங்கள் தயாரிப்பு நிறுவனப் படங்கள் எப்படி இருக்கும்?

''தரமான ஜாலியான என்டர்டெய்ன ராக இருக்கும்; தொழில்நுட்ப ரீதியிலும்

பேசப்படும்; கதை விஷயத்திலும் கவனிக் கப்படும். புதிய புதிய நடிகர்கள், டெக்னீஷியன்ஸ் என அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் திட்டத்துடன் செயல்பட இருக்கிறோம். அடுத்த ஜெனரேஷன் இளைஞர்களுக்கு நல்ல ப்ளாட்ஃபார்மாக எங்கள் நிறுவனம் இருக்கும்.''

கிராஃபிக்ஸ் துறையில் உங்கள் நிறுவனம் இதுவரை செய்ததுதான் என்ன?

''தமிழிலும் கன்னடத்திலும் நிறைய படங்களுக்கு கிராஃபிக்ஸ் செய்திருக்கிறோம். பத்து படங்கள் வருகின்றன என்றால் அதில் ஒன்பது படங்களில் எங்கள் கிராஃபிக்ஸ் இருக்கும். ஆனால், எந்தக் காட்சியில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது வெளியே தெரியாது. 'சென்னை-28' படத்தில் ஒரு டென்னிஸ் பந்து வருமே, அது நிஜப்பந்து அல்ல. கிராஃபிக்ஸ் பந்து. அதுபோல நிறைய உண்டு.''



* 'சுல்தான் தி வாரியர்' படத்தில்...

உங்கள் முதல் தயாரிப்புக்கு வெங்கட் பிரபுவின் இயக்கம் ஏன்?

''எங்கள் கம்பெனியில் 120 பேர் வேலை பார்க்கிறார்கள். நான் முதலாளி மாதிரியோ அவர்கள் தொழிலாளர்கள் மாதிரியோ இருக்கமாட்டோம். எங்கள் நிறுவன வளர்ச்சிக்குக் காரணம் அந்த டீம் வொர்க்தான். அதைப் போலவே வெங்கட்பிரபுவின் டீமும் இருக்கும். எல்லாருடனும் அவரும் என்னைப் போலவே ஃப்ரெண்ட்லியாக இருப்பார். இது எனக்குப் பிடித்திருந்தது.

'சென்னை - 28' எனக்குப் பிடித்த படம். அடுத்து 'சரோஜா' தொடங்கும் முன்பே இவர்தான் நம் தயாரிப்பில் முதல்படம் இயக்குபவர் என்பதை முடிவு செய்துவிட்டேன். அவர் சொன்ன கதை எனக்குப் பிடித்து. உடனே ஓ.கே. சொல்லிவிட்டேன்.''

நீங்கள் இயக்கி உருவாக்கி வரும் 'சுல்தான் தி வாரியர்' எந்த அளவில் இருக்கிறது?

''அது த்ரிடி அனிமேஷன் படம். ஆனாலும் கண்ணாடி தேவையில்லை. நம் நாட்டில் இன்னமும் பிரபலமாகாதது. இது அனிமேஷன் படம்தான். ஆனாலும் லைவ்வாக எடுக்கப்பட்ட படம் போலவே இருக்கும். இதற்கு நிறைய நேரம் தேவைப்படும். ஒரு வினாடிக்கு 24 ஃப்ரேம்கள் ஓடும் என்றால் அதில் ஒவ்வொரு ஃப்ரேமிலும் கிராஃபிக்ஸ் செய்ய வேண்டியிருக்கும்.

'சுல்தான்' என் கனவுப் படைப்பு. அப்பாவை அப்படியே காட்டும்படி அவ்வளவு தத்ரூபமாக இருக்கும். இதற்காக அப்பாவை வைத்து பத்து நாட்கள் 'இன்ஃப்ரா ரெட்' கேமராவில் படப்

பிடிப்பு நடத்தினேன். அப்பாவின் மேனரிஸம் வேண்டும் என்றால் அதிலுள்ள அசைவுகளில் அனிமேஷன் பொருத்த வேண்டும். இது மிகவும் சிரமமான - நேரம் பிடிக்கும் வேலை. ஆனால் அதன் பயன் பிரமாதமாக இருக்கும். படம் முடிந்து வந்தால் பேசப்படும். 'சுல்தான்' நம்மூருக்குப் பெரிய வாசலைத் திறந்து வைக்கும் படமாக இருக்கும். அது மட்டும் நிச்சயம்.''



* வெங்கட் பிரபு

தனிப்பட்ட முறையில் உங்களுக்கு எந்த மாதிரியான படங்கள் பிடிக்கும்?

''ரொமான்டிக், காமெடி, ஆக்ஷன்... எல்லாம் பிடிக்கும். வெட்டு, குத்து, ரத்தம் போன்ற கோரமானவை பிடிக்காது. காமெடி பிடிக்கும். எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். ஒரு படம் பார்த்து அழுது ஒரு சொட்டுக் கண்ணீர் விடலைன்னா படம் பார்த்த மாதிரியே இருக்காது என்பார். நான் இதற்கு நேரெதிர். ஒரு படம் பார்த்து விழுந்து விழுந்து சிரிக்கவில்லை என்றால் படம் பார்த்த மாதிரியே இருக்காது.''



ஒரு பெண் தயாரிப்பாளராக என்ன உணர்கிறீர்கள்?

''எல்லா பெண் தொழில் அதிபர்களும் சந்திக்கும் பிரச்னைகள் எனக்கும் இருக்கின்றன. தாண்டிச் செல்ல வேண்டிய தடைகள், யதார்த்தமான பிரச்னைகள் எனக்கும் வரும். ஒரு நாள் படப்பிடிப்புக்குப் போகிறோம். மழை வருகிறது. அன்று படப்பிடிப்பு நடத்த முடியாது. திரும்பி வரவேண்டும். நஷ்டம்தான். மறுநாள் போய்தான் எடுக்க வேண்டும். இது தவிர்க்க முடியாதது.''

ஹீரோயினாக நடிக்கலாமே?

''ஸார், என் உயரம் எனக்குத் தெரியும். என்னால, மரத்தைச் சுத்தி வந்து டூயட் பாட முடியாது. கிளிசரின் போட்டுக்கிட்டு அழ முடியாது. நான் ரொமான்டிக் கேர்ள்ங்கறதை விட, பிஸினஸ் கேர்ள். அந்த மைண்ட் செட் எனக்கு ஒத்து வரும். கிரியேட்டிவ்வா திங்க் பண்ணி செயல்படுத்தணும். 70mmக்குள்ள அடைஞ்சு போக ஆசை துளியும் இல்லை'' தீர்க்கமாகப் பேசுகிறார்.

- முத்துராமலிங்கம்

வலைப்பூக்களின் சின்னத்தம்பி!

சென்ற வாரம், அமெரிக்காவில் உள்ள சான் பிரான்சிஸ்கோ நகரில் வெப் 2.0 மாநாடு நடந்தது. புதிய தலைமுறை இணைய சேவைகள் பற்றி நடந்த அந்த மாநாட்டில், சூப்பர் ஸ்டார் யார் தெரியுமோ? டிவிட்டர் என்ற மைக்ரோ பிளாகிங் சேவைதான்.

சரி, டிவிட்டர் என்கிறேன்? மைக்ரோ பிளாகிங் என்கிறேன்? இதெல்லாம் என்ன? யோசிக்கிறீர்களா? டிவிட்டர் (http://www.twitter.com) என்பது 2006ல் பிறந்த புதிய இணையக் குழந்தை.

பொதுவாக இணையத்தில் வலைத்தளம் அமைத்துக் கொண்டு செய்திகளை, கட்டுரைகளை, கருத்துகளை பயனர்களுக்குத் தருவார்கள். இது போன்ற சேவைகளைத் தோராயமாக வெப் 1.0 என்று சொல்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இதில் ஓர் முக்கிய முன்னேற்றம், பிளாகிங் எனப்படும் வலைப்பூக்கள். இவை ஒரு தனிநபரின் தனிப் பத்திரிகை என்றே சொல்லலாம். அதில் உங்களுக்குப் பிடித்த செய்திகளை எழுதி, வாசகர்களுக்குப் படிக்கக் கொடுத்து, புகழ் பெறலாம்.

2000 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் புகழ் பெறத் தொடங்கிய வலைப்பூக்கள்,மெல்ல வளர்ந்து இன்று மாற்று மீடியாவாகவே உருவாகிவிட்டன.

வலைப் பூக்களின் சின்னத் தம்பி டிவிட்டர். இதை மைக்ரோ பிளாகிங் என்கிறார்கள். வலைப் பூக்களில் எத்தனை பக்கங்கள் வேண்டுமானாலும் எழுதலாம்; டிவிட்டரில் எல்லாவற்றையும் 140 எழுத்துக்களுக்குள் சொல்லவேண்டும். இதை இணையத்தில் இருந்தும், செல்ஃபோனில் இருந்தும் எழுதலாம். படிப்பதும் அப்படியே...

இதன் சிறப்பே, வேகம்தான். அதாவது இதுநாள் வரை, நாம் செய்து முடித்த காரியம் குறித்து கடந்த காலத்தில் எழுதி வந்தோம். இனி டிவிட்டரில் இப்போது நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று உடனுக்குடன் எழுத முடியும். பிளாகுக்கு தம்பி என்றால் எஸ்.எம்.எஸ்ஸுக்கு அண்ணன் இந்த டிவிட்டர்!





ஈரானில் சில மாதங்களுக்கு முன்பு தேர்தல் நடந்தபோது, ஊழல்கள், முறைகேடுகள் எதுவும் சர்வதேச சமூகத்துக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவே, ஊடகங்கள் தடைசெய்யப்பட்டிருந்தன. ஆனால், டிவிட்டரை, அரசாலும் ஏதும் செய்ய முடியவில்லை. ஈரானுக்குள் உட்கார்ந்து, நிலைமையின் அவலத்தைப் பார்த்துக்கொண்டு இருந்த இளைஞர்கள், உடனுக்குடன் தகவல்களை டிவிட்டரில்



அடிக்க, உலகம் ஈரானின் தேர்தல் ஊழலைப் பார்த்துக்கொண்டே இருந்தது!

இங்கிலாந்தில் 'திகார்டியன்' நாளிதழ் ஒரு புலனாய்வு செய்தி அறிக்கையை வெளியிடவிடாமல் நீதிமன்றத் தடை விதிக்கப்பட்டது. தடை விதிக்கப்பட்ட செய்தியை வெளியிடவும் தடை பெறப்பட்டது! ஒரு பெரிய மோசடியை அம்பலப்படுத்திய அந்தப் புலனாய்வு குறித்த விவரங்கள் ட்விட்டர் மூலம் கணத்துக்குக் கணம் பரவிவிட, அமெரிக்க நாளிதழ்கள் அந்த அநீதியை எதிர்த்து செய்திகள் வெளியிட ஆரம்பித்தன. பிரிட்டன் சட்டம் அவர்களைக் கட்டுப்படுத்தாதே!

வேறு என்னவெல்லாம் செய்ய முடியும் ட்விட்டர் துணையுடன்?

நீங்கள் இணையத்தில் படித்த நல்ல கட்டுரைகள், செய்திகளின் சுட்டிகளை உங்கள் நண்பர்களுக்குத் தட்டி விடலாம்.

எந்த ஒரு வேலையையும் செய்யும் முன்பு, நண்பர்களிடம் கலந்து ஆலோசிக்கலாம். உதாரணமாக, நீங்கள் மொபைல் ஃபோன் வாங்கப் போகிறீர்கள். உங்கள் எண்ணத்தை மட்டும் டிவிட்டரில் தட்டி விட்டால் போதும். உங்கள் நண்பர்கள், லேட்டஸ்ட் மாடல் என்ன என்பது தொடங்கி தங்களுக்குத் தெரிந்த அத்தனை தகவல்களையும் கொண்டு வந்து கொட்டி விடுவார்கள், இன்ஸ்டன்ட் காபி மாதிரி!

ஒவ்வொரு நாளும் சராசரியாக 23 மில்லியன் (2.3 கோடி) டிவிட்டர் செய்திகள் எழுதப்படுகின்றன. உல்கெங்கும் 54 மில்லியன் (5.4 கோடி) பயனர்கள் டிவிட்டர் சேவையைப் பயன்படுத்துகின்றனர்.

இதன் அடுத்த கட்டம்தான் இன்னும் கவனத்தைக் கவருவதாக இருக்கிறது.

டிவிட்டரில், ஒரு சம்பவம் நடக்கும் போதே, சுடச்சுட அங்கே இருப்பவர்கள் வெளியுலகுக்கு, நண்பர்களுக்கு விவரங்களைத் தெரிவிக்க முடியும். காட்சிப்படுத்தவும் முடியும்: லைவ் ரிலே - விரல் நுனியில்!

சென்னை பெரம்பூரை அடுத்த பெரவள்ளூர் ஹவுஸிங் போர்டு குடியிருப்பில் நுழையும்போது மூன்று கட்-அவுட்கள் பிரமாண்டமாய் கலைவாணியைப் புகழ்ந்தபடி இருக்கின்றன. குடியிருப்புவாசிகளும் விளம்பரதாரர்களும் உறவினர்களும் கட்-அவுட் வைத்துப் பாராட்டும், ஒன்பதாம் வகுப்பு படிக்கும் இந்த டீன்-ஏஜ் பெண்ணின் சாதனைதான் என்ன?

இரண்டாவது மாடியில் சென்று கலைவாணி வீட்டைக் கண்டுபிடித்து கதவைத் தட்டினால், ''வாங்க ஸார் இப்போ வந்துடுவா... உட்காருங்க'' என்று உபசரித்தார்கள். நிறைய மெடல்கள் வீட்டை அர்த்தபுஷ்டியாக்கியபடி இருந்தன. சூழ்ந்துள்ள மௌனத்தைக் கலைக்க விரும்பியவர், ''டான்ஸ் போட்டி ரிகர்சலுக்குப் போயிருக்கா'' என்றார். ''என்னது டான்ஸ் போட்டியா?'' ஆச்சரியம் கேள்வியாய் வந்து விழவும், கலைவாணி நுழையவும் சரியாயிருந்தது.

''வாங்க ஸார்... இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு? கராத்தே சாம்பியன் ஷிப்புக்காக ஐந்தாவது காமன்வெல்த் போட்டியில சவுத் ஆப்பிரிக்கா போய் மூன்று பதக்கங்களை ஜெயிச்சவ, டான்ஸ் ஆடப் போயிட்டாளேன்னுதானே கேக்கறீங்க?''

''ஆமாம்மா''

''டான்ஸுக்கும் கராத்தேக்கும் பெரிய வித்தியாசம் இல்ல. டான்ஸ் ஆடும்போது முகம் புன்னகையோடும் உடம்பு இலகுவாகவும் இருக்கணும். கராத்தேயில முகத்தில கோபமும் உடம்புல இறுக்கமும் இருக்கணும் அவ்வளவுதான்.''

எத்தனை வயசுல கராத்தே கத்துக்க ஆரம்பிச்சீங்க?

''ஏழு வயசுல நானும் என் தம்பியும் மைதானத்தில் பயிற்சி எடுக்கிறவங்களை வேடிக்கை பார்ப்போம். அப்போதான் ஆசை வந்து கராத்தேவில் சேர்ந்தோம். 'தெனாலி' கமலைப் போல எனக்கும் எதைப் பார்த்தாலும் ஒரு பயம். ட்ரெய்ன் சவுண்டுக்குக்கூட காதை மூடிப்பேன். அப்படியிருந்தா பொண்ணுங்க வாழ முடியாதுன்னு தோணுச்சு. பயத்தைப் போக்கிக்கத் தான் நான் கராத்தே சேர்ந்தேன்.''



'தெனாலி' கமலைப் போல எனக்கும் எதைப் பார்த்தாலும் ஒரு பயம்.

ஆடுவேன்...அடிப்பேன்...



என்னென்ன பரிசு வாங்கியிருக்கீங்க?

''2005-ல் நேரு ஸ்டேடியத்தில் முதல் தங்கப் பதக்கம். 2008ல் கொல்கத்தாவில் வெண் கலம், கோயம்புத்தூரில் மாநில அளவில் கோல்டு மெடல் வாங்கியிருக் கேன்.''

என்னென்ன சாப்பிட்டா பலம் வரும்? சவுத் ஆப்பிரிக்காவில் என்ன சாப்பிட்டீங்க?

''சாதாரண சாப்பாடே போதும். ஆப்பிரிக்காவில் நான் எங்கே சாப்பிட்டேன்? அது ஒரு கொடுமை ஸார். சான்ட்விச்ல கூட பன்றிக் கறியும் மாட்டுக் கறியும் வெச்சுத் தர்றாங்க. நான் எதையும் தொடல. வெறும் பழங்களைச் சாப்பிட்டே பரிசை வாங்கினேன்.''

உங்க குரு யார்? எதிர்கால ஆசை என்ன?

''சனிக்கிழமை சுரேஷ் மாஸ்டர். ஞாயிற்றுக் கிழமை மோகன சுந்தரம் மாஸ்டர். மற்ற நாள்ல தனகுமார் மாஸ்டர். இண்டிவிஜுவல் கட்டா (தாக்குதலிலிருந்து சுய மாய்த் தற்காத்துக் கொள் ளும் தடுப்பு முறைகள்) பிரிவில் இப்ப நான் ஜெயிச்சேன். என் தம்பி இறந்துட்டான். அவன் ஆசையை நிறைவேத்தற மாதிரி நான் உலக அளவில் கோல்டு மெடல்களா வாங்கிக் குவிக்கணும்'' என்கிறார் 14 வயது நிரம்பிய இந்த கராத்தே வீராங்கனை.

''யாராவது உன்னை ரோட்ல வம்பு பண்ணா...?'' விளையாட்டாய்க் கேட்டோம்...

''முதல்ல பேச்சு வார்த்தை. சமரசம் இல்லேன்னா சரியான பாடம் தாக்குதல் தான்'' என்கிறார் கொஞ்சம் கோபமாய்!

- அமிர்தா

காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் போர் அடிச்சா போகும் இடங்கள் :

Ist பெஞ்ச் ஸ்டூடண்ட்ஸ் -
லைப்ரரி போகலாம் வாடா

IInd பெஞ்ச் ஸ்டூடண்ட்ஸ் -
டேய்... உங்க வீட்டுக்குப் போகலாம்டா

IIIrd பெஞ்ச் ஸ்டூடண்ட்ஸ் -
மாம்ஸ் படத்துக்குப் போகலாம்டா

கடைசி பெஞ்ச் சிங்கக் குட்டிகள் -
மாப்ள... போர் அடிக்குது
காலேஜுக்குப் போகலாம்டா...



'அழகி'

காட்சி 1: கழுத்தில் நுரையீரலின் கட்-அவுட்டை மாட்டிக்கொண்டு நிற்கிறாள் ஒரு மாணவி. அவர் கையில் சிகரெட் மாதிரி வெள்ளை சாக்பீஸ். ஒவ்வொரு முறை சிகரெட்டை இழுத்து புகைப்பிடிப்பது போல அவர் செய்யும்போதும், பக்கத்தில் உள்ள மாணவர், நுரையீரல் கட் அவுட்டில் கை அகல கறுப்பு ஸ்டிக்கரை ஒட்டுகிறார். சிறிது நேரத்தில் அந்த நுரையீரல் முழுக்க கறுப்பு ஸ்டிக்கர்களால் மறைய, அந்த மாணவி இருமியபடியே கீழே சாய்கிறார். புகைப் பிடிப்பது உடல் நலத்





துக்குக் கேடு; அது நுரையீரலைப் பாதித்து, நாளடைவில் உயிரையே குடித்து விடும். மேலும், புகைப்பவரைவிட, அவர் வெளியிடும் புகையைச் சுவாசிக்கும் மற்றவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்று புகைப்பழக்கத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்கிறார்கள். அடுத்து தாங்கள் சொல்லிக் கொடுத்ததிலிருந்து சில கேள்விகள் கேட்கிறார்கள். சரியாகப் பதிலளித்தால் கையோடு கொண்டு வந்திருக்கும் புத்தகங்களைப் பரிசளிக்கிறார்கள்.

காட்சி 2: இன்னொரு வகுப்பறையில் ஒரு மாணவி பிரம்மாண்டமான பல் தேய்க்கும் பிரஷ்ஷைக் கையில் வைத்துக்கொண்டு நிற்கிறார். பல் தேய்த்து, வாயைச் சுத்தம் செய்வதன் அவசியத்தைச் சொல்லும் எளிய ஆங்கிலப் பாடல் ஒன்றை சக மாணவிகளுடன் சேர்ந்து பாட, வகுப்பில் இருக்கும் மாணவர்களும் சேர்ந்து பாடுகிறார்கள். அடுத்து மடித்து வைத்துள்ள ஓர் அட்டையைப் பிரித்தால் பெரிய சைஸ் பற்கள் பொருத்தப்பட்ட ஒரு வாய் திறக்கிறது. எப்படி பிரஷ்ஷைப் பயன்படுத்திப் பல் துலக்க வேண்டும் என்று செய்முறை விளக்கம் அளிக்கப்படுகிறது. தொடர்ந்து வகுப்பில் இருக்கும் அனைவருக்கும் ஒரு டூத் பேஸ்ட்டும், டூத் பிரஷ்ஷும் இலவசமாக வினியோகிக்கப்படுகிறது. பல் பாதுகாப்பு பற்றிய கேள்விகள் கேட்டு, சரியாகப் பதிலளிப்பவர்களுக்குப் புத்தகப் பரிசு.

இதெல்லாம் எங்கே என்று கேட்கிறீர்களா? பூந்தமல்லியில் இருக்கும் அரசினர் பள்ளியில்தான். இந்த விழிப்புணர்வு வகுப்புகளை நடத்திய கல்லூரி மாணவ, மாணவிகள் கொரியாவைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு உதவியாக உள்ளூர் கல்லூரி மாணவியர். கொரியாவில் பல்வேறு கல்லூரிகளிலும் படிக்கும் சுமார் 300 மாணவ,



என்பது செல்லப் பெயர்!



மாணவி களை ஆண்டுதோறும் சென்னைக்கு அழைத்து வந்து இப்படி சமூக சேவைகளில் ஈடுபடுத்தி வருகிறது ஹூண்டாய் நிறுவனம்.

கொரியாவிலிருந்து வந்திருக்கும் அனைவரும் யூனிஃபார்ம் போல ஒரு பனியனும், மேலே புஷ் கோட்டும் அணிந்து கொண்டிருந்தார்கள். அதில் அவர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. ஹூட்க்கு என்ற மாணவியின் முதுகில் பெரிசாக 'அழகி' என்று தமிழில் எழுதப்பட்டிருந்தது. விவரம் கேட்டால், சங்கோஜமாக, ''ஓ! அல(ழ)கி! அது எனக்கு இந்தப் பள்ளிக்கூடத்துப் பெண்கள் வைத்த செல்லப் பெயர்!'' என்கிறார்.

''தண்ணீர் விஷயத்தில் ரொம்ப ஜாக்கிரதை என்று என் சிநேகிதி எச்சரித்து அனுப்பினாள்; நான் முகம் கழுவக்கூட மினரல் வாட்டர்தான்'' என்றார் லி யூன் என்ற மாணவி.

மாலை நேரம் இசை நடன நிகழ்ச்சிகளில், கூடுதல் அட்ராக்ஷன் மேஜிக். ''எங்கள் ஊரின் புகழ் பெற்ற மேஜிக் நிபுணரிடம் நான் மேஜிக் கற்றுக் கொண்டேன்'' என்று சொன்னவரிடம், ''ஒன்று செய்து காட்டுங்களேன்'' என்றோம். தன் பாக்கெட்டிலிருந்து ஒரு நாணயத்தை எடுத்து வலது உள்ளங்கையில் வைத்துக் கையை மூடி விட்டு, கொரிய மொழியில் ''சூ! மந்திரக்காளி!'' மாதிரி ஏதோ சொல்லி, திறந்திருக்கும் இடது கையை மூடிக் கொள்கிறார். வலது கையைத் திறந்தால் காசைக் காணோம்; இடது கையைத் திறந்தால் உள்ளே உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

''இதென்ன பிரமாதம்... சென்னை ரங்கநாதன் தெருப் பக்கம் கூட்டத்தில் நடந்து போனால், நிமிஷமாக பாக்கெட்டில் கைவிட்டு, பர்ஸ்களை மாயமாக மறையச் செய்யும் மேஜிசியன்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்'' என்று சொல்லி விடைபெற்றோம்.

- கௌதம் ராம்

பக்கத்துவீட்டுப் பையன்போல படு இயல்பாகப் பேசும் மியூஸிக் டைரக்டர் ஜி.வி.பிரகாஷ், பார்ப்பதற்கு காலேஜ் ஃபர்ஸ்ட் இயர் ஸ்டூடண்ட் போல இருக்கிறார். 'வெயில்' படத்தில் இவரது இசை மீது விழுந்த வெளிச்சம், இருபத்தொரு வயதுக்குள் ரஜினியின் 'குசேலன்' படத்துக்கு இசையமைக்க வைத்தது. அந்தக் கனத்தையெல்லாம் மண்டைக்குள் ஏற்றிக் கொள்ளாமல் மென்மையாகப் பேசுகிறார்.

''சின்ன வயசுலயிருந்து சுயமதிப்பீடு செய்துகொள்ள என் பேரண்ட்ஸ் எனக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். நான் கம்போஸ் பண்ணும் பாடல்களை ஆடியன்ஸ் நிலையில் இருந்து பார்ப்பதால் என் நிறை குறைகளை நானே தெரிந்துகொள்ள முடிகிறது. என்னுடைய லட்சியங்கள் மிகப் பெரியவை. பயணத்தை இப்போதுதான் தொடங்கியிருக்கிறேன்.



நான் படித்த செட்டி நாடு வித்யாஸ்ரம் பள்ளி என் இசைத் திறமையை சரியாக வெளிக்கொணர்ந்த இடம். ஏழாவது படிக்கும் வரை கிரிக்கெட் வீரனாக வருவதை லட்சியமாகக் கொண்டிருந்த எனக்கு, பள்ளியின் ஆண்டுவிழா புதிய பாதையை ஏற்படுத்தித் தந்தது. எப்போதும் கீ-போர்ட் வாசிக்கும் மாணவன் அன்று வரவில்லை. ஆசிரியர் என்னை வாசிக்கச் சொன்னார். அந்த வாசிப்புக்குப் பரிசும் கிடைத்தது. அந்த உற்சாகம்தான் இன்றைய வெற்றிக்கெல்லாம் அடிப்படை.

என் அப்பா வெங்கடேஷ் பிஸினஸ் மேன் என்றாலும் நடுத்தரக் குடும்பம்தான் எங்களுடையது. எனக்குத் தேவைப்படும் மியூசிக் இன்ஸ்ட்ருமென்ட்ஸையெல்லாம் லோன் போட்டு, கஷ்டப்பட்டுத்தான் வாங்கித் தருவார். வெற்றிக்காக ஒருவன் போராடும்போது, அவன் குடும்பமும் சப்போர்ட்டிவாக இருந்தால், வெற்றி கிடைப்பது உறுதி.

பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே எனது மாமா ஏ.ஆர்.ரஹ்மானிடம் கீ-போர்ட் ப்ரோக்ராமராகச் சேர்ந்தேன். காலேஜிலோ, யுனிவர்சிட்டியிலோ சேர்ந்திருந்தால் இசை பற்றி இவ்வளவு விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்க முடியாது. இசையையும் தாண்டி, தான் மேற்கொள்ளும் பணியில் அபரிமிதமான ஈடுபாடு மாமாவிடம் இருக்கும். ஆஸ்காரை வென்றாலும், 'எல்லா புகழும் இறைவனுக்கே' என்று சொல்லும் அவருடைய பணிவை நானும் கற்றுக் கொண்டேன். எனக்கு இந்தச் சிறிய வயதிலேயே கிடைத்த புகழையும் இறைவனின் திருவடிகளிலேயே சமர்ப்பிக்கிறேன்.

ஜேக்கப்ஜான், நித்தியானந்தம், தாஷ்டேனியல் போன்ற ஜாம்பவான்கள் எனக்கு இசை குருவாக இருந்திருக்கிறார்கள்'' என்று சொல்லும் ஜி.வி.பிரகாஷின் பேச்சு, இப்போது பணிபுரியும் படங்கள் குறித்தும்

டைரக்டர்கள் குறித்தும் திரும்புகிறது!

''இதுவரை நான் வொர்க் செய்த டைரக்டர்களில் செல்வ ராகவன் வித்தியாசமானவர்.



"காதலில் உருகியிருக்கிறேன்!" - ஜி.வி.பிரகாஷ்

கர்வமும், உறுதியும் இவரது படங்களில் இருக்கும். 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டை தத்ரூப மாகக் காட்டப் போகிறார். அந்த நூற்றாண்டுக்கு ஏற்றாற்போல 'பெம்மானே' என்ற பாடலுக்கு இசையமைத்துள்ளேன். இந்தப் பாடலைப் பழம்பெரும் பாடகர் பி.பி. ஸ்ரீனிவாஸ் பாடியுள்ளார்'' என்கிறார்.

'குசேலன்' எதிர்பார்த்த அளவு வெற்றி யடையவில்லையே?

''என்னைப் போன்ற பொடியனுக்கு ரஜினி ஸார் வாய்ப்பளித்ததையே பெருமையாக நினைக்கிறேன். அதற்காக அவருக்கும் வாசு ஸாருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ரஜினி ஸாருக்கு ஹிட் கொடுக்க முடியவில்லையென்றாலும் அவர் மருமகன் தனுஷுக்கு 'பொல்லாதவன்' ஹிட் கொடுத்ததை நினைத்து சந்தோஷப்படுகிறேன்.''

ரீமிக்ஸ் பாடல்கள்?

''ரீமிக்ஸ் பாடல்களில் எனக்கு உடன்பாடில்லை. ஒரிஜினல்தான் என்றைக்கும் நிலைக்கும். ஆனால் முதன்முறையாக 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் செல்வ ராகவன் கேட்டுக் கொண்டதற்காக 'அதோ அந்தப் பறவை போல வாழவேண்டும்' பாடலை ரீமிக்ஸ் செய்துள்ளேன். 'மதராஸ் பட்டணம்' எனும் பீரியட் படத்தில் எம்.எஸ்.விஸ்வநாதனையும், நடிகர் தனுஷையும் இணைந்து பாட வைத்துள்ளேன். வெவ்வேறு தலைமுறைக் கலைஞர்களை இணைத்துப் பார்த்த மகிழ்ச்சி எனக்கு.''

உருகுதே... மருகுதே பாடலுக்கு இசையமைத்தீர்களே! நீங்கள் யாரைப் பார்த்து உருகினீர்கள்?

''காதல் எல்லோருக்கும் வரக்கூடியது. எங்களைப் போன்ற கலைஞர்களுக்குக் காதல் உணர்வு அதீதமாக இருந்தால்தான் நல்ல படைப்புகள் தர முடியும். என்னுடைய கடந்த காலத்தில் நானும் காதலில் உருகியிருக்கிறேன். அந்த நினைவுகளை எனக்குள்ளேயே வைத்திருக்க விரும்புகிறேன்.''

உங்களையும் பாடகி ஒருவரையும் இணைத்துப் பேசப்பட்டதே?

''இப்போதுதான் நானும், அவங்களும் தேவையற்ற வதந்திகளிலிருந்து மீண்டு வந்திருக்கிறோம். தொழிலில் கவனம் செலுத்தலாமே!''

- ராகவ்குமார்

படங்கள்: **ஸ்ரீஹரி**

"நெட் சர்ஃபிங், வீக் எண்டில் ஷாப்பிங், சினிமா, பிட்ஸா ஹட்டில் ஃப்ரெண்ட்ஸோட மீட் - இப்படித்தான் இந்தக் கால இளைஞர்கள்னு ஒரு ஸ்கெட்ச் இருக்கு. ஆனா எங்களுக்கும் சமூக அக்கறை இருக்கு" என அனல் பறக்க கரண்ட் பாலிடிக்ஸ் பொஸிஷனைப் பேச வந்தனர் அன்னை வேளாங்கண்ணி கல்லூரிக் கண்மணிகள். அவர்களின் எண்ண ஓட்டம்:



சதீஷ்குமார் (பி.ஐ.எஸ்.எம், இரண்டாமாண்டு)

இலங்கையில் ஆயிரமாயிரம் மக்கள் இறந்திருக்கிறார்கள். தேர்தலுக்காக அவர்களின் மரணத்தை முதலீடு செய்திருக்கிறார்கள். மனிதநேயமற்ற இந்த அரசியல் சூழலில் நாம் வாழ்ந்துகொண்டிருப்பது அவமானமாக இருக்கிறது. ஒவ்வொரு கல்லூரியிலும் அரசியல் பிரச்னையைப் பேசி விவாதிக்க ஒரு குழு வேண்டும். கட்சி பேதமின்றி உலகின் எந்தப் பகுதியில் அமைதியின்மை இருந்தாலும் அமைதிக்குத் தோள் கொடுக்க தமிழக இளைஞர்கள் முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும்!

ஜா.மார்க்கிரெட் (பி.பி.ஏ. முதலாமாண்டு):

அரசியல்வாதிகள் மக்களுக்குக் கொஞ்சமாகவும் தங்களுக்கு நிறையவும் செஞ்சிக்கிறாங்கன்னு சொல்லலாம். பிரச்னைகளைப் பேசுவது மட்டும் நம் வேலையில்லை. இந்தப் பிரச்னைகளுக்கு எல்லாம் தீர்வாக இளைஞர்களான நாம் என்ன செய்யலாம் என்று யோசிக்கணும்.





மூ.ரூசோ: (பி.சி.எஸ். மூன்றாமாண்டு)

யோசிக்கணும்... யோசிக்கணும்னு சொன்னா எப்படி? ஐ.டி படிச்சவங்க அரசியலுக்கு வருவாங்களா...? ஆர்ட்ஸ் படிக்கிற நாமதான் இந்த அரசியல் சாக்கடையை வாரணும். முதல்ல எல்லாத் துறையிலும் உள்ள அதிகாரிகள் நேர்மையாக நடந்து கொண்டால்தான் இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வு கிடைக்கும். அரசியல் சார்ந்து அதிகாரிகள் செயல்படாமல், நடுநிலையோடு தங்கள் அதிகார வரம்பைத் தெரிந்துகொண்டு செயல்பட்டாலே எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வு வந்துவிடும்.

ஐ.டி. ஸ்டூடேண்ட்டா... ஆர்ட் ஸ்டூடேண்ட்டா..?

சு.ஹெலன் (பி.பி.ஏ. மூன்றாமாண்டு): அரசியல்வாதிகள் வோட்டு வேண்டும் என்றுதான் பார்க்கிறார்கள். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சம்கூட கிடையாது.





பாலு, (பி.காம், மூன்றாமாண்டு) எந்தச் செயல்பாட்டுக்கும் வேகமும் விவேகமும் ஃபிஃப்டி-ஃபிஃப்டி இருக்கணும். வேகத்தை இளைஞர்களிடமும் விவேகத்தை முதியவர்களிடமும் பெற ஒரு நல்ல வரைமுறை வேணும்.

வி.துரைமுருகன் (பி.எஸ்சி, இரண்டாமாண்டு): மற்றவர்களைக் குற்றம் சொல்வதும், தீர்வை மற்றவர்களிடம் திணிப்பதும் சமூகத்தில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தாது. நல்ல மாற்றம் வரவேண்டுமென்றால் வீட்டிலேயே அரசியல் பத்திப் பேசணும். 33 சதவிகிதத்துக்கு நம்ம வீடே சாட்சியமா இருக்கணும்.



க.ஜானகிராமன் (பி.சி.எஸ்.மூன்றாமாண்டு): ஏதாவது ஒரு அலை தேர்தலின் வெற்றியைத் தீர்மானிக்கும். பெரும்பாலும் அரசியல் தலைவர்களின் மரணமாக இருக்கும். சமீபகாலமாக அந்தப் போக்கு மாறியிருக்கு. ஈழத்து மக்களின் மரணம் தமிழகத் தேர்தலைத் தீர்மானிக்கவில்லை. ஈழப் பிரச்னை தமிழகத்தில் கடைக்கோடி மக்களுக்குப் போய் சேர்ந்ததா, மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதே குழப்பமாக உள்ளது.



தொகுப்பு: **ராஜேஸ்வரி**

(சீரியஸா பேசி முடிச்சுட்டு சில்லுன்னு இந்த ஸ்டூடண்ட்ஸ் தேர்ந்தெடுத்த ஜோக்ஸ்தான் - 44,45 ம் பக்கங்களில்...)

அஷ்டாவதானியாக்கும் ஆறு!

மிஸ்டர் & மிஸ் மேல்மாடி!

சீக்ரெட் ஆ..ப் ப்ரெய்ன்



பெண் அஷ்டாவதானியாக இருப்பதற்கு அவளது ஆறாவது அறிவே காரணம். அப்படின்னா ஆண்களுக்கு அந்த ஆறாவது அறிவு இல்லையா என்றால், இருக்கிறது; ஆனால் பெண்ணுக்குக் கொஞ்சம் அது அதிகம்.

ஆதி காலம் தொட்டு பெண்ணுக்கு ஏதோ அபூர்வ சக்தி இருப்பது போலவும், முக்காலத்தையும் உணரும் உணர்வு இருப்பது போலவும் நம்பப்பட்டு வந்தாள். ஆணாதிக்க சமூகத்தில் இந்த ஸ்பெஷல் பவரே அவளுக்கு எமனாய் இருந்தது. ஆமாம், 18ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரை இதனாலேயே பெண்கள் கொல்லப்பட்டு வந்தார்கள். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

உடலில் ஏற்படும் சிறு அசைவுகள், குரலில் ஏற்படும் சிறு மாற்றம், பிட்ச்சில் ஏற்படும் மாற்றம் முதல் விலங்குகளின் உணர்வுகள் மற்றும் அதன் அடுத்த நடவடிக்கைகளையும் அவளால் எளிதில் கணிக்க முடிந்தது. காடுகளிலும் குகைகளிலும் குழந்தைகளை வைத்துக்கொண்டு பாதுகாத்தவளுக்கு அவர்களை நெருங்கும் விலங்குகளின் மன நிலையை எளிதில் அறிய முடிந்தது.



அது மட்டுமா? சத்தம் வரும் திசையை ஆணை விட துல்லியமாக அறிய முடிந்தது.

இன்று... வீட்டின் ஏதாவது ஒரு குழாயிலிருந்து தண்ணீர் சொட்டினாலும் கண்டுபிடித்து மூடுபவள் அவளாகத்தான் இருக்கிறாள். தற்காப்புக்காக, பெற்ற குழந்தையைப் பாதுகாப்பதற்காக கூர்மைப் பட்ட நுண்ணுணர்வுகள், இன்று வேறு பரிமாணங்களில் நிலை பெற்றுள்ளன.

வாசனை அறியும் திறனும் அவளுக்கே அதிகம். விலங்குகள், ஆண், பெண் என்று வாசனைகளைப் பிரித்தறியும் அவளது திறன்தான் இன்றும் அடுத்த தெருவில் அடிப்பிடிக்கும் பதார்த்தத்தையும் கண்டறியப் பயன்படுகிறது.

சுவை கண்டுபிடிப்பதும் அவளுக்குக் கை வந்த கலை. உப்பு, இனிப்பு, புளிப்பு என்று பல்வேறு சுவைகளையும் எளிதில் பிரித்தறிவாள். காய்கள், பழங்கள், கிழங்குகள் என்று எல்லாவற்றையும் சுவை பார்த்துப் பிரித்தறிந்து குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தவள் ஆயிற்றே.



அது மட்டுமின்றி அவளது 'ஓவுலேஷன்' எனப்படும் கருமுட்டை வெளிவரும் காலத்தில் இத்திறன்கள் எல்லாம் இன்னும் அதிகரிப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதாவது, ஒரு குழந்தை உருவானால், மூளையும் உடலும் அதற்குக் கூடுதல் ஆயத்தம் பெறுகின்றன!

இப்படி அவளது ஒவ்வொரு புலனும் அலர்ட்டாக ஓவர் வொர்க் செய்வதால் அவளுக்கு ஓவர் ட்யூட்டியும் பழக்கப்பட்ட கலைதான்!

17 வயது முடிந்த ஒரு டீன் ஏஜ் பெண், பக்குவமடைந்த பெண்ணுக்குரிய அனைத்துத் தகுதிகளும் அடைந்து விடுகிறாள். ஆனால் அதே வயதுப் பையன் இன்னும் சிறுபிள்ளைத்தனமாக விளையாட்டுப் பிள்ளையாகத்தான் இருப்பான். வளர்ந்த பிறகும் ஒரு சமயத்தில் அவனால் ஒன்றைத்தான் செய்ய முடியும்.

''ஆனால், சில விஷயங்கள்ல அவங்க அப்படி இல்லைங்க'' என்ற பெண்களின் குரல் கேட்கிறது.

''அம்மா, அப்பா வந்தாச்சு'' ராகுல் ஓடி வந்தான்.


''எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்தாரு? வழக்கமா இந்த சீரியல் முடிஞ்சு அரை மணி நேரம் கழிச்சுதானே வருவாரு.''

அவன் விரும்பிப் பார்க்கும் சீரியல்

விறுவிறுப்பாய்ப் போய்க் கொண்டிருந்தது.

வழக்கம்போல உள்ளே நுழைந்த ஸ்ரீதர் ரிமோட்டைக் கையில் எடுத்துக் கொண்டான். வில்லன் காலில் விழுந்து கெஞ்சும் ஹீரோயின் போல, ''இப்போ முடிஞ்சுடும்'' என்று கெஞ்சியவளைக் கண்டுகொள்ளாமல் வரிசையாய் சேனல்களை மாற்றத் தொடங்கினான்.

''உருப்படியா ஒரு சேனலைப் பாக்கறீங்களா? ஒரு சீரியல் பாக்கக்கூட கொடுப்பினை இல்ல இந்த வீட்டுல'' உதறிக்கொண்டு எழுந்து சென்றாள்.



மூளையை வலது பிரிவு, இடது பிரிவு என இரண்டாகப் பிரிக்கின்றனர். அதாவது வலது அறைக் கோளம் மற்றும் இடது அறைக்கோளம். உடலின் வலது பகுதியை இடது அறைக் கோளமும், இடது பகுதியை வலது அறைக்கோளமும் கட்டுப்படுத்துகின்றன. இவை உருவ அமைப்பில் ஒன்று போலிருந்தாலும் அவற்றின் வேலைகள் வேறு வேறாகத்தானிருக்கும்.

ஏன் ஆண் டிவி சேனலை மாற்றிக் கொண்டேயிருக்கிறான்?

திரும்பவும் கற்கால மனிதன் நடத்தையைத்தான் இங்கு நினைவு கூர வேண்டும்.

வேட்டை முடிந்து திரும்பியவன் நெருப்பு மூட்டி வெறித்துப் பார்த்தபடி மௌனமாக அமர்ந்திருப்பான் என்று பார்த்தோம். இலக்கின்றி வெறித்துப் பார்த்தபடி அமைதியாக உட்கார்ந்திருப்பது அவனுக்கு மிகவும் பிடித்தமான விஷயம்!

ஒவ்வொரு புலனும் அலர்ட்டாக ஓவர் வொர்க் செய்வதால், ஓவர் ட்யூட்டியும் பெண்ணுக்குக் கைவந்த கலைதான்!

அது போல கோபம், அழுகை, நெகிழ்ச்சி என்று பல்வேறு உணர்ச்சிகளைத் தூண்டும் காட்சிகளைப் பார்ப்பதில் ஆர்வம் கொள்ள மாட்டார்கள். ஏன்? அவர்களது மூளையின் அமைப்பு அப்படி... வீட்டின் வெளியே சந்தித்த பிரச்னைகளுக்கு விடை தேட முயல்வான். அதனால்தான் ஒவ்வொரு சேனலாக மாற்றி அந்தக் கதையின் அடிநாதத்தை அறிய முயல்வார்கள். வெட்டு ஒன்று துண்டு ரெண்டாக இப்படி இருந்தால் இப்படி இருக்கலாம் என்று முடித்து விடுவார்கள். இல்லையென்றால் ஒரேயடியாக எல்லா நியூஸ் சேனல்களையும் மாற்றிக் கொண்டே இருப்பார்கள்.

இது போன்ற உணர்ச்சிகளுக்கு இடங்கொடாத நியூஸ் சேனலைப் பார்க்கும் ஆண்களின் எண்ணிக்கை பெண்களை விட ஏழு மடங்கு அதிகமாம்.

உணர்வுபூர்வமாக ஒரு விஷயத்தை அணுகுதல் பெண்ணுக்கு முக்கியம். கோபம், தாபம், வெறுப்பு, சிணுங்கல், சந்தோஷம், அழுகை என்று நவரசங்களையும் தான் அனுபவிப்பதல்லாமல் அதனைத் திரையிலும் அணு அணுவாய் ரசிக்கும் பொறுமை அவளுக்கு உண்டு.

ஒரே நேரத்தில் பல வேலைகள் செய்யும் அஷ்டாவதானி அல்லவா?

''ஏன் எங்க தலையவே உருட்டறீங்க?''ன்னு ஆண்கள் புலம்புவது கேட்குது. ஒட்டுமொத்தமாக எல்லா ஆண்களும் பெண்களிடம் சுட்டிக்காட்டும் ஒரு குணத்தைப் பற்றி அடுத்த வாரம் பார்க்கலாம்.

(அலசுவோம்)

எழுத்தாக்கம்: **லக்ஷ்மி மோகன்**

அருள்வாக்கு

ரிலாக்ஸ்



அறிவு வளர்ச்சிக்கு உதவும் டாகு மெண்டரி தவிர சினிமா அடியோடு வேண்டாம்; பாலிடிக்ஸ் மாதிரித்தான் அதுவும் என்பதே என் அபிப்பிராயம். தற்போதைய சினிமாக்களைப் பற்றி நான் கேள்விப்படுவதிலிருந்து வேறுவிதமாக என்னால் அபிப்ராயப்பட முடியவில்லை. ஆனாலும், எவரானாலும் மனோரஞ்சகமாகக் கொஞ்சம் பொழுதுபோக்கு இல்லாவிட்டால், வாழ்க்கையே இறுக்கிப் புழுங்குகிற மாதிரிதான் ஆகிவிடும். குறிப்பாக இந்தச் சுதந்திர யுகத்தில் இந்த பாயிண்டையும் கவனிக்காமலிருக்க முடியவில்லை. அதனால் என்னுடைய அபிப்ராயக் கண்டிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொடுத்து, எப்போதாவது ஒரு சமயம், இருப்பதற்குள் தரக் குறைவாக இல்லாதது என்று பெயர் வாங்கிய படங்களுக்குப் போவதென்று மாணவர்கள் வைத்துக் கொள்ளலாம் என்று 'கன்ஸெஷன்' கொடுக்கிறேன்.

சினிமாவுக்குச் சொன்னதேதான் மற்ற கலை நிகழ்ச்சிகளுக்கும். ஆடல்-பாடல், நாடகம் எந்தக் காலத்திலும் இருந்திருப்பதால், வரம்புக்கு உட்பட்டு அவற்றை மாணவர்களும் பார்த்துவிட்டு, கேட்டுவிட்டுப் போகட்டும் என்று ரொம்பவும் விட்டுக் கொடுத்தே சொல்கிறேன்! இதிலே ஆபத்து என்ன என்றால், கொஞ்சம் அதில் பிரவேசித்தாலே அது போதைப் பொருள் மாதிரி மேலே மேலே இழுத்துக் கொண்டு போவதுதான்.

போதைப் பொருள் என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டேன். இப்படி காபி, சிகரெட்டில் ஆரம்பித்துப் பல இருக்கின்றன. இவை மாணவர்களுக்கு ஒரு நாளும் கூடவே கூடாது. பொது சேவை, சினிமா ஆகியவற்றில் நான் கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் சொன்னதுமாதிரி இங்கே 'ரிலாக்ஸ்' பண்ணுவதற்குக் கொஞ்சங்கூட இடமில்லை. நல்லதற்கே இல்லாத காபி, சிகரெட், இன்னும் நான் வாய்விட்டுச் சொல்ல ப்ரியப்படாத போதை வஸ்துக்கள் ஆகியவற்றின் பக்கமே மாணவர்கள் போகக்கூடாது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



கலக்கல் பாய்ஸ்...

உடையழகு... நடையழகு...

"இவங்களைப் பாக்கலேன்னாலும் இம்சை, பாத்துட்டா அதவிட மகா இம்சை," என பெண்களைப் பார்த்துப் பார்த்து உருகும் யூத்தான இளைஞர்களைப் பிடித்து, "பெண்களிடம் உங்களுக்குப் பிடித்த சில ஃபேஷன், ஸ்டைல் சமாசாரங்கள்?" என்றோம். சும்மா சொல்லக்கூடாது... உளறித் தள்ளிட்டாங்க. (பெண்கள் மேட்டர் என்றாலே உளறல்தான். ஸ்டெடியாக எங்க இருக்க விடறாங்க என்ற சமாளிப்ஸ் வேற)

சென்ட்: என்ன பர்ஃப்யூம், டியோ போடறாங்கன்னு தெரியல்ல. நம்மைக் கடக்கும்போதெல்லாம் சொக்கிப் போயிடறோம்.

ஜீன்ஸ் - குர்தீ: ஜீன்ஸ் போட்டு மேல வைப்ரண்ட் கலர்ஸ்ல குர்தீ போட்டுட்டு இண்டோ-வெஸ்டர்ன் கலவையில ஸ்டைல் நடைபோடும் கேர்ள்ஸை ரொம்பப் பிடிச்சிருக்கு.

ஹேண்ட் பேக்: பிக் சைஸ் ஹேண்ட் பேக் எடுத்துக்கிட்டு இவங்க பண்ற அலப்பறைக்கு நாங்க அடிமை. கலர் கலரா எப்படித்தான் இவ்வளவு பேக் கலெக்ஷன்ஸ் வச்சிருக்காங்க?

காஜல்: கண்ணு வழிய காஜல், மஸ்காரா போட்டு ஸ்டைல் பண்ற பேப்ஸை ரொம்பவே பிடிச்சிருக்கு.

கால்கள்: பளபளன்னு கால்கள் டாலடிக்கும். அதில டிரெண்டியா நெய்ல் பாலீஷ். எப்படி டயம் கிடைச்சு இதெல்லாம் செஞ்சுக்கறாங்கன்னு தெரியல்லே. கால்கள்ல ஒற்றையா கயிறு மாட்டியிருப்பாங்க. ஹீல்லைவிட ஃப்ளிப் ஃப்ளாப் ஸ்லிப்பர்ஸ்தான் அதிகமா போட்டு அலையறாங்க. கம்ஃபர்ட் + பேஷன்.

ஆக்ஸஸரீஸ்: இவங்க என்ன பண்ணினாலும் அழகுதான். தலை முடியை அப்படியே அள்ளி காஷுவலா ஒரு க்ளிப் போட்டுட்டு அலட்சியமா நடப்பாங்க பாருங்க... ப்யூட்டி. கழுத்தில மெல்லிய செயின். அதுல ரொம்ப குட்டி குட்டியா லாக்கெட்ஸ். காதுல மினி சைஸ் தோடுகள், ராட்சஸ சைஸ் தோடுகள் கூடப் போடுவாங்க! வளையல்கள் கலர் கலரா, பல வித சைஸ்களில் அடுக்கிட்டுத் திரிவாங்க. ப்யூட்டிஃபுலுக்கு எதுக்கு இத்தனை ப்யூட்டி சமாசாரம்?

ஸ்மைல்: மிகப் பெரிய ஆக்ஸஸரிஸ்! எங்களைப் பாத்து



அவ்வப்போது அவங்க பெரிய மனசு பண்ணிக் கொடுக்கும் ஒரு போனஸ்!

ஸாரீஸ்: என்னிக்காவது எதனக டே, காலேஜ் டே, தீம் பார்ட்டின்னு புடைவை கட்டுவாங்க. நாங்க அங்கேயே சரண்டர்!

ஸ்டைல்: இவங்க பேசி, நடந்து, ஓடின்னு என்ன பண்ணினாலும் ஸ்டைல்தான்! சாப்பிடும்போது க்ளீனா, சிந்தாமல், லாகவமாகச் சாப்பிடறாங்க. ஆர்க்யூ பண்ணும் போதுகூட ஸ்டைல்தான்!

நெக்ஸ்ட் கேர்ள்ஸ் டீம். இவங்களும் பாய்ஸை நிறையவே பாக்கறாங்க என்பது புரிந்தது. ஆண்களிடம் பிடித்தது எனக் கேட்டதுதான் தாமதம், லிஸ்ட் போட்டுக் கொடுத்துட்டாங்க...



ஜீன்ஸ்: பெஸ்ட், ரஃப் அண்ட் டஃப் லுக் ஜீன்ஸில்தான். காஷுவல் லுக். ப்ளூ ஜீன்ஸ், வொயிட் டீஷர்ட் போட்டால் வெரி ஸ்மார்ட். வீ லவ் ஜீன்ஸ்...



லெதர் ஜாக்கெட்: ஜீன்ஸுடன் மாட்ச் பண்ணும் லெதர் ஜாக்கெட்ஸ்! டார்க் ப்ரௌன், நேவி ப்ளூ, ப்ளாக் கலர்களில் போட்டு ஸ்டைலாக பைக்கில் திரியும் பாய்ஸை ரொம்பவே பிடிக்கும்.

சூட்: க்ளாஸி, கான்ஃபிடன்ட், ஸ்மார்ட், ஸ்டைல் எல்லாமே சூட் போட்டால் தன்னால வரும். அடிக்கடி போடுங்கப்பா. கீழே ஜீன்ஸ், மேலே ப்ளேஸர்ஸ் போடும் பாய்ஸையும் ஹய்யய்யோ பிடிச்சிருக்கு.

ஸ்கார்ஃப்ஸ்: கழுத்தைச் சுற்றி ஸ்டைலாக... ட்ரெண்டியா ஸ்கார்ஃப் போடும் ஆண்களுக்கு எக்ஸ்ட்ரா ஜே!

ஜுவல்லரி: சிம்பிளா போட்டாத்தான் க்ளாஸியா இருக்கும். விரல்களில் சில்வர் பாண்ட், மணிக்கட்டில் கலர் கலர் கயிறுகள், காதில் சிறிய கடுக்கன், கழுத்தில் கயிறு, கூடவே ஸ்டைலிஷ் லாக்கெட்ஸ் (மிரட்டலாக இருக்கணும்.)

சென்ஸ் ஆஃப் ஹ்யூமர்: கடி ஜோக்ஸ், ஒன் லைன் ஜோக்ஸ் சொல்ற பாய்ஸைக் கண்டா கேர்ள்ஸுக்கு ரொம்பப் பிடிக்கும்.

கான்ஃபிடன்ட்: கான்ஃபிடன்டா பேசற, நடக்கிற பாய்ஸை நாங்க ரெஸ்பெக்ட் பண்றோம்.

ஸ்டைல்: அடிக்கடி தலையைக் கோதி விடுவது ஸ்டைல், (தலையில் வழுக்கை விழும் அளவுக்கல்ல... நிதானம்) பாடி ஸ்ப்ரே, ஆஃப்டர் ஷேவ் லோஷன் போடுவது இன்னொரு ஸ்டைல், ஒரு பெண் கண்ணீருடன் ரோடில் தனித்து நிற்கும்போது ஹெல்ப் பண்ணுவது சூப்பர் ஸ்டைல்!

ஹையோ... ஃபைனல் டச் கொடுத்துட்டாங்க. ஓ.கே... பாய்ஸ் அண்ட் கேர்ள்ஸ்! கேட்டுச் சொல்றது சொல்லிட்டோம். இனிமே நீங்க புரிஞ்சு நடந்துக்கோங்க.

- லதா சேகர்

ஆறுமுகத்துக்கு எப்போது லாங் பெல் அடிப்பார்கள் என்று மனசு பரபரத்துக் கொண்டிருந்தது.

'சாமி! எங்கப்பா இன்னைக்கு டிக்சனரி வாங்கிட்டு வந்திருக்கணும்... வாங்கிட்டு வந்திருக்கணும்...'

மனசுக்குள் கருப்பராயனிடம் சொல்லிக்கொண்டிருந்தான். கருப்பராயன் கைவிடமாட்டார் என்கிற நம்பிக்கை.

சக்திவேல் காகிதத்தை மடித்து மடித்துத் தவளை செய்து கொண்டிருந்தான்.

''பெல்லடிக்க இன்னும் எவ்வளவு நேரம்டா இருக்கு?''

சக்திவேல் வாட்சைப் பார்த்துச் சொன்னான்.

''இப்ப மணி மூணு அம்பதுடா...''

இன்னும் இருபத்தைந்து நிமிஷங்கள் முழுசாய் இருக்கின்றன.

வரதன் வாத்தியார் டெஸ்ட் பேப்பர்களைத் திருத்திக் கொண்டிருந்தார். அவர் வகுப்பென்றால் ஜாலிதான். அடிக்க மாட்டார். லேசாக ஒரு அதட்டல். அவ்வளவுதான்.

காலையில் இங்கிலீஷ் வாத்தியார் அடித்த அடியின் எரிச்சல் இன்னும் கையில் கொஞ்சம் மிச்சமிருந்தது.

'நாளைக்கு வரும்போது டிக்சனரியோட வரலை... வீட்டுக்கு அனுப்பிடுவேன்...'

இன்றைக்கு வியாழக்கிழமை. பொள்ளாச்சி சந்தை. அப்பா கருப்பட்டி சொஸைட்டிக்கு கருப்பட்டி கொண்டு போயிருப்பார்.

'இன்னைக்குக் கண்டிப்பா டிக்சனரி வாங்கிட்டு வர்றேன்... அழுகாம போடா.'

இதோடு 'அழகர் இங்கிலீஸ் டிக்சனரி' என்று நான்கு தடவை எழுதிக் கொடுத்துவிட்டான். நூற்றியிருபது ரூபாய். அது மட்டும் தொலைந்து போகாமல் இருந்திருந்தால்... இத்தனை அவஸ்தை இருக்காது.

ஒன்பதாம் வகுப்பு 'ஆ' பிரிவில் சேர்ந்த ஒரு வாரத்திலேயே இங்கிலீஷ் வாத்தியார் ரொம்பவும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். 'ஒரு வாரத்துக்குள்ள எல்லாரும் இங்கிலீஷ் டிக்ஷனரி வாங்கிடணும்...'

ஆறுமுகம் அப்பாவிடம்





நட்சத்திர சிறுகதை 4

ரகளை பண்ணி ஒரு வாரத்திலேயே டிக்ஷனரி வாங்கிவிட்டான். பக்கத்து தோப்புக்காரரிடம் கடன் வாங்கித்தான் டிக்ஷனரி வாங்கித் தந்தார்.

ஆறுமுகத்தின் அப்பா ராமசாமி தினமும் காலையில் தென்னை மரத்தில் ஏறி 'தெளுவு' (பதனீர்) இறக்குவார். முன்பெல்லாம் ஒரு மரத்துக்கு இரண்டு அல்லது ஒன்றரை லிட்டர் தெளுவு ஊறும்.



இப்போது தெளுவு ஊறுவது குறைந்துவிட்டது. அம்மா பெரிய தகர ட்ரம்மில் தெளுவை ஊற்றி, பாகு காய்ச்சி கருப்பட்டி ஊற்றி வைப்பாள். சாயங்காலம் மரங்களில் ஏறி முட்டிதட்ட வேண்டும். வாரா வார வியாழக்கிழமை பொள்ளாச்சி சந்தைக்கு தோப்புக்காரர் மாட்டுவண்டி போகும். அதில் கருப்பட்டியை ஏற்றிப் போய் சொஸைட்டியில் விற்றுவருவார்.

கனகராஜன்

இடையில் அம்மாவுக்கு வயிற்றில் ஒரு கட்டி வந்துவிட்டது. ஆபரேஷன் செய்தார்கள். அதில் கொஞ்சம் கடனாகிவிட்டது. அப்பாவால் இப்போது முன்பு மாதிரி மரம் ஏற முடிவதில்லை.

ஆறுமுகம் டிக்ஷனரிக்கு அட்டை போட்டு பத்திரமாக வைத்திருந்தான். ஒவ்வொரு இங்கிலீஷ் வார்த்தைக்கும் அர்த்தம் கண்டுபிடிப்பதில் ஆர்வமாக இருந்தான். இங்கிலீஷ் வாத்தியாரிடம் வெரி குட் வாங்க ஆரம்பித்துவிட்டான்.

போன மாதத்தில் ஒருநாள், மத்தியான நேரம்தான் டிக்ஷனரி காணாமல் போனது. யாரோ திருடி விட்டார்கள். ஆறுமுகமும் சக்திவேலும் சாப்பிட்டு விட்டு வகுப்புக்குத் திரும்பினார்கள். அடுத்த வகுப்பு ஆங்கில வகுப்பு. ஆறுமுகம் டிக்ஷனரியை எடுக்க புத்தகப் பையைத் திறந்தான். காணோம்...!

''சக்திவேலு... டிக்சனரியைக் காணோம்டா...''

''கொண்டு வந்தியா...?''

''ஆமாடா... சயின்ஸ் கிளாஸ்ல கூட எடுத்துப்பார்த்துட்டு இருந்தேனே...''

''யாருக்காச்சும் கொடுத்தியா?''

''இல்லடா...''

ஆறுமுகம் அழ ஆரம்பித்துவிட்டான்.

''வாத்தியார்கிட்ட சொல்லுவோம்...''

இங்கிலீஷ் வாத்தியார் வந்ததும் சொன்னார்கள்.

''எல்லாரோட பேக்கையும் செக் பண்ணு!''

இரத்தம்!

கிருஷ்ணகுமார்தான் லீடர். எல்லாருடைய புத்தகப் பையையும் சோதனை போட்டான். கிடைக்கவில்லை.

''டிக்சனரி கொண்டு வந்தியாடா...?'' இங்கிலீஸ் வாத்தியார் கேட்டார்.

''ஆமாங்க சார்... கொண்டு வந்திருந்தான்... நான்கூடப் பார்த்தேன்...'' என்றான் சண்முகசுந்தரம்.

''சரி... நல்லாத் தேடிப் பாருங்க... இங்கதான் இருக்கும்...'' என்று பாடத்தை நடத்த ஆரம்பித்துவிட்டார்.

ஆறுமுகத்தால் பாடத்தைக் கவனிக்க முடியவில்லை. டிக்ஷனரியை நினைத்து நினைத்து அழுது கொண்டிருந்தான்.

டிக்ஷனரி தொலைந்த விஷயத்தை வீட்டுக்குச் சொல்லாமல் ஒருவாரம் மறைத்துவிட்டான். ஆனால் இங்கிலீஷ் வாத்தியார், தினமும் அவனை டிக்ஷனரி கேட்டுத் தொல்லை பண்ண ஆரம்பித்துவிட்டார்.

சக்திவேல் தினமும் காலையில் தோப்புச்சாளைக்கு வந்துவிடுவான். இருவரும் சைக்கிளில் பள்ளிக்கூடம் கிளம்பிவிடுவார்கள்.

எட்டாம் வகுப்பு படிக்கும் வரை செந்தில்தான் அவனுக்குத் துணையாக நெருங்கிய நண்பனாக இருந்தான். செந்தில் நன்றாக ஓவியம் வரைவான். பள்ளிக்கூடத்தில் நடக்கும் ஒவ்வொரு ஓவியப்போட்டியிலும் முதல் பரிசு வாங்கிவிடுவான். போன வருஷம் ஆண்டு விழாவில் ஆறுமுகமும் ஓவியப் போட்டியில் கலந்துகொண்டு முதல் பரிசு பெற்றது. செந்திலுக்கு அதிர்ச்சி. அவனுக்கு இரண்டாவது பரிசு. போதாக்குறைக்கு ஓவிய மாஸ்டர் ஆறுமுகத்தின் ஓவியத்தைப் பாராட்டிப் புகழ்ந்து தள்ளிவிட்டார். செந்தில் அதைப் பெரிய அவமானமாக நினைத்துக் கொண்டான். ''நீ எதுக்குடா ஓவியப் போட்டியில சேர்ந்தே?'' என்று செந்தில் கேட்டேவிட்டான். அதற்குப் பிறகு ஆறுமுகம் இரண்டு மூன்று தடவை அவனோடு வலியப் போய்ப் பேசிப் பார்த்தான். செந்தில் அவ்னோடு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அலட்சியப்படுத்தினான். செந்தில் அப்பா ஊருக்குள் பெரிய மனிதர். அதனால் அவன் ஓரளவுக்குப் படம் வரைந்தாலும் முதல் பரிசு கொடுத்துவிடுவார்கள். செந்திலின் அப்பா பள்ளிக்கூடத்துக்கு வந்து புதுசா வந்த மாயன் வாத்தியாரிடம் ஏதோ பேசிவிட்டுப் போனாராம். அவ்ர் எதற்கும் வளைந்து கொடுக்கவில்லை என்று பேசிக் கொண்டார்கள்.

அன்றைக்குக் காலையில் சக்திவேல் சாலைக்கு வந்தவன் யதார்த்தமாகக் கேட்டான். ''என்னடா உங்கப்பா டிக்சனரி வாங்கிட்டு வந்துட்டாரா?''

ஏணியின் மேல் கால்வைத்து மரம் ஏறப்போன ஆறுமுகத்தின் அப்பா சட்டென்று திரும்பினார்.

''என்ன சக்திவேலு சொல்றே?''

சக்திவேல் குழம்பிப்போனான். ஏதோ உளறிவிட்டோம் என்று புரிந்தது. ஆறுமுகத்தின் மனசுக்குள் பக்கென்று பயம் பிடித்துக்கொண்டது.

''போன மாசம்தானே வாங்கிக் கொடுத்

“யாருடா திருடியிருப்பாங்க... உனக்கு யாரு மேலேயாச்சும் சந்தேகம் இருக்கா?”



தேன்...''

''அண்ணா... வந்துங்க... ஆறுமுகம் டிக்சனரியை கிளாஸ்ல யாரோ திருடிட்டாங்க... இவன் டிக்சனரி இல்லாம வர்றதால இங்கிலீஸ் வாத்தியார் தினமும் இவனை அடிக்கிறாருங்க...'' என்றான்.

ஆறுமுகத்துக்கு மனசு படபடத்தது.

''ஓஹோ... துரை டிக்ஷனரியைத் தொலைச்சுட்டாரா? பணம் என்ன மரத்திலயா காய்க்குது... சாயங் காலம் வா உன்னைக் கவனிச்சுக்கறேன்...''

இரவெல்லாம் அப்பா அவனைத் திட்டித் தீர்த்துவிட்டார். அதுவும் ஒரு வகையில் நல்லதாகப் போய் விட் டது. அடுத்த நாள் வியாழக்கிழமை.... அப் பாவிடம் தயங்கித் தயங்கி டிக்ஷனரி வேண்டுமென்று கேட்டான்.

''எல்லாம் என் தலையெழுத்து. வாங்கிட்டு வந்து கொடுக்கறேன்.''

ஆறுமுகத்துக்கு குஷியாகிவிட்டது.

அப்பா சொல்லி ஒரு மாசமே ஆகி விட்டது. ஏதாவது ஒரு திடீர்ச்செலவு வந்து இவனுக்கு டிக்ஷனரி கிடைக்காமல் தடுத்துக் கொண்டிருந்தது.

ஆனால் இன்றைக்கு ரொம்பவும் நம்பிக்கையோடு இருந்தான். காலையில் பாளைக் கத்தி தீட்ட, வெங்கச்சாங் கல்லைப் பொடி பண்ணி அரைத்துக் கொடுத்தான். கத்தி தீட்டும் முருங்கைத் தடியைக் கழுவி வைத்தான். கற்றாழை இலையை வெட்டி வந்து பாகு டிரம்மைக் கழுவ அம்மாவுக்கு உதவி செய்தான். கருப்பட்டிப் பலகையை வாய்க்காலில் ஊற வைத்துக் கழுவினான். தெளுவுக் குடத்தைச் சுமந்து வந்து வடித்து டிரம்மில் ஊற்றினான். அப்பாவுக்குப் புரிந்து விட்டது.

பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பும்போது தயங்கித் தயங்கி நின்றான்.

''போடா போ... இன் னைக்கு கண்டிப்பா டிக்ஷ னரி வாங்கிட்டு வந்துடறேன்...''

''இன்னும் ஒரே ஒரு நிமிஷம்தாண்டா இருக்கு...''

சக்திவேல் சொல்லி முடிக்கவில்லை.

'டண் டண் டண் டண் டண்...'



லாங்பெல் அடித்து விட்டது.

ஆறுமுகம் சைக்கிள் ஸ்டேண்டில் இருந்து சைக்கிளை வெளியே எடுத்துக் கொண்டு பறந்தான். பின்னால் சக்திவேல் கத்திக் கொண்டு சைக்கிளை மிதித்துக் கொண்டு வந்தான்.

''ஆறுமுகம்.... ஆறுமுகம்... உங்க சித்தப்பாடா... உங்க சித்தப்பா நிக்கறாரு... உன்னைக் கூப்பிடறாரு...''

விநாயகர் கோயில் பக்கத்தில் சித்தப்பா நின்று கொண்டிருந்தார்.

''ஏன் சித்தப்பா? இங்க நின்னுட்டு இருக்கறீங்க?''

''உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்... வா... நம்ப வீட்டுக்குப் போலாம்.''

''எதுக்கு சித்தப்பா...? நான் வீட்டுக்குப் போகணும். அப்பா டிக்சனரி வாங்கிட்டு வந்திருப்பாரு...''

''சாமி.. நான் சொல்றதைப் பொறுமையா பதட்டப்படாம கேளு... அப்பா வீட்டில இல்ல... பொள்ளாச்சியில பெரியாஸ்பத்திரில இருக்காரு...''

''ஆஸ்பத்திரியிலயா?'' ஆறுமுகம்

அதிர்ச்சியோடு கேட்டான்.

''அது... காலையில மரத்துல இருந்து கீழ விழுந்துட்டாரு... ஒண்ணுமில்ல... லேசான அடிதான்...''

ஆறுமுகம் அழ ஆரம்பித்துவிட்டான்.

அதற்குள் அவன் வகுப்பு பசங்கள் சிலர் கூடிவிட்டார்கள். ''அழுகாம போடா... அதெல்லாம் ஒண்ணும் ஆயிருக்காது.'' என்றான் சக்திவேல். மற்ற பசங்களும் அவனைச் சமாதானப்படுத்தினார்கள்.

சித்தப்பா அவனை சைக்கிளில் உட்கார வைத்து ஒட்டிக்கொண்டு போனார்.

ஆஸ்பத்திரியில் அப்பாவைப் பார்த்த ஆறுமுகம் கதறிவிட்டான்.

''ஒண்ணுமில்லடா... லேசான அடிதான்... ஒருவாரம் பத்துநாள் ஆஸ்பத்திரியில இருக்கச் சொல்லி இருக்கறாங்க...'' என்று லேசாய்ச் சிரித்தார்.

ஆளாளுக்கு ஆறுமுகத்தை ஆறுதல் சொல்லிச் சமாதானப்படுத்தினர்கள். அம்மாவின் முகம் அழுது அழுது வீங்கியிருந்தது.

''பாவம் பையன்... டிக்சனரி வேணும் டிக்சனரி வேணும்னு கேட்டுட்டு இருந்தான்... இன்னைக்கு எப்படியும் வாங்கிக் கொடுத்துடலாம்னு இருந்தேன்...''

அப்பா சொன்னபோது ஆறுமுகத்துக்கு அழுகை வெடித்தது.

''டிக்சனரியும் வேண்டாம்... ஒரு மண்ணும் வேண்டாம்... அப்பாவுக்கு நல்லா ஆனாலே அதுவே போதும்...''

ஆறுமுகம் அன்று இரவு சித்தப்பா வீட்டில் தங்கிக் கொண்டான். காலையில் எழுந்ததும் புற்றுக்கண்ணுக்குப் போய் பாலூற்றினான். அப்புறம் கருப்பராயன் கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டான்.

பகல் முழுக்க ஆஸ்பத்திரியிலேயே இருந்தான். சனி, ஞாயிறு இரண்டு நாட்கள் பள்ளிக்கூடம் விடுமுறை.

திங்கட்கிழமை காலையில் ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டான்.

''ஆறு... இன்னைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போ... எனக்கு சீக்கிரம் சரியாயிடும்'' என்றார் அப்பா.

ஆறுமுகம் தயங்கி நின்றான்.

''சித்தப்பாகிட்ட சொல்லியிருக்கேன்... இன்னைக்கு சாயங்காலம் டிக்சனரி வாங்கிட்டு வந்துடுவாரு. சரியா?''

சித்தப்பா அவனைப் பள்ளிக்கூட வாசலில் இறக்கிவிட்டபோது பிரேயர் முடிந்து கொண்டிருந்தது.

ஆறுமுகம் டிரில் மாஸ்டரிடம் தாமதத்துக்கான காரணத்தைச் சொல்லிவிட்டு வகுப்புக்குள் நுழைந்தான். முதல் வகுப்பு இங்கிலீஷ். ஆறுமுகம் வகுப்புக்குள்



'யூத்'துவம்

காலேஜ் கீதை :

எதை நீ படித்தாய் அதை மறப்பதற்கு
எதை நீ கவனித்தாய் புரியாமல் போவதற்கு
எதை நீ எழுதினாய் பாஸ் ஆவதற்கு...
செமஸ்டர் எழுது... அரியர்களை எதிர்பார்...!

நுழைந்ததும், ''உங்கப்பாவுக்கு எப்படிடா இருக்கு?'' ஆள்ஆளுக்கு அவனைச் சுற்றி விசாரிக்க, கலங்கிப் போன கண்களோடு பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

செந்தில் மட்டும் அவனுடைய இருக்கையில் உட்கார்ந்துகொண்டு பார்த்துக் கொண்டிருப்பதை ஆறுமுகம் கவனித்தான்.

இங்கிலீஷ் வாத்தியார் வர எழுந்து நின்றார்கள். ஆறுமுகம் உள்ளங்கைகளைப் பரபரவென்று நன்றாகத் தேய்த்துக் கொண்டான். அப்படித் தேய்த்தால் அடிவாங்கும் போது வலிக்காது என்கிற நம்பிக்கை.

''வாத்தியார்கிட்ட சொல்லிடலாம்... இன்னைக்கு உன்னை அடிக்க மாட்டாரு...'' என்றான் சக்திவேல்.

ஆறுமுகம் டெஸ்க்குக்குள் புத்தகப்பையைத் திணித்தான். முழுசாகப் போகாமல் பாதியிலேயே அடைத்து நின்றது.

''என்னடா சக்திவேலு. பேக் உள்ளே போக மாட்டேங்குது...''

''டெஸ்க்குகுள்ள என்னமோ இருக்குடா.''

பையை எடுத்து டெஸ்க்குக்குள் பார்த்தான். டிக்சனரி...! ஆறுமுகம் வேகமாக எடுத்துப் பார்த்தான். அவனுடையதுதான். மேலே அட்டை இல்லை. உள்ளே அவனுடைய பெயர் இருந்தது. அதை அடித்திருந்தார்கள்

''என்னோட டிக்சனரி... கிடைச்சிருச்சு...'' என்றான் உற்சாகத்துடன்...

''இங்க எப்படிடா வந்துச்சு?'' சக்திவேல் ஆச்சரியப்பட்டான்.

''தெரியலையே...''

ஆறுமுகம் பக்கங்களை வேகமாகப் புரட்டினான். முதல் பக்கத்தைப் பார்த்தான். அவனுடைய பெயர் ஊதா கலர் இங்க்காலும் நீலக்கலர் இங்க்காலும் அடிக்கப்பட்டிருந்தது. ஊதா கலர் இங்க்... இது செந்திலிடம் மட்டும்தானே இருக்கிறது...? படம் வரைய என்று வாங்கி வைத்திருக்கிறான். டிக்ஷனரியை செந்தில்தான் திருடியிருந்தானா?



ஆறுமுகம் சட்டென்று பின்னால் திரும்பி செந்திலைப் பார்த்தான். செந்தில் ஒருவித குற்ற உணர்வு அவஸ்தையோடு தலையைக் குனிந்து கொண்டான். சந்தேகமேயில்லை... அவன்தான் திருடியிருக்கிறான். ஆறுமுகத்துக்கு நெருடலாய் இருந்தது.

''ஆறுமுகம் என்னடா பண்ணிட்டு இருக்கறே?''

இங்கிலீஸ் வாத்தியார் கத்தினார்.

''சார் ஆறுமுகத்தோட டிக்சனரி கிடைச்சுடுச்சு சார்...''

''கிடைச்சுடுச்சா? எப்படிடா?''

''யாரோ அவனோட இடத்தில கொண்டு வந்து வச்சுட்டாங்க சார்...''

''கொண்டு வந்து வச்சுட்டாங்களா? நல்லாப் பாருங்கடா... ஆறுமுகம்... அது உன்னோட டிக்சனரிதானா?''

ஆறுமுகம் எழுந்து நின்றான்.

''ஆமாங்க சார்.''

''எங்கே கொண்டா''

டிக்சனரியை வாங்கிப் பார்த்தார்.

''யாருடா திருடியிருப்பாங்க... உனக்கு யார் மேலேயாச்சும் சந்தேகம் இருக்கா?''

பயத்தில் முகம் வெளிறிப் போயிருந்த செந்திலை ஓரக்கண்ணால் பார்த்தபடி தீர்க்கமாய் சொன்னான் ''இல்ல சார்... யார் எடுத்தாங்கன்னு தெரியலை சார்.'' ●

28.10.09 முதல் 28.04.11 வரை

சென்ற வாரத் தொடர்ச்சி...

துலாம்:

கிரக நிலவரம்: ராகு பகவான் 3வது இடத்துக்கும் கேது 9வது இடத்துக்கும் ஷிஃப்ட் ஆகிறார்கள்.

பிளஸ்: துட்டு கொட்டோகொட்டுன்னு கொட்டுங்க. சாமியைப் பார்க்க டிராவல் பண்ணுவீங்க. வியாபார விருத்தி ஜிவ்வுன்னு ஏறும். ஆர்ட் ஃபீல்டு நல்லா இருக்கும்.

மைனஸ்: சின்னச் சின்ன கண் திருஷ்டி அட்டாக் பண்ணும். அதற்கும் கைவசம் ரூட் இருக்கு. சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயரைக் கும்பிட்டு வாங்க. அது கேடயமா இருக்கும்.

விருச்சிகம்:

கிரக நிலவரம்: ஒன்றரை வருடம் ராகு 2வது இடத்திலேயும் கேது 8வது இடத்திலேயும் உட்கார்ந்து உங்களை டெஸ்ட் பண்றா மாதிரியா இருக்காங்க.

ப்ளஸ்: சொல்லிக் கொள்ளும்படி ஏதுமில்லை.

மைனஸ்: வாக்குவாதம் கூடவே கூடாது. ஜாமீன் போடுவது, கடன் கொடுப்பது 'நோ'. ஜாக்கிரதையாக வண்டியில போங்க. ஃபேமிலியை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும். எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். மொத்தத்தில குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கிளம்புங்க. ராகு கேதுவுக்கு விளக்கேத்துங்க. அது போதும்.

தனுசு:

கிரக நிலவரம்: ராகு ஜென்மராசிக்கும் கேது 7க்கும் விசிட் பண்றாங்க.

ப்ளஸ்: நின்னுபோன காரியம் சட்டுன்னு நடந்திடும். வழக்கு கிளியர் ஆகும். வேலை பளு குறையும். விலகிப் போனவங்க திரும்பி வருவாங்க.



கடன் தொல்லை தீரும்.
பண வரவும் இருக்கும்.

மைனஸ்: நல்லது நடக்கற காலமிது. சாமிக்கு தினமும் ஒரு தேங்க்ஸ் சொல்லுங்க. தானம் பண்ணுங்க. மைனஸ் ஒண்ணுமில்ல.

மகரம்:

கிரக நிலவரம்: ராகு 12ம் இடத்துக்கும் கேது 6ஆம் இடத்துக்கும் இந்த 1½ வருடம் சுத்தி சுத்தி உலா வருவாங்க.

ப்ளஸ்: உத்தியோக உயர்வு கண்டிப்பா உண்டு. அதனால பணவரத்து கூடும். அந்தஸ்து உயரும்போது சமூக மதிப்பு தானா வரும். காலம் உங்களுக்கு சாதகமா இருக்கிறதால கலை, குடும்ப உறவு, பயணம், வழக்கு, கல்வி எல்லாமே தூள்தான்.

மைனஸ்: கர்வம் கூடாம கொஞ்சம் பணிவா நடந்துக்கிட்டா போதும். பரிகாரம் அவசியமில்லை.

கும்பம்:

கிரக நிலவரம்: பகவான் ராகு 11வது இடத்துக்கும் கேது 5வது இடத்துக்கும் பெயர்ச்சி ஆகிறார்கள்.

ப்ளஸ்: பொதுவாழ்வில் முன்னேற்றம், படிப்பில் மேன்மை, வெளிநாடு போதல், வியாபார அபிவிருத்தி என 60% பலன்கள் கிடைக்கும்.

மைனஸ்: நண்பர்கள் விலகி விடுவர். சொத்துப் பிரிவினை நடக்கும். 40% வளர்ச்சித் தடைகளை சமாளிக்கணும்.

மீனம்:

கிரக நிலவரம்: 1½வருடம் தங்கிவிட்டுப் போக ராகு 10க்கும் கேது 4க்கும் வந்திருக்காங்க.

ப்ளஸ்: சொத்து வரும். கல்வி மேலோங்கும். நிலுவையிலிருந்த பணம் துரிதமாய் வந்து சேரும். வாக்குவன்மை கூடும். சிலருக்குக் கர்மயோகம் கூடும்.

மைனஸ்: உத்தியோக இடமாற்றம், வீடு மாற்றம் தவிர்க்க முடியாது. வேலை அதிகரிக்கும். அம்மாவின் ஆரோக்கியம் பாதிக்கும். கடவுளை நம்பினோர் கைடவிடப்படார்னு பகவானை பத்திரமா மனசுல பூட்டி வெச்சுப் பயணப்படுங்க. அது போதும்.

தஞ்சை பரத்வாஜ்

எல்லோரும் ஒண்ணா சேர்ந்து சாப்பிடறதுக்கு நல்ல நேரம் பார்த்துட்டிருக்கோம்..!

நடக்குமென்பார்; நடக்கும்!



"தலைவர் தே.தோ.மு.க.ன்னு ஒரு கட்சி ஆரம்பிச்சிருக்காரா?"

"ஆமா! தேர்தலில் தோற்றவர் முன்னேற்றக் கழகம்."

-சாயம் வெ.ராஜாராமன்



"நம்ம தலைவர் தேர்தல் தோல்விக்கு புதுசா ஒரு காரணம் சொல்லி இருக்காரே...?"

"என்ன?"

"மக்களோட விரல்தான் தப்புப் பண்ணிட்டுன்னு..."

- டி.சேகர்



"இந்த பூத்ல அநியாயம் நடக்குதுன்னு எப்படிச் சொல்றே?"

"கள்ள வோட்டுப் போட தனி க்யூவே வச்சிருக்காங்கன்னா பாரேன்!"


- தாரை செ.ஆசைத்தம்பி

"கபாலி! இந்தா! வெற்றிலை, பாக்குத் தட்டுல பீரோ சாவி இருக்கு, எடுத்துக்க."

"ஏன் இப்படி தர்றீங்க?"

"மரியாதையா பீரோ சாவியை குடு-னு நீதானே சொன்னே?"





"தலைவருக்கு சீட் கிடைச்சதும் ஆனந்த தாண்டவம் ஆடறாரே?"

"எலெக்ஷன் ரிசல்ட் வந்ததும் பாருங்க. அதிர்ச்சி தாண்டவம் ஆடுவாரு."

'கேன்சல்'டேஷன் ஃபீஸ்!

"டாக்டர்! கன்சல்டேஷன் ஃபீஸ் ரூ 100தானே. எதுக்கு ரூ.200 கேட்கறீங்க?"

"ஆபரேஷன் தேவையில்லைனு சொன்னேனே. அதுக்கு 'கேன்சல்'டேஷன் பீஸ் ரூ.100."

- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்



எக்ஸாம் ஹால் தவிர, எழுதிக் குவிக்க எங்களுக்கும், எக்கச்சக்க மேட்டர்ஸ் இருக்கு எனப் பொங்கி வழிகின்றனர் இளைஞர்கள். இவங்களோட யூத் ஃபுல் தாட்ஸ்தான் என்ன? வலைப்பூக்கள்ல இவங்க உலவ விடற விஷயங்கள்ல இதோ சில வண்ணங்களும் வாசங்களும்...

நாங்களும் எழுதுவோம்ல!

கோபாலன் ராமசுப்பு - http:// krgopalan. blogspot.com/

நாள் ஒன்றுக்கு பத்து இந்தியரைப் பலி வாங்கும் Swine Fluவுக்கு நம் தினசரி செய்தித்தாள்களும், தொலைக்காட்சி செய்திகளும் கொடுக்கும் முக்கியத்துவம், தினமும் 3000க்கும் மேற்பட்ட இந்தியக் குழந்தைகளை பலிவாங்கும் ஊட்டச் சத்துக் குறைவின்மைக்கு ஏன் கொடுக்கப் படுவதில்லை என்று யோசித்ததுண்டா?

ஊட்டச்சத்து குறைவைப் பற்றி எந்த ஒரு விவாதமும் இந்தியாவில் நடைபெறுவதில்லை. எந்த அரசியல்வாதியும் இதைப் பற்றிப் பேசுவதில்லை... இவை வோட்டுக்களைப் பெற்றுத்தரப்போவதும் இல்லை. பொதுமக்களாகிய நமக்கும் இதைக் குறித்து எந்த விதப்பிரச்னையும் இல்லை. டெல்லியில் சில கூட்டத்தைக் கூட்டி விவாதிப்பதுடன் அதிகாரிகளின் கடமையும் முடிந்துவிடுகிறது. நாளைய இந்தியாவை உருவாக்கப்போகும் இளைய தலைமுறையைக் காலனிடம் கொஞ்சம் கொஞ்சமாகத் தூக்கிக்கொடுத்து விட்டு... வல்லரசு இந்தியாவை உருவாக்குவோம் என்று கனவு காண்பது அறிவீனம்!

காயத்ரி - http://enpoems. blogspot. com/

தற்போது சைட் அடித்துக் கொண்டிருப்பவர்கள்- Curtis Stone and Gerard Butler.

Curtis Stone, Hallmark channel-ல் Take Home Chef எனும் நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். சூப்ப்ப்ப்ரா சமையல் செய்வார். ஆஸ்திரேலியாவில் பிறந்தவர். பிடித்த அம்சம்- பேசும் விதம் + சிரிப்பு.



அடுத்தது ஹாலிவுட் நடிகர் Gerard Butler. The Ugly Truth படத்தில் நடித்துள்ளார். தாடி வைத்திருக்கும்போது அநியாயத்துக்கு அழகாய்த் தெரிவார்! பிடித்த அம்சம்- கண்கள்(ஹிஹி...) முந்தைய பட்டியல் என்று பின்னிணைப்பாக ஒரு link-ம் உள்ளது.

கார்த்திக் - http://www.honeytamilonline.co.cc

டீ.வி.யில் மூழ்கிவிட்ட பண்டிகைகள்

"இந்தியத் தொலைக்காட்சிகளில்..." என்பது போய், தற்போது உலகத் தொலைக் காட்சிகளில் முதல் முறையாக திரைக்கு வந்து சில நாட்களே ஆன..."

இதுதான் அனைத்து தனியார் தொலைக்காட்சிகளிலும் தற்போது அரைமணி நேரத்துக்கு 60 முறை ஒளிபரப்பப்பட்டு வரும் விளம்பரமாக உள்ளது.

'அனைத்து நிகழ்ச்சிகளையும் பாருங்கள். தீபாவளியைக் கொண்டாடுங்கள்' என்பதோடு நில்லாமல், "தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்தையும் வழங்குவோர்..." என்று கூறி ஒரு நீண்ட பெரிய பட்டியலையும் குறிப்பிடுவார்கள்.

அந்தப் பட்டியல் முழுவதும் சேனலுக்குப் பல கோடி ரூபாய் பெற்றுத் தரும் விளம்பரங்கள் என்பது டிவி முன் பண்டிகை நாளில் தவமிருக்கும் பல்லாயிரக்கணக்கானோருக்குத் தெரிய வாய்ப்பில்லை.

நெட் பொக்கே





ஆர்.சந்தோஷ் - http://imeandmylove.blogspot.com/

உன்னைப் பார்ப்பதற்கு முன்பே
எனக்கும் காதல் தெரியும்
'அ' எழுதுவதற்கு முன்பு எழுதிய
கிறுக்கல்களைப் போல...

"எனக்கொரு கேர்ள் ஃப்ரெண்ட் வேணுமடா!"

"ஆணும் பெண்ணும் நட்பாயிருந்தால் சரியா... தவறா!" - யூத்துகளின் எக்கோவாக எழுதிக் குவிக்கின்றனர் கோலிவுட் பாடல்களில்... கேர்ள் ஃப்ரெண்ட் பாய் ஃப்ரெண்டில் அப்படி என்னதான்டா ஸ்பெஷல்? இளைஞர்களிடம் கேட்டோம். ஒரு பெரிய ஆய்வுக் கட்டுரை கணக்கா அளந்து தள்ளுனாங்க. அதுல சில சேம்பிள்ஸ் இங்கே...

ஸார் ஆண்-பெண் ப்ரெண்ட்ஷிப்பைப் பத்தி நச்சுன்னு நாலுவரி சொல்லுங்க...!

மணிகண்டன்: அதுவொரு லேட்டஸ்ட் பியூட்டி கவிதை. அதை வாசிக்கணும்; நேசிக்கணும்; யோசிக்கணும்; வாழ்க்கையில் யூஸ் பண்ணிக்கணும், நூறு ஆண் சிநேகிதர்கள் செய்ய முடியாததை ஒரு கேர்ள் ஃப்ரெண்டால்



செய்ய முடியும். மாணவப் பருவத்தைப் பொறுப்பான பருவமாக மாத்த அவளாலதான் முடியும்.

கேர்ள் ஃப்ரெண்ட்ஷிப்பில் என்ன அப்படி ஸ்பெஷாலிட்டி?



வேணுமடா!







சத்யபிரபு: அவங்ககிட்டேதான் நம்ம ப்ராப்ளத்தை ஈகோ இல்லாம ஷேர் பண்ண முடியும். அவங்க டென்ஷனைக் குறைத்து, கூலாக்கி சொல்யூஷனும் தருவாங்க.

ஏங்க சிந்துஜாதேவி பாய்ஃப்ரெண்டு அவ்வளவு முக்கியமாங்க?

''மற்ற பாய்ஸால் ஏதாவது பிரச்னை வந்தால், பெற்றோரிடம் சொன்னால் கதை கந்தலாயிடும். அதையே பாய் ஃப்ரெண்டிடம் சொன்னா முதல்ல தைரியத்தைக் கொடுப்பான். அவனே முன்னே நின்னு ப்ராப்ளத்தை முடிக்க வைப்பான். அவனுக்கு அதுதான் தலைபோற பிரச்னை. இந்த அக்கறை யாருக்கு வரும்?''



கோபப்படற நேரத்துல கேர்ள் ஃப்ரண்ட்தான் ஸ்பீட் பிரேக்கர்!



ப்ராக்டிக்கலா ஆண்-பெண் ஃப்ரெண்ட்ஷிப்பில் என்ன பெனிஃபிட்?

ஜெய்சுதா : காலேஜில பழக ஆரம்பிச்சா இனக் கவர்ச்சி, பிரமிப்பு போயிடும். அட இவ நம்ம மாதிரி ஒரு ஜீவன் - அட இவன் நம்மள மாதிரி ஆத்மான்னு கைகுலுக்க ஆரம்பிச்சா... இது வேலை செய்யுற இடத்துலேயும் தொடர்ந்தா... எதையும் சமாளிச்சு சாதிக்க முடியும். கொஞ்சம் கண்ணியமா பொது இடத்தில் நடந்துகிட்டா போதும். இது பெனிஃபிட்.

கேர்ள் ஃப்ரெண்டோ பாய் ஃப்ரெண்டோ எல்லாமே லவ்வுக்கு ஃபர்ஸ்ட் ஸ்டெப் தானே?

தீப்தி : இல்ல... இல்லவே இல்ல... இதுதான் என்னோட முதல் பதில். சரி... அப்படியே இருந்தாலும் என்ன தப்பு? புரிஞ்சுக்கிட்ட ஜோடியால விவாகரத்து பெறாத தம்பதியும் ஆரோக்கியமான சந்ததியும் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லது தானே. நல்லது நடக்கணும்னுதானே எல்லாரும் விரும்புறோம்.

கேர்ள் ஃப்ரெண்ட் பாய் ஃப்ரெண்டைவிட எப்படி உசத்தி?

கனகசபாபதி : கோபப்படுற நேரத்தில் கேர்ள் ஃப்ரெண்ட் ஸ்பீட் பிரேக்கர் மாதிரி. இதுவே பாய்ஸா இருந்தா ரகளை, பஞ்சாயத்து, வெட்டுக்குத்துன்னு மாத்திடுவாங்க.

பாய் ஃப்ரெண்ட்ஷிப் விஷயத்தில் வேற என்ன ட்ராபேக்?

அகிலா : பத்து மணிக்கு மேல எஸ்.எம்.எஸ்ஸூம் ஃபோனும் பண்ண முடியாது இது ட்ராபேக் இல்ல... நமக்கான கட்டுப்பாடு.

காதலிக்கும் கேர்ள் ஃப்ரெண்டுக்கும் என்ன வித்தியாசம் கனகராஜ்?

''ஃபிரெண்டா இருந்தா அவ வீடு வரைக்கும் போய் எப்ப வேணாலும் பேசலாம். காதலியா இருந்தா இது சாத்தியம் இல்ல... கள்ளத்தனம் வந்துடும். கள்ளத்தனம் இல்லா உறவு கேர்ள் ஃப்ரெண்ட்கூட மட்டும்தான்.''

தொகுப்பு : **ஆர். பாலா**



தீபு - கோபு
ஹேய்... மிஸ்டு கால் கோபு... திடீர்னு 'தேர் இஸ் அ ப்ளேஸ் இன் மை ஹார்ட்' பாட்டு அனுப்பியிருக்கே.
மைக்கேல் ஜாக்ஸன் பாட்டு பிடிக்கும்னு நேத்து சொன்னே இல்ல... அதான் கஷ்டப்பட்டு தேடி டவுன்லோட் செஞ்சு அனுப்பினேன்.
நாலைஞ்சு தமிழ் டூயட்ஸ் சேர்த்து அனுப்பிட்டு ஒபாமாவுக்கு ஒண்ணுவிட்ட தம்பி மாதிரி டீஸண்டா பேசறான்.
நல்லவேளை... கூட ஏன்டா டூயட் பாட்டு அனுப்பினேன்னு கோபமா கத்துவான்னு நினைச்சேன். தீபு ரொம்ப நல்லவ.
இன்னொரு லிஸ்ட் இருக்கு. அதை எல்லாம் அனுப்பு
ஓ வித் ப்ளெஷர்.
ஃபைவ் ருபீஸ் பெர் சாங் ஃபார் ப்ளூடூத் டிரான்ஸ்ஃபர்
ஃபோனைக்கூட எடுக்காம அப்படி என்ன பிஸி?

மயிலைக் காளை

''சீர்காழிக்குப் போறேன்; அங்கே மில்லிலே வேலை செய்து பிழைக்கலாமென்று.''

''ஏன் இத்தனை நாள் இருந்த ஊரை விட்டுப் போக வேணும்?''

''போகாதே பின்னே எங்கேயிருக்கிறது? மாமி வீட்டை விட்டுப் போகச் சொல்லிவிட்டாள்.''

''ஏன் அப்படிச் சொன்னாள்? அவளுக்கு உன் மேலே என்ன கோபம்?''

பூங்கொடி சற்று நேரம் சும்மா இருந்தாள். பிறகு, ''உனக்கென்ன அதைப் பற்றி? எனக்கும் அந்த வீட்டிலே இருக் கப் வேண்டாம். நானிருக்கிற வரையில் அது நடக்காது.''

''உன் வீட்டுக்கு வந்தால்... அப்புறம்?''

''புரோகிதரைக் கூப்பிட்டுக் கல்யாணத்துக்கு நாள் வைக்கச் சொல்றது.''

''திருடியைக் கட்டிக் கொண்டாய் என்று ஊரிலே சொல்ல மாட்டார்களா? உனக்கு வெட்கமாயிராதா?''

''யாராவது உன்னை அப்படிச் சொன்னால் அவர்கள் நாக்கை அறுத்து விடுவேன். அவர்களுக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது?''

''உன் ஆயா சம்மதிப்பாளா? அங்கே பிடிக்கலை; நான் போகிறேன்'' என்றாள்.

''நான் சொல்கிறேன், கேள் பூங்கொடி! அந்த நாயின் பணம் உனக்கு வேண்டாம். ஒருத்தருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டு வந்து அந்த வீட்டிலேயே எறிந்து விடு... நாம்...''

''நீ கூட என்னைத் திருடி என்றுதானே நினைக்கிறாய்? நான் எதற்காக உயிரோடு இருக்க வேணும்? விடு, நான் போகிறேன்'' என்று சொல்லிப் பூங்கொடி அழத் தொடங்கினாள்.

கிருஷ்ணன் சிறிது நேரம் சும்மா இருந்தான். பிறகு, ''சரி, வா! போகலாம்!'' என்றான்.


''எங்கே?''

''வீட்டுக்கு.''

''எந்த வீட்டுக்கு?''

''எந்த வீட்டுக்கா? என் வீட்டுக்குத்தான். சீர்காழிக்கு நீ போகவும் வேண்டாம்; மில்லில் வேலை செய்யவும் போய் மறுபடியும் வீட்டை விட்டுப் போகச் சொன்னால்?''

''ஆயா அப்படிச் சொன்னால் உன்னோடு நானும் வீட்டை விட்டுக் கிளம்பி வந்துவிடுகிறேன். அப்பொழுது இரண்டு பேருமாய்ப் போவோம்.''



''சத்தியமாய்ச் சொன்னால்தான் வருவேன்.''

''சத்தியமாய்ச் சொல்றேன். வா, போகலாம்!''

சுபதின, சுபலக்னத்தில் கிருஷ்ணக் கோனானுக்கும் பூங்கொடிக்கும் விவாக மகோற்சவம் நடந்தேறியது. ஸ்ரீமதி பிடாரி அம்மாளைத் தவிர மற்றபடி ஊராரெல்லாரும் விஜயம் செய்து தம்பதிகளை ஆசிர்வதித்தார்கள். இவ்வளவு நல்ல பெண்ணின் பேரில் திருட்டுப் பழியைச் சுமத்தி வீட்டை விட்டுத் துரத்திய பிடாரியைத் தூற்றாதவர்கள் இல்லை. அவ்வாறே கிருஷ்ணனைப் புகழ்ந்து போற்றாதவர்களும் அந்த ஊரில் கிடையாது. எல்லாரிலும் அதிகக் குதூகலத்துடன் விளங்கியவள் கிருஷ்ணனுடைய தாயார்



அமிர்தம்தான். தனக்குப் பேச்சுத் துணைக்கும், ஏவின வேலை செய்வதற்கும் மருமகள் ஆச்சு; பிள்ளைக்கும் புத்தி தெளிந்து முன்னைப் போல் நன்றாயிருப்பான்.

கலியாணச் சந்தடி அடங்கிய அடியோடு ஒருநாள் காலையில் பூங்கொடி கிருஷ்ணனிடம், "காட்டுக்குப் போய் விட்டு வரலாம், வா!" என்று சொன்னாள்.

"இப்போது எதற்குக் காட்டுக்கு?"

"ஒரு காரியம் இருக்கிறது. 'நீ ஒன்றும் என்னைக் கேட்காதே; நானாகச் சொல்கிறேன்' என்று அப்போது சொல்லவில்லையா? அந்தச் சமாசாரத்தை இன்று தெரிவிக்கிறேன், வா!"

கிருஷ்ணனுக்கு விஷயம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆவலாயிருந்தது; ஆனால், காரியம் என்னவோ சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. வேண்டா வெறுப்பாய் வருவதாக ஒத்துக்கொண்டான்.



பூங்கொடி இராஜன் வாய்க்காலில் குளிக்கச் செல்வதுபோல் முதலில் போனாள். கிருஷ்ணன் பின்னோடு மாடுகளை ஓட்டிக்கொண்டு சென்றான்.

அக்கரை சேர்ந்ததும் பூங்கொடி துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடத் தொடங்கினாள். மெதுவாகத் தயக்கத்துடன் நடந்த கிருஷ்ணனைச் சில சமயம் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள். கிருஷ்ணனுடைய நெஞ்சு மேலும் மேலும் படபடவென்று அடித்துக்கொண்டது. கடைசியாக ஓர் ஆலமரத் தடியில் போய்ச் சேர்ந்ததும், பூங்கொடி கிருஷ்ணன் கையை விட்டுவிட்டு அந்த மரத்தின் மேல் தாவி ஏறினாள். இரண்டு கிளைகளுக்கு மத்தியில் புல்லுருவிகளால் மூடப்பட்டிருந்த ஒரு பொந்தினுள் கையைவிட்டு, அதற்குள்ளிருந்து ஒரு சிறு தகரப் பெட்டியை எடுத்தாள். "இந்தா!" என்று கிருஷ்ணனிடம் நீட்டினாள்.

"என்ன அது?"

"வாங்கிப் பாரேன்!"

கிருஷ்ணன் பெட்டியை வாங்கித் திறந்து பார்த்தான். உள்ளே ரூபாய் நோட்டுகளும் பவுன்களும் இருந்தன.

'கடைசியில், இவள் திருடிதானா?' என்று கிருஷ்ணன் எண்ணினான். அந்த நினைப்பை அவனால் சகிக்கவே முடியவில்லை. அதிலும் 'பிடாரி சொன்னதும் நிஜம். அவள் இவளை வீட்டை விட்டுத் துரத்தியது நியாயம்' என்று எண்ணியபோது அவனுடைய தலையை யாரோ பிளப்பது போலிருந்தது.

"இதை எதற்காக என்னிடம் கொடுத்தாய்?" என்று கிருஷ்ணன் கோபமாய்க் கேட்டான்.

"சொத்தைச் சொத்துக்குரியவர்களிடம் கொடுத்துவிட வேண்டுமென்று நீ அப்போதே சொல்லவில்லையா?"

"ஆமாம்; என்னைக் கொண்டு போய்ப் பிடாரியிடம் கொடுக்கச் சொல்கிறாயா?"

"நீ என்ன வேண்டுமானாலும் செய்; யாரிடம் வேண்டுமானாலும் கொடு. உன்னுடைய சொத்தை உன்னிடம் நான்

சேர்ப்பித்துவிட்டேன்'' என்றாள்.

கிருஷ்ணனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்னவோ புதிர் போடுவது போலிருந்தது. ''என்ன உளறுகிறாய்?'' என்று கேட்டான்.

''நான் ஒன்றும் உளறவில்லை. அதற்குள் ஒரு கடுதாசி இருக்கிறது; எடுத்து வாசித்துப் பார்!'' என்றாள் பூங்கொடி.

கிருஷ்ணன் ஆவலோடு கடுதாசை எடுத்து வாசித்தான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

''முத்துக்கோனார் மகன் பெருமாள் கோனான் சுயப்பிரக்ஞையுடன் மனப்பூர்வமாய் எழுதி வைப்பது என்னவென்றால், இந்தப் பெட்டியில் நானூற்றிருபது ரூபாய் பணமும், பன்னிரண்டு முழுப்பவுனும் இருக்கின்றன. இந்தப் பணம், பவுன் எல்லாம் என்னுடைய சுயார்ஜிதம். இந்தத் தொகை முழுவதையும் என்னுடைய கண்ணான மருமகள் பூங்கொடிக்குக் கலியாணப் பரிசத்துக்காக எழுதி வைக்கிறேன். அவளைக் கலியாணம் பண்ணிக் கொள்கிறவன் இது எல்லாவற்றையும் அடைய வேண்டியது. பணத்தை வீண் செலவு செய்யாமல் நிலம் வாங்குவதற்காவது வீடு கட்டிக் கொள்ளவாவது உபயோகிக்க வேண்டியது.

இந்த விஷயம் வெளியில் தெரிந்தால், பூங்கொடியை என்னுடைய பெண்சாதி கஷ்டப்படுத்தி ஒருவேளை உயிருக்கே அபாயம் செய்வாளென்று பயந்தும், இன்னும் பணத்துக்கு ஆசைப்பட்டு யாராவது உபயோகமற்றவன் அவளைக் கலியாணம் செய்து கொள்ள முயற்சிக்கலாமென்று நினைத்தும் பூங்கொடிக்குக் கலியாணம் ஆவதற்குள் இந்த விஷயத்தை வெளிப்படுத்தாமல் இரகசியமாய் வைத்திருக்க வேணுமென்று சத்தியம் வாங்கியிருக்கிறேன். பெட்டியை எங்காவது பத்திரமாய் ஒளித்து வைத்திருக்கும்படி பூங்கொடியிடம் ஒப்புவித்திருக்கிறேன்.

இந்தச் சொத்தை அடைகிறவன் என்னுடைய மருமகளுக்கு ஒருவித மனக்குறையுமின்றி எப்போதும் சந்தோஷமாய் வைத்திருக்க வேண்டியது.''

மேற்படி கடிதத்தைப் படித்து விட்டுச் சற்றுநேரம் யோசித்ததில், கிருஷ்ணனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. மாசி மகத்தன்று வீட்டில் ஒருவரும் இல்லாத சமயத்தில் பெருமாள் கோனார் பூங்கொடியிடம் அந்தப் பெட்டியைக் கொடுத்துப் பத்திரப்படுத்தும்படி சொல்லியிருக்க வேண்டும். மயிலைக் காளை கெட்டுப் போன அன்று, தான் காட்டில் அவளைச் சந்தித்ததன் இரகசியம் அதுதான்.



'கடைசியில், இவள் திருடிதானா?' என்று கிருஷ்ணன் எண்ணினான். அந்த நினைப்பை அவனால் சகிக்கவே முடியவில்லை.



பூங்கொடியும், அவளுடைய சீதனமும் தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்துக்கெல்லாம் மூலகாரணம் மயிலைக் காளைதான் என்பது கிருஷ்ணனுடைய நம்பிக்கை. யாராரோ வந்து நல்ல விலைக்கு அதை வாங்கிக் கொள்வதாகச் சொன்னார்கள். கிருஷ்ணன் அதை விற்க மறுத்துவிட்டான். ஒரு சின்ன வண்டி வாங்கி அதில் மயிலைக் காளையை ஓட்டிப் பழக்கினான். தன்னையும் பூங்கொடியையும் தவிர அந்த வண்டியில் வேறு யாரும் உட்காருவதற்கு அவன் அனுமதிப்பதில்லை.

- ஆனந்த விகடன் :
9.12.1934 - 16.12.1934

ஒவ்வொரு முறையும்
தவறான புரிதலின்போது
குழம்ப நேர்கிறேன்...
நிதர்சனத்திலற்ற ஒன்றுக்காய்
அடையாளப்படுத்தப்பட்ட
புறாவைப் போல


உரிய பருவத்திலும்
மறுக்கப்பட்ட தேவைகளால்
ஏங்கிப் போகிறேன்...
மகவுகளின் வயிறாற
வேடிக்கை காட்டப்பட்ட
அம்புலிகளைப் போல

இணக்கமற்ற வேளையிலும்
நாசூக்காய்தான் உரையாற்றுகிறேன்
மூத்தவர்களிடம்...
களைத்த எசமானனை
வீட்டிற் சேர்க்கும்
அனிச்சைக் காளைகளைப் போல

சொந்தத் தேவைகளுக்கான
உடல் உழைப்புக்குத்தான்
அலைக்கழிக்கப்படுகிறேன்...
கம்புக்குப் போராடி
நெரிசலில் ஜீவிக்கும்
பண்ணைக் கோழிகளைப் போல

மனித வாழ்க்கையையே
வெறுக்கத்தான் செய்கிறேன்...
அஃறிணை வாழ்க்கையின்
ஆயிரம் இம்சைகள் குறித்த
பிரக்ஞையின்றி,
யதார்த்தம் பழகாத
கவிதைக்காரன் ஒருவனைப் போல

நிதர்சனமற்ற


ലിവിങ് സ്മൈൽ വിദ്യ
ഞാൻ



அப்பாவின் மூக்குக் கண்ணாடி

கண்ணாடிக் கடைக்காரர், வகைவகையான ஃப்ரேம்களை மேஜை மேல் அடுக்கியவிதம் அழகாக இருந்தது. ஃப்ரேமுக்கு வலிக்கும் என்பதுபோல் மிருதுவாகக் கையாண்டார்.

ஏராளமான ஃப்ரேம்களில் இரண்டு கறுப்பு நிற பிரேம்கள் இருந்தன. ஆனாலும் அவை அப்பாவின் ஃபேவரைட் ஃப்ரேம் போல இல்லை.

அப்பாவின் கண்ணாடி ஃப்ரேம் கறுப்பு நிறத்தில் தடிமனாக செவ்வக வடிவில் இருக்கும். பிளாஸ்டிக்காலான அந்த ஃப்ரேமைத் தவிர்த்து வேறொன்றை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

"ஸார் இதுல ஏதாச்சும்?" சேல்ஸ்மேன் இழுத்தார்.

தலையாட்டினேன்.

"மெல்லிசா இருக்கு. தடிமனா இருக்கும். தேடிப் பாருங்களேன் ப்ளீஸ்..."

"இருக்கு ஸார். நம்ம ஷோ-ரூம்ல இல்லாததா? மேல பார்க்கச் சொல்றேன். நீங்க கொஞ்சம் வெயிட் பண்றீங்களா... ப்ளீஸ்..."

தலையாட்டிவிட்டு ஓரமாகக் கிடந்த நாற்காலியில் அமர்ந்தேன்.

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அப்பா கறுப்பு நிறத்தில் மொத்தமான ஃப்ரேமில் பொருத்தப்பட்ட செவ்வக வடிவிலான கண்ணாடியைத்தான் அணிந்து வருகிறார். அவ்வப்போது கண் பரிசோதனை செய்து கொள்வாரே தவிர கண்ணாடியின் வீரியத்தை அதிகரிக்கும் கட்டாயம் ஏற்பட்டதில்லை.

பார்வைக் குறைபாடுக்காகப் போடப்பட்ட கண்ணாடி பிற்பாடு அப்பாவின் நிரந்தர ஒன்றானது. அப்பாவின் காசி டூர் புகைப்படங்களில், கங்கைக் கரையில் வெற்று மார்போடும் கண்ணாடியோடும் தான் புகைப்படத்துக்கு போஸ் கொடுத்திருப்பார்.

கண்ணாடி போடாவிட்டால் அப்பா உருவம் தொலைந்து போவார். முகம் வெறிச்சோடி விடும்.

கண்ணாடி இல்லாமல் அப்பாவைக் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

கண்ணாடி இல்லாமல் நான் அப்பாவைப் பார்த்த கணங்கள் குறைவு.

வெள்ளைவெளேரென கதர் வேஷ்டியும், முழங்கால் வரை நீண்ட கதர் முழுக்கை சட்டையும், கறுப்பு ஃப்ரேமிட்ட மூக்குக் கண்ணாடியும் தினசரி ஷேவிங் பார்க்கும் முகமும் அப்பாவின் நிரந்தர அடையாளங்கள்.


அப்பா கண்ணாடியைக் கழற்றித் துடைப்பதுதான் அழகு. வேஷ்டி நுனியை எடுத்து ஒற்றை மடிப்பாக்கக் கண்ணாடிக்குள் வைத்து மிருதுவாகத் துடைப்பார். இடது கையில் கண்ணாடியைப் பிடித்தபடி பேசிக்கொண்டிருப்பார்.

அப்பாவை கண்ணாடி இல்லாமல் பார்த்தது இரண்டு சந்தர்ப்பங்களில். ஒரு முறை பேருந்து நிலையத்தில். இன்னொரு முறை என் சம்பந்தப்பட்ட காதல் விவகாரத்தில்.

திருவாரூர் பாபு

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. அப்பாவோடு தஞ்சாவூர் செல்வதற்காக பேருந்து நிலையத்தில் காத்திருந்தேன்.

போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர், ஓரமாக அமர்ந்திருந்த ஒரு பெண்மணியைத் திட்டிக்கொண்டிருந்தார். அவளுடைய தோற்றம் யாசகம் கேட்கின்ற வகையில் இருந்தது. போலீஸ்காரரைப் பொருட்படுத்தாமல் உள்ளங்கையில் விழப்போகும் காசுக்காகக் காத்திருந்தாள். போலீஸ்காரர் வார்த்தைகளில் ஏதோ அத்துமீறல் இருந்திருக்க வேண்டும். பொறுமையாக இருந்த அந்தப் பெண்மணி சத்தம் போடத் தொடங்கினாள்.



அவ்வளவுதான். கான்ஸ்டபிள் கையில் வைத்திருந்த லத்தியால் பளிச்சென பெண்மணியின் முதுகு, கைகள் என விளாசத் தொடங்கினார்.

பேருந்து நிலையத்தில் இருந்த கூட்டம் இதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அந்தப் பெண்மணி வலியாலும் அவமானத்தாலும் துடித்தாள். அப்பா இதைக் கவனித்துவிட்டார்.

அப்பாவின் கோபத்தை அப்போது தான் நான் அருகில் இருந்து பார்த் தேன். போலீஸ்காரர் என்கிற பயமேதும் இல்லாமல், அப்பா அவரை நோக்கிப் பாய்ந்தார். கையில் இருந்த லத்தியைப் பிடுங்கித் தூர எறிந்தார். லத்தியை உருவிய வேகத்தில் அப்பாவின் மூக்குக் கண்ணாடி எகிறிப் போய் விழுந்தது.

போலீஸ்காரர் முகம் மாறினார். கூட்டம் பயந்து பின் வாங்க... எனக்கு உதறல் எடுத்தது.

''பொம்பளை தனியா இருந்தா என்ன வேணா பேசுவியா... அடிப்பியா...? எஸ்.பி.கிட்ட கம்ப்ளெயிண்ட் பண்ணவா?''

அப்பாவின் தார்மிகக் கோபம்... முகத்தில் இருந்த ரௌத்ரம்... மற்றும் அவரது தோற்றம் போலீஸ் காரருக்குப் பயமேற்படுத்தியிருக்க வேண்டும். அப்பா மேல் அவரது ஆத்திரம் திரும்பப் போகிறது என்கிற எனது கணிப்பு பொய்யாகியது!

அப்பா, எல்லை மீறிய கோபத்தில் வேகமாக நடந்து சென்று கண்ணாடி இல்லாமல் பேருந்தில் ஏறி அமர்ந்தார்.

நான் கண்ணாடியோடு

ஓடினேன்.

அப்பா, கண்ணாடியை வாங்கி வேஷ்டியில் துடைத்து அணிந்தவுடன்தான், நான் நிதானத்துக்கு வந்தேன்.

தாமரை, எனது நெருங்கிய உறவுக்காரப் பெண். எம்.காம். முடித்துவிட்டு வேலைவெட்டியில்லாமல் நான் ஊர் சுற்றிக்கொண்டிருந்த நேரத்தில் ஏற்படுத்தப்பட்ட காதல் அது.

உரிமையோடு விதைக்கப்பட்ட காதல். கிட்டத்தட்ட முறைப்பெண்; யார் எதிர்க்கப் போகிறார்கள் என்கிற தைரியம் வேறு.

பழனியாண்டவர் கோயிலில் வெள்ளிக்கிழமை மாலை சாமி கும்பிடல். உறவினர் வீட்டு விசேஷங்கள்... இவற்றில் விழி மொழிந்த காதல் ஒருநாள் வீட்டுக்கு வழிமொழியப்பட்டது.

அண்ணனுக்குத் திருமணமாகாத நிலையில் நான் மணவாழ்க்கையைப் பற்றி யோசிக்காத நேரத்தில், அப்பாவும் அம்மாவும் எதன் குறித்தோ அவளை மருமகளாக்கிக் கொள்வோம் என்கிற எண்ணத்தில் எடுக்கப்பட்ட முடிவை அமுல்படுத்த எண்ணியிருக்க வேண்டும்.

அது ஒரு மார்கழி மாதம். மாலையில் நான் இரண்டாவது ரவுண்ட் நண்பர்களுடன் அரட்டை அடிப்பதற்கு முன்பு ரிலாக்ஸ் செய்வதற்காக வீட்டுக்கு வந்த போது அம்மா முகம் டல்லடித்தது.

''தம்பி... அப்பா, மாமா வீட்டுல கண்ணாடி விட்டுட்டு வந்துட்டாங்க... போய் எடுத்துட்டு வா...''

இரண்டாவது தெருவில் உள்ள மாமா வீட்டுக்கு சைக்கிளில் சென்று கண்ணாடியை எடுத்துக்கொண்டு திரும்பிய நான் எதையுமே அறிந்திருக்கவில்லை.

''சரி விடு. அந்த விவஸ்தை கெட்ட குடும்பத்துல பொண்ணைக் குடுக்க அவன் தீர்மானிச்சிட்டான். தாமரைக்கு இது தெரியாம இருக்காது. இவன்தான் அவ பின்னாடி சுத்திக்கிட்டு இருக்கான்.

''மூக்குக் கண்ணாடியை விட்டுட்டு வர்ற அளவுக்கு உங்களுக்குக் கோபம் வந்துட்டாக்கும். ரெண்டு தெரு கண்ணாடி இல்லாம நடந்து வந்திருக்கீங்க... பஸ் போற ரோடு...''

''எல்லாம் இவனுக்காகத்தான். ஆசைப் பட்டுட்டானே... அவன்கிட்ட தடாலடியா இதைச் சொல்லாத... பக்குவமா சொல்லணும்...''

இரவு. அப்பா சாப்பாடு மேஜையில் அம்மாவிடம் பேசிக்கொண்டிருந்ததை



அரைத் தூக்கத்தில் நான் கேட்டபோதுதான் அப்பா கண்ணாடியைத் தவற விட்டு வந்ததற்கானக் காரணம் புரிந்தது.

எனக்குத் தாமரை மீது கோபம் வந்தது.

அடுத்த நாளே, 'தாமரைக்கும் இந்தக் கல்யாணம் உடன்பாடு. வேலை வெட்டி இல்லாத என்னைவிட அம்மா அப்பா பார்த்த டாக்டர் மாப்பிள்ளை பெரிது

என்கிற முடிவுக்கு அவள் வந்துவிட்டாள். சின்ன சிரிப்பும் சிதறிய புன்னகைகளும் வெறும் மாய்மாலம் என்று தெரிய வந்தபோது எனக்கு ஏமாற்றம், வேதனை, சோகம் எதுவும் எழவில்லை. ரோஷம் வந்தது.

யாருக்கு வேலை இல்லை?

உனக்கு மட்டும்தான் அப்பா, அம்மா பெரிதா? அவர்கள் வாக்கு, வேதவாக்கா?

மனத்துக்குள் தன்முனைப்பு கொதிக்க, அடுத்த வாரமே சென்னைக்குப் பேருந்து ஏறியது பதினைந்தாண்டு காலத்துக்கு முந்தைய நிகழ்வு.

கண்ணாடி விட்டு வருகிற அளவுக்கு அப்பாவுக்குக் கோபமேற்றி விட்டார்களே என்கிற எண்ணம் என்னை நீண்ட நாட்கள் அலைக்கழித்துக் கொண்டேயிருந்தது. அதற்குப் பிறகு வேலை கிடைத்து, வாழ்க்கையில் உயர்ந்துகொண்டே போன எந்தச் சந்தர்ப்பத்திலும் தாமரையை நினைத்துக்கூட பார்த்ததில்லை. உனக்கு மட்டும்தான் டாக்டர் மாப்பிள்ளை பார்ப்பார்களா? எனக்கும் நல்ல பெண்ணாகப் பார்த்துத் திருமணம் செய்து வைப்பார்கள். கூட்டம் சேர்ந்துக்கொண்டு என் அப்பாவைச் சிறுமைப் படுத்தி விட்டாயே'' என்கிற வைராக்யம் நீண்ட நாட்கள் எனக்குள் கொதித்துக் கொண்டே இருந்தது.

எழிலான வாழ்க்கைதான்...

(Life is beautiful; But conditions apply)

மாமா வீட்டில் அப்பா கண்ணாடியைக் கழற்றியது மனத்துக்குள் ஓடியபடி இருந்தது.

ஒவ்வொரு முறை அப்பா சென்னைக்கு வரும்போதெல்லாம் அவருக்கு ஏதாவது பொருள் வாங்கித் தர வேண்டும் என்கிற ஆசை எழும். ஆனால், நல்ல புத்தகங்களைத் தாண்டி எதையுமே வாங்கிக் கொடுக்க முடிவதில்லை. அப்பா அறிவால் சிறந்த அளவுக்கு ஆசையால் சிறக்கவில்லை. அப்பாவும் என்னிடம் எதையும் கேட்டதில்லை. திடீர் உடல்நலக் குறைவால் இந்தமுறை சென்னைக்கு வந்தபோது, நேற்றுதான் முதன்முறையாகக் கேட்டார்.

''இந்தக் கண்ணாடி ஃப்ரேம் பழசாயிட்டுப்பா. கிட்டத்தட்ட நாப்பது வருஷமா போட்டிருக்கேன். லூசா போயிட்டுது. காதுல நிக்க மாட்டேங்குது. இதேமாதிரி வேற வாங்கிட்டு வாயேன்.''

பளாரென பழைய நினைவுகள் உள்ளுக்குள் ஊர்வலம் வருக்க... அப்பாவின் கண்ணாடியை செல்ஃபோனில் படமாக எடுத்துக்கொண்டு உடனே புறப்பட்டேன்.

''ஸார் இதுவா பாருங்க.''

பார்த்தேன். அச்சு அசலாக அப்படியே அப்பாவின் கண்ணாடி ஃப்ரேம்.

''பிளாஸ்டிக் வித் சிந்தடிக் ஸார். இந்த ஃப்ரேம் நாப்பது வருஷமா இருக்குன்னு சொன்னீங்கல்ல... இது நூறு வருஷம் இருக்கும்.''

பணம் கொடுத்துவிட்டுக் கண்ணாடியை பிளாஸ்டிக் கூட்டினுள் போட்டு வாங்கிக்கொண்டு நகர்ந்தபோது, நேற்று மாலை, க்ளினிக்கில் கேன்சர் ஸ்பெஷலிஸ்ட் சாஸ்திரி சொன்னது நினைவில் ஓடியது.

''அப்பாவுக்குக் கண், மூளைக்குப் போற ரத்தக் குழாய்ல கேன்சர் பரவியிருக்கு. படிப்படியா பார்வை குறையும். லேட்டஸ்ட்டா ட்ரீட்மெண்ட் நிறைய வந்திருக்கு. ஆண்டவனையும் நம்புவோம்...''



இவங்க இப்படித்தாங்க... 4

"சினிமாவை விட்டு தூரம் போயிடணும்..."

நான் கிசுகிசு எழுதியிருக்கிறேனோ இல்லையோ. ஆனால் அடுத்தவர் எழுதிய கிசுகிசுவுக்கு நான் 'கைபுள்ள' மாதிரி வாங்கிக் கட்டிக் கொண்டதும், பதில் சொல்ல வேண்டியதும் இருந்தது. மீனா பிரச்னை முடிந்த கொஞ்ச நாளில் மறுபடியும் ஒரு நடிகையிடம் அகப்பட்டுக் கொண்டேன் அங்கும் காப்பாற்றியவர் கார்த்திக்தான்.

பூவிருந்தவல்லி செல்லும் வழியில் இருக்கும் ஒரு கல்யாண மண்டபத்தில் நடந்த படப்பிடிப்பில் கார்த்திக்கைப் பார்க்க போயிருந்தேன். கார்த்திக் ஷாட்டில் இருந்தார்.

நான் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அந்த ஸீனியர் நடிகை வந்தார். அவர் ரஜினிக்கு ஜோடியாக, அக்காவாக, மாமியாராக, அம்மாவாக நடித்து புகழ்பெற்ற கண்ணழகி ஸ்ரீவித்யாதான்.

அந்த வாரம் குமுதம் இதழில் அவரைப் பற்றி ஏதோ வம்பு செய்தி வெளியிட்டிருந்தது எனக்கு நினைவில்லை.

''நீங்கதானே அந்தப் பத்திரிகையில் சினிமா பகுதி எழுதுகிறீர்கள்?''- என்று கேட்டார்.

லைட்ஸ் ஆன் பகுதியில் நான் கொடுக்கிற சினிமா செய்திகள் வரும் என்பதால் ''ஆமாம்'' என்றேன்.

''அப்ப நீங்கதானா என்னைப் பத்தி எழுதியது?''

''அது நானில்லை.''

''அதுல சினிமா எழுதுறது நீங்க தானே...!''

''......''

''அப்போ வேறே யார் எழுதுனாங்க...?'' அவரது பெரிய கண்களில் கோபம் எட்டிப் பார்த்தது. குரலில் கண்டிப்பும் அழுத்தமும் இருந்தன.

அப்போது ஷாட் முடிந்து வந்த கார்த்திக் வழக்கமான துள்ளல் சிரிப்புடன் என்னைப் பார்த்தார். சீனியர் நடிகை எல்லாவற்றையும் சொல்ல அமைதியாகக் கேட்டுக் கொண்டார். என்னைத் திரும்பிப் பார்த்தார்.

'அது நானில்லை ஸார்!'- என்றேன்.

என்னைப் பற்றிச் சொல்லி ஒருவழியாகச் சமாதானப்படுத்தினார். அதற்குள் அஸிஸ்டெண்ட் டைரக்டர் வந்து ''மேடம் ஷாட் ரெடி'' என்றார். அவர் நடிக்கச் செல்ல, நான் கார்த்திக்கிடம் விடை பெற்று ஜூட்டானேன்.

வெளித் தோற்றத்தில் மற்றவர்களைக் கொக்கி போட்டு இழுக்கும் அளவுக்குப் பளிச்சென்றிருக்கும் நடிகைகளின் முதுகு பக்கம் கனமான சோகம், ஏக்கம், எதிர்பார்ப்புகள், அவஸ்தைகள், ஏமாற்றங்கள் நிறைந்தவை.

ஷாட் முடிந்து வந்த ரம்பாவிடம் அந்த வாரம் அவரைப் பற்றி வந்திருந்த கிசுகிசுகள் பற்றி கேட்க ரெடியானேன். கவர்ச்சிப் புயல்



என்று அழைக்கப்படும் ரம்பாவுக்குள் ஒரு மனுஷி இருக்கிறார், அந்த மனுஷி எப்போதாவது மனம் திறந்து தமது ஆசாபாசங்களை, எதிர்கால கனவுகளை, சினிமாவுக்கு அப்பாற்பட்ட வாழ்வைக் குறித்துப் பேசுவதுண்டு. தனக்கு நெருக்கமான நண்பர்களிடம் தனது இன்னொரு முகத்தைக் காண்பிப்பார் ரம்பா.

சில நட்சத்திரங்கள் இவரை 'ரம்', 'ரம்ஸ்' என்றழைப்பார்கள். வீட்டில் 'ஜெயம்மா' என்பார்கள். அப்படி அழைத்தால் சந்தோஷப்படுவார்.

'ரம்பா தமது தொடைகளை இன்ஷ்யூர் செய்துள்ளார்' என்பது போன்ற செய்திகள்



"கல்யாணத்துக்கு அப்புறம் சினி ஃபீல்டை விட்டு விலகிடணும்"

அப்போது வெளியாகியிருந்தன. அதைப் பற்றிய பேச்சு எழுந்தபோது, ''இந்த மாதிரி முட்டாள்தனமான வேலைகளை நான் செய்யலை. நாம உயிரோட இருக்கிற வரைக்கும்தான் உடல் உறுப்புகளுக்கு மதிப்பு மரியாதையெல்லாம். உடலை விட்டு உயிர் போன பின்னாடி எல்லாம் மண்ணு தானே! உபயோகமாகக் கூடிய என் கண்களைத் தானம் பண்ணலாம்னு நினைக்கிறேன். ஆனா, எங்கம்மா அப்படி செய்யாதேனு சொல்றாங்க.

சபீதா ஜோசப்

என்ன செய்யலாம்னு யோசிக்கிறேன்.

என்னோட தோழிகள் சிலர் பேச்சு வாக்குல, கேட்பாங்க: 'நீ ஷாலினி மாதிரி ஒரு நடிகரை மேரேஜ் பண்ணுவியா... இல்லே தேவயானி மாதிரி டைரக்டரை மணப்பியா?'

ஒரே துறையைச் சேர்ந்த இரண்டு பேர் கல்யாணம் பண்றது சரியில்லை.

கல்யாணம் பண்ணிக்கிட்ட பிறகு சினிஃபீல்டை விட்டு விலகிடணும். மறுபடியும் நடிக்கிறது சரியில்லை. இதனால் மரியாதை குறைஞ்சிடும்.

என்னைப் பொறுத்த வரை மேரேஜுக்குப் பிறகு சினிமாவை விட்டுத் தூரம் போயிடணும். ஒரு சராசரி இந்தியப் பெண்ணா, என் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல அம்மாவா, என்னுடைய அம்மா, அப்பா மாதிரி ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கிட்டு விட்டுக் கொடுத்து மகிழ்ச்சியா வாழணும்.



எல்.கே.ஜி. ஃப்ராக், குடும்ப ஆல்பம் எல்லாம் ஒரு சிறுமியின் குதூகலத்துடன் காண்பித்தார்

எதிர்காலத்தில் என்னோட பிள்ளை என் சினிமா வாழ்க்கையை தப்பாக விமர்சனம் செய்து விடக் கூடாது என்பதில் கவனமாயிருக்கேன். இதெல்லாம் பத்திரிகைக்காகச் சொல்லலை. உங்களுக்காகச் சொன்னேன்.''

அப்போது அஸோஸியேட் வந்து, ''லஞ்ச் பிரேக் மேடம்'' என்று நினைவுபடுத்தினார்.

''சரி வாங்க எதிர்த்த தெருவுலதானே வீடு. அங்கே போய்ப் பேசுவோம்'' என்றார். அவரது காரில் பேசிக் கொண்டே சென்றோம்.

ரம்பாவின் பெரிய வீட்டின் நான்கு பக்கமும் கேமரா வைத்திருக்கிறார்கள். வீட்டுக்கு யார் வந்தாலும் உள்ளே தெரிந்து விடும்.

வீட்டில் அவரது தனி அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஷீரடி பாபா படம் மட்டும் பெரிதாக இருந்தது.

ரம்பா, எல்.கே.ஜி. படித்த காலத்தில் அணிந்த ஃப்ராக், ஸ்கூல் பேக், குட்டி போடுவதற்காகப் பாடப் புத்தகத்தின் நடுவில் வைத்திருந்த மயிலிறகு, குடும்ப ஆல்பம் எல்லாம் சிறுமியின் குதூகலத்துடன் காண்பித்து மகிழ்ந்தார்.

மேக்கப் இல்லாத ரம்பாவின் ஸாரி ஜெயம்மாவின் உலகம், சிந்தனைகள் ரம்மியமானவை.

(அடுத்த வாரம் நெப்போலியன்)

ரீடர்ஸ் கார்னர்

மாவீரன் நெப்போலியன் செயின்ட் ஹெலெனா தீவில் சிறைவாசம் அனுபவித்த போது அவனைக் காணவந்த நண்பர் விலை மதிப்புள்ள செஸ் காய்களைப் பரிசளித்தார். நெப்போலியன் தனியாக விளையாடி பொழுது போக்கினான். கி.பி.1821ம் ஆண்டில் அவன் இறந்த பிறகு சதுரங்கக் காய்கள் ஏலத்தில் விற்கப்பட்டு பலர் கைகளுக்கு மாறின. காய்களை ஏலத்தில் எடுத்த நபர் 2002ம் ஆண்டு வாக்கில் சதுரங்க காய் ஒன்றைத் திருகிப் பார்த்தார். அதனுள் சிறையிலிருந்து தப்பித்துச் செல்வதற்குரிய வரைபடம் இருந்தது. நெப்போலியன் காய்களைத் திறந்து பார்த்திருந்தால் சிறையிலிருந்து தப்பியிருப்பான். சரித்திரமே மாறியிருக்கக்கூடும்!

எஸ்.பக்கிரிசாமி,
திருவாரூர்





'யூத்' துவம்

அப்பா எனக்கு ஒரு பைக் வாங்கணும்...
கடவுள் எதுக்கு உனக்கு ரெண்டு கால் கொடுத்திருக்கார்..?
ஒண்ணு ப்ரேக் போட... ஒண்ணு கியர் மாத்த...

ஸ்டூடண்ட்ஸ் நீங்க எல்லாம் வைரம் மாதிரி...
நீங்களும்தான் ஸார்...
எப்படி..?
வைரத்தை வைரத்தால் தானே அறுக்க முடியும்.

எங்க வீட்ல எங்க பொண்ணு டீ.வி,
ரேடியோ எதையும் தொட மாட்டா...
அது என்ன அதிசயம்..? எங்க பையன்
புஸ்தகமே தொடமாட்டான்









கூடவே வரும் மயில்!

பிரபல சிற்பி சேனாதிபதியின் மகள் ஹேமலதா. ஒரு சில பெண்களே பிரகாசிக்கும் சிற்பத் துறையில் பரவலாக அறியப்பட்டவர். அவரிடம் பேசியபோது...

''படைப்பாக்கத்துக்குப் படிப்பு அவசியமே இல்லை ஸார், நான் முறையா ஓவியம்/சிற்பம் படிக்கலை. என்னோட படிப்பு அப்பாவோட அனுபவம் தான். சோழ மண்டல ஓவியர் கிராமத்தில் கலைகளைச் சுவாசித்து வளர்ந் ததால எனது பொழுதும் போக்கிடமும் ஆறுதலும் சிற்பம்தான். சிற்பம் கடினமான துறை. கொஞ்சம் உடல் உழைப்பும் முப்பரிமாண அறிவும் வேணும். என்னோட எல்லா தொடக்கப் பணியிலும் மயில் கூடவே வந் திருக்கு. நான் முதல்ல வரைஞ்சதும் செதுக்கினதும் மயில்தான். என்னோட இலக்கு அப்ட'ா பேரைக் காப்பாத்தற பொண்ணா இருக்கணும் கலை யில'' என்கிறார் ஸ்டேட் அவார்டு பெற்ற இந்தப் பெண் சிற்பி.

(நீ காப்பாத்திட்டம்மா... இந்தச் சிற்பங்களே சாட்சி!) – **அமிர்தா**

படங்கள்: **சின்னராஜ்**







துணிவென்னும் செல்வம் தருபவள்

ஏகாகினீ - பரமாத்மாவோடு ஏகமாக இருக்கக்கூடியவள். ஐக்கியப்பட்டு இருக்கக் கூடியவள் ஸ்ரீ லலிதாம்பிகை

பூமரூபா - பரமாத்ம ஸ்வரூபமாக இருக்கக் கூடியவள்.

நிர்த்வைதா - 'த்வைதம்' என்கிற இரண்டாக இல்லாமல் ஏகமாக (ஒன்றாக) இருப்பவள்.

இங்கே ஒரே விஷயத்தைத்தான் இரண்டு விதங்களாகச் சொல்லியிருக்கிறது. **பூமரூபா** என்கிறபோது பரமாத்ம ரூபமாகவே இருக்கக்கூடியவள். பரமாத்மாவிலிருந்து இவள் வேறுபட்டவள் இல்லை என்பதனாலே **நிர்த்வைதா** இவள் அதே பரமாத்மாதான். எந்த சிவனைப் பரம்பொருள் என்று சொல்கிறோமோ, அந்த சிவனின் சக்தியாக இருக்கக்கூடியவள்; அதிலிருந்து வேறுபட்டவள் இல்லை. இரண்டு விதமாகவும் சொன்னால்தான் நமக்குப் புரியும் என்பதற்காக இப்படிச் சொல்லியிருக்கிறது. இதோடு நிறுத்தி விடவுமில்லை! அடுத்த திருநாமத்தில் இன்னும் கொஞ்சம் அழுத்தம் கொடுத்து நிர்ணயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது:

த்வைதவர்ஜிதா - இரண்டாக, பரமாத்மாவிலிருந்து பிரிந்து வேறாக இருக்கக் கூடிய தன்மை அற்றவள் **த்வைத வர்ஜிதா.**

அன்னதா - அன்னம் தரக்கூடியவள். உலகில் இருக்கும் உயிர்களுக்கெல்லாம் உணவிடுபவள். அன்ன பூர்ணேசுவரியே அம்பாள் தானே!

எது தனம்?

வசுதா - தனம் தரக்கூடியவள். அபிராமி பட்டர் பாடினாரில்லையா? 'தனம் தரும் கல்வி தரும்.. தெய்வ வடிவம் தரும்' என்று பாடினாரே! நிஜ ஸாயுஜ்யம் என்பதுதான் அந்த தெய்வ வடிவம். அம்பாளை வணங்கினால் என்ன கிடைக்கும்? தனம் கிடைக்கும், கல்வி கிடைக்கும் என்று அபிராமி பட்டர் அதோடு நிறுத்தி விடவில்லை. ரொம்ப அழகான விஷயத்தைச் சொன்னார் - *ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும்!*

அம்பாள் உபாஸகர்களுக்கு என்ன கிடைக்கும் என்று கேட்டால், ஒரு நாளும் தளர்ச்சியோ களைப்போ இல்லாமல் அன்றன்றைக்கு அவரவர்கள் என்ன செய்யவேண்டுமோ அவை எல்லாவற்றையும் செய்யக்கூடிய தன்மை கிடைக்கும். 'ஐயோ!' என்று புலம்பிக் கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்து விடுகிற தன்மை இல்லை அது. அதனால்தான் சாக்த வழிபாட்டு முறையில், யாருக்கு எப்போது சாமீப்யம் (அம்பாளின் அண்மை) கிடைக்கும் என்று கேட்கிறபோது, 'அவரவர்கள் இருக்கக்கூடிய நிலையில் இருந்தபடியே, அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட முறையில் அவளை உபாஸித்தால், அதனால் கிடைக்கக்கூடியதுதான் சாமீப்யம். அவரவர்கள் இருக்கக்கூடிய சூழலை அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை இருக்கிறதே - 'ஐயோ! அது கிடைக்கலியே, இது கிடைக்கலியே' என்று கலங்காமல் - ஒரு நாளும் தளர்வறியா மனம் படைத்திருத்தல் - அதுதான் செல்வம்!

4

சுதா சேஷய்யன்


ஸ்ரீ ஆதிசக்தீஸ்வரி
கோபுராபுரம்
ஸ்ரீ லலிதா
நான்காம் பாகம்

அபிராமி பட்டரின் நெஞ்சுரம்

அபிராமி பட்டர் அமாவாசை திதியை பௌர்ணமி என்று சொல்லிவிட்டார்! நிலவு உதயமாகாவிட்டால் மன்னன் சிரச்சேதம் செய்துவிடுவான் என்கிற கட்டத்தில், அபிராமி அந்தாதியைப் பாடுகிறார். அவர் எழுபத்தொன்பது பாடல்கள் பாடிய பிறகுதான் நிலா வந்தது என்பார்கள். ஆனால், அந்த அபிராமி அந்தாதியின் நூறு பாடல்களுள் எங்கேயாவது ஓர் இடத்திலாவது 'அம்மா! எனக்கு இப்படி ஒரு கஷ்டத்தைக் கொடுத்துவிட்டாயே அம்மா!' என்று அவர் சொன்னதாக இருக்கிறதா!?

சாதாரணமாக என்ன சொல்லத் தோன்றும்? ''அம்மா! நான் உன்னைப் பார்த்துக் கொண்டேயிருந்தேனா, அதனால் அமாவாசை என்று சொல்லாமல் பௌர்ணமி என்று கூறிவிட்டேன்!'' என்று சொல்லத் தோன்றும் அல்லவா?

ஆனால், ''நான் உன்னையே பார்த்தேன் தாயே. அதனால் தப்பு பண்ணிவிட்டேன்'' என்று அபிராமி பட்டர் சொல்லவில்லை. ''என் நாக்கிலே வந்து உட்கார்ந்து இப்படி மாற்றி விட்டுட்டியே! நான் என்ன தப்பு பண்ணினேன்?'' என்று புலம்பவில்லை. குறைந்தபட்சமாக, ''உன்னைப் பார்த்துக் கொண்டிருந்ததால் இப்படித் தப்பு பண்ணி விட்டேன்'' என்று கூட அவர் சொல்லவில்லை! அதற்குப் பதிலாக என்ன சொல்கிறார்...?

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும்
தளர்வறியா
மனம் தரும்... என்று பாடுகிறார்!

'என் மனத்திலே தளர்ச்சியே வராத நிலையை என் தாய் எனக்குத் தருவாள்' என்றால், எவ்வளவு நம்பிக்கை இருந்தால் அந்த வார்த்தை வரும்! அம்பாள் உபாஸகர்களுக்கு அந்த நம்பிக்கை உண்டு. அதனால்தான் பாரதி பாடுகிறபோது, 'எனக்கு நோய் வேண்டாம்' என்று கேட்கவில்லை... சாதா



ரணமாக நோயற்ற வாழ்க்கை வேண்டும் என்று கேட்பது வழக்கம். மகா ஞானியான வள்ளலார்கூட 'நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும்' என்று பாடினார். ஆனால், பாரதியாரோ... 'உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும்' அம்பிகை பராசக்தியின் திருப்பாதங்கள் என்றுதான் பாடுகிறார்! உம்பர்கள் என்றார் தேவர்கள் - அங்கே இருக்கக் கூடியவர்கள். இம்பர்கள் - இங்கே இருக்கக்கூடிய மனிதர்கள் - எந்த மாதிரியான வாழ்வு தருகிறாள் அவள்? அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும் அச்சமில்லாதபடி வாழக்கூடிய வாழ்வு! அம்பு என்றால் வெளியிலிருந்து வரும் தாக்குதல். எவ்வளவு பிரச்னைகள் வந்தாலும் சரி, நெருப்பு மாதிரி வாழ்க்கை தகித்தாலும் சரி, அதற்கெல்லாம் அச்சமில்

லாதபடி ஒரு வாழ்க்கை கொடுக்கிறாள் பராசக்தி என்றால், அவள் துணையிருந்தால் இதையெல்லாம் தாண்டி வந்துவிட முடியும் என்றுதானே அர்த்தம்! இந்த உறுதியை, தைரியத்தைத் தருபவள் அம்பாள் என்பதால் **வசுதா**. வசுதா தருகிற தனம் - மெய்யான செல்வம் - இந்தத் துணிவும் உறுதியும்தான்.

மூத்தவள்

வ்ருத்தா - வ்ருத்தா என்றால் வயதானவள் என்று அர்த்தம். ரொம்ப ரொம்ப வயதானவள் அம்பாள்! இவ்வளவு நேரம் அவள் யௌவனமானவள் என்றும் இளமையோடு இருக்கக்கூடியவள் என்றும் சொல்லிவிட்டு, இங்கே திடீரென்று வ்ருத்தா என்றால் என்ன அர்த்தம் இதற்கு?

அம்பாள் என்றைக்குப் பிறந்தாள் என்று யாருக்காவது தெரியுமா? இந்த ஜகத்தையே அவள்தான் தோற்றுவித்தாள் என்கிறபோது, அது தோன்றுவதற்கு, முன்பிருந்தே அவள் இருந்திருக்க வேண்டுமல்லவா! 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்...' அவள். ஆனால் அதே அம்பாள் இளமையோடும் இருக்கக்கூடியவள்.

அபிராமிபட்டர் எடுத்துக் கொண்டார் இதை. 'என்றும் மூவா முகுந்தர்க்கு இளையவளே!' என்று பாடினார் அவளை. வார்த்தை இங்கே எப்படி வந்து விளையாடுகிறது பாருங்கள்! வயதே ஆகாத மஹாவிஷ்ணு. அந்த விஷ்ணுவுக்கு இளைய சகோதரி - செங்கண்மால் திருத்தங்கச்சி!

வெறுமே 'பத்மநாப சகோதரியே' என்று குறிப்பிட்டிருந்தால் விஷ்ணுவுக்கு வயதாகிவிட்டது என்று கொள்ளலாம். ஆனால், இங்கே மூவா முகுந்தர் என்றதால் அவருக்கே வயதாகவில்லை. ஆனால், அதற்கும் முன்னதாக ஒரு வார்த்தை போட்டாரே அபிராமி பட்டர் - அதிலேதான் பிரச்னை. இந்த தேசத்தின் ஸ்திரம், பாரம்பரியம் என்னவென்று தெரியவில்லையென்றால் அந்தப் பாட்டுக்கு வியாக்யானம் எழுதுகிறபோது கட்டாயம் சிக்கல் வரும்.

பூத்தவளே! புவனம் பதினான்கையும்
பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே செறி
யல்லா கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்
தர்க்கு இளையவளே
மாத்தவளே...

கறைக்கண்டனுக்கு மூத்தவளே! அம்பாள் யார்? கறைக் கண்டனான நீலகண்டன் - பரமேசுவரன்... அவனுக்கு மூத்தவள்!

இந்த வார்த்தையை அப்படியே எடுத்துக்கொண்டு பொருள் பார்த்தால், அம்பாளைவிட சிவன் இளையவர் என்று ஆகிவிடுகிறது! ஆனால், அப்படி அகராதிப் பொருள் கொள்வது சரியல்ல. இந்த தேசத்தினுடைய மரபு, ஒருவரை இளையவர் அல்லது மூத்தவர் என்று சொல்வது வயதை வைத்து அல்ல, ஆற்றலை வைத்துத்தான் மூத்தவர் - இளையவர் என்பது நிர்ணயிக்கப்படுகிறது. வயதிலே குறைந்தவர்களைக்கூட இங்கே ''அண்ணா!'' என்று கூப்பிடுவது உண்டு. இதற்கு, எல்லோருக்கும் தெரிந்த ராமாயணத்திலே முக்கியமான நிருபணம் வருகிறது.

(வளரும்)

என் மனத்திலே தளர்ச்சியே வராத நிலையை என் தாய் எனக்குத் தருவாள் என்றால், எவ்வளவு நம்பிக்கை இருந்தால் அந்த வார்த்தை வரும்!

''பிளஸ் ஒன் படிச்சதுலேருந்து காலேஜ்ல பி.எஸ்சி படிச்சு முடியற வரைக்கும் நான், பகுதி நேர விவசாயி. கடந்த அஞ்சு வருஷமா என்னோட முழு நேர வேலையே விவசாயம்தான்'' என்கிறார் இருபத்தைந்து வயதாகும் இளங்கலை பட்டதாரி ரமேஷ். ''விவசாயம் தவிர வேறெந்தத் தொழிலும் தெரியாது எனச் சொல்வதில் எனக்குக் கூச்சம் ஏதுமில்லை'' என்கிறார்.

திருச்சியிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் உள்ள போதாவூர் கிராமம்தான் ரமேஷுக்குப் பூர்வீகம். ''வேளாண் தொழில் எங்கள் பரம்பரையின் ரத்தம் சதையுடன் இரண்டறக் கலந்தது'' எனக் கூறுகிறது அவரது குடும்பம்.

அப்பா, அம்மா இருவரும் விவசாயிகள். ரமேஷின் மூத்த சகோதரர்கள் இருவரும் விவசாயம் சார்ந்த வேலையில்தான் இருக்கின்றனர்.

''நான் அஞ்சாவது ஆறாவது படிச்சப்பவே அப்பாவோட, காட்டுல நின்னு உதவி ஒத்தாசையா ஏதாவது செஞ்சுக்கிட்டு இருப்பேன். அப்பவே விவசாயம் செய்யணும்ங்கிற ஆசை என்னோட அடிமனசுல வேர் பிடிச்சுப் போச்சு. பிளஸ் டூ பாஸ் பண்ணினதும் பி.எஸ்ஸி அக்ரி படிக்கணும்னு தோணிச்சு. அப்ளை பண்ணியிருந்தேன். கிடைக்கலை. அப்புறமாத்தான் பி.எஸ்ஸி பாட்டனி சேர்ந்தேன்.

மத்த விவசாயிங்க போல சாதாரணமா, விவசாயம் பண்ணக்கூடாது. அது தொடர்பா படிச்சுத் தெரிஞ்சுக்கிட்டு, மத்தவங்களைக் காட்டிலும் நல்லா செய்யணும்னு எனக்கு ஆசை. அதனால படிப்புல தீவிரமா கவனம் செலுத்தி, சிறப்பாகவே படிச்சேன். தேடித் தேடிப் போய் ரொம்ப விஷயங்களைத் தெரிஞ்சுக்கிட்டேன். பி.எஸ்ஸி, தாவரவியல் இறுதியாண்டு படிச்சிட்டு இருந்தப்ப, எங்க வாழைத் தோட்டத்துலயே என்னோட திறமையை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு கெடைச்சது. அதைக் கெட்டியா பிடிச்சுக்கிட்டேன்'' என்று கொக்கி போடுகிறார்.

''ஒரு ஏக்கர்ல வாழை போட்டிருந்தாரு அப்பா. சரியா கவனிக்கலை. வாழைங்க எல்லாமே ரொம்ப சுணக்கமா இருந்திச்சு. இலை வெட்ட விட்டுடலாம்னு அப்பா முடிவெடுத்திருந்தார். கொஞ்சம் பொறுங்கப்பானு சொல்லிட்டு, வாழைகளுக்கு இடையிலே கிடங்கு

"நெல் வயல்ல சொட்டு நீர்ப் பாசனத்தைப் பயன்படுத்திய முதல் விவசாயிங்கற பேரு எனக்குக் கிடைக்கும்னு நம்பறேன்."



யூத் விவசாயி

வெட்டி கொத்திப் போட்டேன். உரம் வெச்சுத் தண்ணீர் விட்டேன். தொடர்ந்து செஞ்சேன். என்ன ஆச்சர்யம்? வெறும் இலையை வெட்டிக் காசு பார்த்தா போதும்னு இருந்த நிலையில, வாழைத் தார்கள் குலை தள்ளி அந்த வருஷம் அமோக மகசூல். நல்ல வருவாய்.

காலேஜ் படிப்பு முடிச்சு வந்ததும், வீட்டுல சொல்லிட்டேன். எந்த ஆஃபீஸ் வேலைக்கும் (அது விவசாய ஆஃபீஸா இருந்தாலும்) நான் போக மாட்டேன். விவசாயம் மட்டும்தான் செய்வேன்னு. வீட்டுல மறுப்பு ஏதும் சொல்லலை.

இப்ப எங்க அஞ்சு ஏக்கர்ல, வாழை ரெண்டு ஏக்கர், மல்லிகைப் பூ சாகு படி ஒரு ஏக்கர், செம்மை நெல் சாகு படி ரெண்டு ஏக்கர். விவசாயிகளுக்குப் பெரும் பிரச்னை பாசனத் தண்ணீர். அதை ரொம்ப சிக்கனமா பயன்படுத்த ஏற்பட் டதுதான் சொட்டு நீர்ப்பாசன முறை. அந்த முறைகளைத் தெளிவா தெரிஞ் சிக்க, மகாராஷ்டிரா மாநிலத்துல ஜல்கான் நகர்ல நடைபெற்ற பயிற்சி முகாம்ல சமீ பத்துல கலந்துக்கிட்டேன். என்னோட செம்மை நெல் சாகுபடி வயல்ல, சொட்டு நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்த பரீட் சார்த்தமா இறங்கியிருக்கேன். இன்னும் அது செயல்படத் தொடங்கலை. அதுல ஜெயிச்சுட்டா, அனேகமா நெல்வயல்ல சொட்டு நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்திய முதல் விவசாயிங்கற பேரு எனக்குக் கிடைக்கும்னு நம்பறேன்'' என்றவர் மல்லிகை சாகுபடியையும் விட்டு வைக்க வில்லை!

''பொதுவா மாசி முதல் வாரத்து லேருந்துதான் மல்லிகைப் பூ பறிக்கக் கிடைக்கும். என்னோட மெத்தட்ல தைப் பொங்கல் அன்னைக்கே மல்லிகைப் பூ பறிக்கக் கெடைச்சுடும்.

புதுசு புதுசா நெறைய வழிமுறைகள் உருவாகணும்னா என் போன்ற இளை ஞர்கள் பெரும்பாலோர் விவசாயத்துல ஈடுபடத் துணிஞ்சு முன் வர வேண்டும்!'' என்கிறார் இந்த யூத் விவசாயி.

செய்திச் சித்திரம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



✱ ரமேஷ்

“ஆஃபீஸ்க்குப் போக மாட்டேன்!”

பிரச்னை

அண்டை மாநிலத்துடன் தண்ணீர்த் தகராறு என்பது தமிழ்நாட்டுக்கு விடுக்கப்பட்ட சாபம் போலும். அப்படி பிரச்னை வரும்போதெல்லாம் தமிழ்நாட்டு நலனை விட அவரவர் அரசியல் நலன்கள்தான் முன்னுரிமை பெறுகின்றன. லேட்டஸ்ட் உதாரணம்: முல்லைப் பெரியாறு விவகாரம். இந்த விவகாரத்தில், ''கருணாநிதி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டார்'' என்று எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா குற்றம் சாட்டினார். உடனே, ''மத்திய அரசு புதிய அணை பற்றி சர்வே எடுக்க கேரள அரசுக்கு அனுமதி அளித்திருக்காது'' என்று நம்புவதாக முதல்வர் கருணாநிதி சொன்ன அடுத்த சில நாட்களிலேயே தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் முறையீடு செய்துள்ளது!





1979ஆம் வருடம் மலையாள மனோரமா, 'முல்லைப் பெரியாறு அணை மிகவும் பலவீனமாக இருக்கிறது; அதில் அனுமதிக்கப்பட்ட அளவான 152 அடி வரை தண்ணீரைத் தேக்கினால், அணை உடைந்து பேரழிவு ஏற்படும் ஆபத்து இருப்பதாக கட்டுரை வெளியிட்டது. தமிழ்நாடு அரசு, ''அணை பலவீனமாக இல்லை; பயப்பட வேண்டாம்'' என்று சொன்னாலும், மக்களிடையே பரவியுள்ள பீதியைப் போக்கும் விதத்தில் தண்ணீரின் ஆழத்தை 136 அடியாகக் குறைப்பதற்கு உடனே நடவடிக்கை எடுத்தது. மேலும், அணையின் பலத்தை மறு ஆய்வு செய்து, ''அது உறுதியாகவே இருக்கிறது; அணை உடையும் அபாயமில்லை என்று உறுதி செய்து கொண்ட பிறகே தண்ணீரின் மட்டம் பழையபடி 152 அடியாக உயர்த்தப்படும்'' என்றும் கூறியது.

''ஏன் அணையின் தண்ணீர் மட்டத்தை உயர்த்தக்கூடாது என்று சொல்கிறோம்?'' என்று விளக்கம் அளிக்கும் வகையில் கேரள அரசு பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்க, அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக தமிழக அரசும், ''கேரள மக்கள் வீணாகப் பீதி அடைய வேண்டாம்! அணை பாதுகாப்பான நிலையில்தான் இருக்கிறது'' என்று விளம்பரம் வெளியிட்டது.

விவகாரம் உச்சநீதிமன்றத்துக்குப் போனது. ஒரு வல்லுனர் குழுவை அனுப்பி, அணையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டது உச்சநீதி மன்றம். வல்லுனர் குழு அளித்த அறிக்கையின் சாராம்சம், அணையில் 142 அடி வரை மட்டும் தண்ணீரைத் தேக்கலாம் என்பதே! இதுவே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பானது. இதைக் கேரள அரசாங்கம் ஏற்க மறுத்தது.





எஸ்.சந்திரமௌலி

திருவாங்கூர் சமஸ்தானத்தின் மன்னருடன் நான்கு வருட காலம் பல்வேறு அம்சங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தியது. 1886ல் பெரியாற்றின் குறுக்கே அணையைக் கட்டிக் கொள்ள ஒப்பந்தம்

தலை வலியும் திருகு வலியும்!

ஃப்ளாஷ் பேக்

முல்லைப் பெரியாறு அணை, மேற்குத் தொடர்ச்சி மலையில் தொடங்கி மேற்கு நோக்கிக் கேரளாவில் பாயும் பெரியாற்றின் மீது கட்டப்பட்ட அணை. ஆங்கிலேய ஆட்சியின்போது 1895ஆம் வருடம் கட்டப்பட்டது. அணையின் கொள்ளளவு 15.5 டி.எம்.சி. உயரம் 152 அடி. இந்த அணையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தேக்கடி வன சரணாலயமும், அணையின் கீழ் பாசனப் பகுதியில் இடுக்கி அணையும் உள்ளன.

இன்றைய மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டப் பகுதிகளை வறட்சியிலிருந்து காப்பாற்ற, அப்போதைய சென்னை மாகாணத்தின் ஆங்கிலேய அரசாங்கம் செய்துகொண்டது. இந்த ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் 999 வருடங்கள்.

1887 செப்டெம்பரில் அணை கட்டும் பணி துவங்கியது. மேஜர் ஜான் பென்னி என்ற பிரிட்டிஷ் என்ஜினீயரின் மேற்பார்வையில் அணை கட்டி முடிக்கப்பட்டு, அன்றைய சென்னை மாகாண கவர்னர் வென்லாக் பிட்புவால் திறந்து வைக்கப்பட்டது. புதிய அணையில் 104 அடிக்கு மேல் தேங்கும் தண்ணீர், வைகை ஆற்றுக்குத் திருப்பி விடப்பட்டு, தமிழகத்தின் மேற்கூறிய பகுதிகள் பாசன வசதி பெறலாயின. மேலும் மதுரை மாநகராட்சி, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி, சேடப்பட்டி, கூடலூர், கம்பம், சின்னமனூர், தேனி ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தேவையையும் நிறைவேற்றுகிறது.

கேரள அரசு பெரியாற்றில் புதிய அணை கட்டினால், அணையின் கட்டுப்பாடு தமிழ்நாட்டின் கைவிட்டுப் போய்விடும்.

முல்லைப் பெரியாற்று அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதி சுமார் எட்டாயிரம் பிளஸ் ஏக்கர் ஆகும். இந்த நிலப்பரப்புக்கு ஏக்கருக்கு ஐந்து ரூபாய் வீதம் 1896 முதல் 1970 வரை குத்தகைத் தொகை செலுத்தி வந்தது தமிழகம். திடீரென்று, குத்தகைத் தொகை குறைவு என்று கேரளா குரல் எழுப்ப, ஏக்கருக்கு முப்பது ரூபாயாக உயர்த்தப்பட்டது. அத்துடன் அணை மற்றும் அதன் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மீன் பிடிக்கும் உரிமையையும் கேரளா எழுதி வாங்கிக் கொண்டது.



• பிரேம சந்திரன்

இதற்கிடையில் 1955ல் பெரியாறு தண்ணீர் தமிழ்நாட்டில் நுழையும் இடத்தில் ஒரு மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு, கேரளாவுடன் ஒரு புதிய ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி 140 மெகா வாட் திறன் கொண்ட புதிய மின்உற்பத்தி நிலையம் கட்டப்பட்டது.

இன்றைய நிலவரம்?


''113 வருடம் பழைமையான அணையினால் லட்சக்கணக்கான மக்களுக்கும், சொத்துக்களுக்கும் ஆபத்து என்பதால்தான் புதிய அணை அவசியம். மற்றபடி தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தருவதில் எந்தச் சிக்கலும் இருக்காது'' என்கிறார் கேரள நீர்பாசனத் துறை அமைச்சரான பிரேம சந்திரன். அத்துடன் நிற்காமல், ''முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழ்நாடு அரசியல் காரணங்களுக்காகத் தான் எதிர்க்கிறது. இந்த விஷயத்தில் தமிழ்நாடு வீணாக முட்டுக்கட்டை போட்டால் கேரளா அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது'' என்று எச்சரிக்கிறார்.

தமிழகத்தின் எதிர்ப்பை அலட்சியப்படுத்திவிட்டு, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஜெயராம் ரமேஷ், புதிய அணை கட்டுவதற்கான பூர்வாங்க சர்வே பணியை ஆரம்பிக்க அனுமதி அளித்திருக்கிறார். இதை எதிர்த்துத்தான் தமிழக அரசு நீதிமன்றத்தை நாடியிருக்கிறது.

அணையின் பராமரிப்பும், கட்டுப்பாடும் தமிழகப் பொதுப் பணித்துறை வசம் இருப்பதால் தண்ணீர் திறந்து விடுவதில் இப்போது பிரச்னை இல்லாமல் இருக்கிறது. கேரள அரசாங்கம் புதிய அணையைக் கட்டினால், அணையின் பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடு கேரளாவின் கைக்குப் போய்விடும். அப்புறம் கர்நாடகாவிடம் காவிரி தண்ணீருக்குக் கெஞ்சுவது போல கேரளாவிடம் முல்லைப் பெரியாறு தண்ணீருக்குக் கெஞ்சிக் கொண்டிருக்க வேண்டும். காவிரித் தண்ணீர் கிடைக்காமல் தஞ்சைப் பகுதி தவிப்பது போல, தென் மாவட்டங்கள் முல்லைப் பெரியாறு தண்ணீர் இல்லாமல் தவிக்க நேரிடும். எனவே இந்த விஷயத்தை தமிழ்நாடு எச்சரிக்கையுடன் கையாள வேண்டும்.

காவிரித் தண்ணீர் கிடைக்காமல் தஞ்சைப் பகுதி தவிப்பது போல, தென் மாவட்டங்கள் முல்லைப் பெரியாறு தண்ணீர் இல்லாமல் தவிக்க நேரிடும்.

தமிழ்நாட்டுக்குக் காவிரி தலைவலி என்றால், முல்லைப் பெரியாறு திருகுவலி! ●



• ஜெயராம் ரமேஷ்

காவிய அரங்கில், பேராசிரியர் அ.சீநிவாசராகவன், வெளியீடு: பழனியப்பா பிரதர்ஸ்,'கோனார் மாளிகை', 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014. விலை ரூ.75/-

தமிழ் மொழியின் அழகு, வளம், உயர்நெறி, பண்பாடு, சீர்மை, தத்துவச் செறிவு, கவித்துவம், கற்பனை... என்று என்னென்ன சிறப்புகள் சொல்லப் படுமோ, அனைத்தையும் கம்பனின் ராமகாதையில் காணமுடியும். அதை எப்படி அறிவது? அதை அறிவதால், நமக்கென்ன பயன்? இத்தகைய வினாக்களுக்குரிய பதில், இந்தப் புத்தகம். இதுவரை கம்பனைப் படிக்காதவர்களைக்கூட, படிக்கக் கவர்ந்திருக்கும் வசீகர வலை இது! மொழிப் பயிற்சிக்கு அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.



வேலையில் முன்னேற, டாக்டர் கேரன் ஓடாஸோ கிடைக்குமிடம் : கிழக்கு பதிப்பகம், 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018. விலை ரூ.125/-

முன்னேற்றத்தை நோக்கித்தான் ஒவ்வொரு மனமும் ஓடுகிறது. அந்த ஓட்டம் முன்னேற்றத்தில் முடிவதற்கு என்ன தேவை? இந்தக் கேள்விக்குச் சரியான பதிலாக அமைந்திருக்கும் நூல் இது. 'குறைவாகப் பேசு; எல்லைகளை உணர்; மரபுகளை மதி; நேரம் தவறாதே; கருத்துக் கேள்...' இப்படி அறுபது தலைப்புகளில் அமைந்துள்ள, அழுத்தமான கட்டுரைகள். மொழிபெயர்ப்பு நூல் என நினைக்கத் தோன்றாத நடை, வாசிப்பைத் தூண்டுகிறது.

தீதும் நன்றும், நாஞ்சில் நாடன், வெளியீடு: விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை-600002 விலை ரூ.135/-

அறிமுகம் அவசியப்படாத எழுத்தாளர் நாஞ்சில் நாடன். பரந்துபட்ட அவருடைய பார்வையில், ஐ.டி.யில் பணிபுரிபவர்கள், சிமெண்ட் ஆலையின் தினக்கூலி, சாதி அரசியல், பேரணிகள், காடுகளின் அழிவு, தமிழ் சினிமா... என்று பலவும் பதிவாகின்றன. கேலி, ஆதங்கம், எள்ளல், கோபம் என்றான உணர்ச்சிக் கலவைகளினூடே பழந்தமிழ் இலக்கியங்களும் மின்னல் தெறிப்ப காட்டுகின்றன.

- ராகவன்



உலகின் முதல் இன்டர்நெட் மில்லியனர், இருபத்து மூன்று வயது நிரம்பிய மார்க் எலியட் ஜுகர்பெர்க். ஹார்வர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் இப்போது 700 மில்லியன் டாலர்களுக்குச் சொந்தக்காரர். அதற்கு இவர்



23 வயதில் 700

"சேர்ந்தே இருப்பது?" என்ற கேள்விக்கு, "இன்டர்நெட்டும் இளைஞர்களும்" என மைக்ரோசெகண்ட் இடைவெளியில் பதில் சொல்லத் தெரியாவிட்டால், நீங்கள் இன்னும் இருபத்தொன்றாம் நூற்றாண்டுக்குள்ளேயே அடியெடுத்து வைக்கவில்லை என்று அர்த்தம்.

இளசுகளும், இணையமும் இரட்டைப் பிறவிகள் போல மாறிவிட்ட இந்த யுகத்தில், "எப்ப பாரு இமெயில், இன்டர்நெட்னு வேஸ்ட் ஆஃப் டைம்" எனக் கரித்துக் கொட்டும் பெற்றோர்கள் கவனத்துக்கு... இன்டர்நெட் உதவியுடன் வலம் வரும் டாப் டென் யூத் மில்லியனர்ஸ் பற்றித் தெரிஞ்சுக்கங்க.

செய்ததெல்லாம் ச்சோ சிம்பிள் வேலைகள். Face book என்ற இணையதளத்தை நிறுவி, பல லட்சக்கணக்கான மக்களை அதன் மூலம் இணையச் செய்ததுதான்.


ஆண்ட்ரு க்ரிஸ்டோஃபர் க்ரோவர், பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த 28 வயது இளைஞர். இணையதளத்தில் விளையாட Jagex Game Studioவைக் கண்டுபிடித்து மக்களை சந்தோஷமாக இணையதளத்தில் விளையாடவிட்டு, அசால்டாக 600 மில்லியன் டாலர்களை அள்ளிச் சென்றிருக்கிறார்.

முப்பது வயதில் 300 மில்லியன்





டாலர்களைக் குவித்து, உலகின் மூன்றாவது இன்டர்நெட் மில்லியனராகச் சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கும் சாட் ஹார்லீ கண்டுபிடித்தது, You tube எனும் இணைய தளத்தை. மஞ்சு







யூத் மில்லியனர்ஸ்

மில்லியன்!

வீட்டுக் காதணி விழாவிலிருந்து நம்ம கோவிலம்பட்டி மஞ்சு விரட்டு விழா வரைக்கும் எதை வேணா You tubeல் கண்டுகளிக்க வசதி செஞ்சு கொடுத்திருக்கார் சாட் ஹார்லீ.



Mozilla Firefox இன்டர்நெட் பிரியர்களுக்கு மிகவும் பரிச்சயமான பெயர். இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரருக்குப் பிறகு உலக மக்கள் வேண்டி விரும்பிப் பயன்படுத்துவது இதைத்தான். இதைக் கண்டுபிடித்துத்தான் இருபத்திரண்டே வயது நிரம்பிய டேவ் ஹ்யாட்டும், ப்ளாக் ரோஸும் 120 மில்லியன் டாலர்களைச் சேர்த்து உலகின் நான்காவது இன்டர்நெட் மில்லியனர்களாக இடம் பெற்றுள்ளனர்.

110 மில்லியன் டாலர்களுக்குச் சொந்தக்காரராகி லிஸ்ட்டில் ஐந்தாவது இடம் பிடித்த ஆண்ட்ரு மைக்கேல் கண்டுபிடித்தது Fast Hosts என்ற இணையதளத்தை.

Www.deviantart.com கலை உலகில் ரொம்பவும் பிரபலமான இணைய தளம். பத்து மில்லியன் மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட இந்த இணைய தளத்தின் பக்கம் தினம் தம் பார்வையைத் திருப்புவோர் மட்டுமே 105,000. உலகெங்கிலும் உள்ள கலை ஆர்வலர்கள் தங்கள் கலைப் படைப்புக்களை இணையத்தின் வழி பிரபலப் படுத்தத் தளம் ஏற்படுத்திக் கொடுத்து, இன்று உலகின் ஆறாவது





அடுத்த இன்டர்நெட் மில்லியனர் உங்க வீட்டு கம்ப்யூட்டர் முன்னாடிகூட உட்கார்ந்துட்டு இருக்கலாம்

இன்டர்நெட் மில்லியனராக 75 மில்லியன் டாலர்களோடு வலம் வருகிறார் ஏஞ்ஜலோ ஸோட்டிரா.

இணைய தளத்திலும் விளையாடலாம், நீங்கள் செல்லும் வழியிலும் விளையாடலாம்; உங்கள் செல்ல செல்லிலும் விளையாடலாம்... என பாப்புலரான பாப் அப் கேம்ஸ் கண்டுபிடித்து உலகின் ஏழாவது இன்டர்நெட் மில்லியனராகி இருக்கிறார் John Vechey.

இருபத்து மூன்று வயது அலெக்சாண்டர் லெவின் Image shack எனும் இணையதளத்தை உருவாக்கி அதை வெற்றிகரமாக நடத்தி வருகிறார். இவருக்குத்தான் எட்டாவது இடம்.

ஆடை வடிவமைப்பதில் ஆர்வம் உள்ளவர்களைக் குறிவைத்து ஆரம்பிக்கப்பட்டது த்ரெட்லெஸ் இணைய தளம். இதன் பின்னால் நின்று செயல்பட்டு உலகின் ஒன்பதாவது இன்டர்நெட் மில்லியனராக வாகை சூடியிருப்பவர், ஜேக் நிக்கல்.

Www.tagged.com எனும் சமூக நெட்வொர்க்கிங் இணைய தளத்தை ஆரம்பித்து 45 மில்லியன் டாலர்களோடு உலகின் பத்தாவது இன்டர்நெட் மில்லியனர்களாக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்... க்ரெக் ஸெங்க் மற்றும் ஜோஹான்.

ஸோ... பேரண்ட்ஸ்!

விளையாட்டுப் பசங்க, வேஸ்ட் ஆஃப் டைம்னு எல்லாம் குறை சொல்றதை நிறுத்திடுங்க...

யாருக்குத் தெரியும்...? அடுத்த இன்டர்நெட் மில்லியனர் உங்க வீட்டு கம்ப்யூட்டர் முன்னாடிகூட உட்கார்ந்துட்டு இருக்கலாம்...

- **நளினி சம்பத்குமார்**



பில்கேட்ஸ் இப்போ பிஸினஸை நிறுத்திட்டு, ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாயா செலவு பண்ண ஆரம்பிச்சாகூட, அவர் சொத்தெல்லாம் கரைய கிட்டத்தட்ட 700 வருஷம் ஆகுமாம். ஆனாலும் இன்னும் அவர் வொர்க் பண்றதை நிறுத்திட்டு செலவு பண்ண ஆரம்பிக்கலை... Crazy thing!

நீங்கள் கேட்டவை-தராசு

* அர்த்தமுள்ள எதிர்ப்பு

● ஜே.வி.ஜே.கண்ணன், திருச்சி

? ''இந்தியாவை ஆள்வது மத்திய அரசு அல்ல; கேரளம்தான்'' என்று முல்லைப் பெரியாறு பிரச்னை குறித்து ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளாரே?

! பாலாறு பிரச்னையில் ஆந்திராவும், காவேரி நதி நீர்ப் பகிர்வில் கர்நாடகாவும், மத்திய அரசு/நீதிமன்ற ஆணைகளை மீறுகின்றனவே! ஆகவே, இந்தியாவை ஆள்வது கேரளாவோ ஆந்திராவோ அல்ல; அராஜகம்தான்!



பா.ஜ.க.வுக்கு எதிர்காலம் இருக்கிறதா?

● த.பரதன், திருவாரூர்

? அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட இல.கணேசனை மு.க.ஸ்டாலின் போய்ப் பார்த்தது நல்ல விஷயம்தானே?

! அடிப்படை மனிதப் பண்பையே 'நல்ல விஷயம்' என்று கொண்டாடும் அளவுக்கு ஆகிவிட்டது அரசியல் நிலவரம்!



● பாலு, சிவகாசி

? 'கலைஞரின் மு.க.அழகிரி' பற்றி தங்கள் கருத்து?

! முதல்வர் தலையிட்டு உடனே நிறுத்த வேண்டிய விஷயம். ஆனால், தவறுகளைக் கண்டும் காணாமல் விடும் இயல்புதான் அவரிடம் சமீப காலமாக வளர்ந்து வருவதாகத் தோன்றுகிறது. காரணங்களையும் ஊகிக்க வைக்கிறது.

* எழும் ஊகங்கள்

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

? மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்திரிக்காய்க்கு ஆதரவு கொடுக்கலாமா?

! மரபணு மாற்றப்பெற்ற உணவுப் பயிர்களின் அபாயமின்மை குறித்து விவாதம் முற்றுப் பெறாத நிலையில், நிருபணங்கள் இல்லாத நிலையில், அவற்றைப் பயிரிடுவதையும் உண்பதையும் தவிர்ப்பதே நல்லது. It is better to err on the safe side.

● கே.எஸ்.கோவர்த்தனன்,
சென்னை - 42


? விலைவாசி உயர்வு, மின்வெட்டு, குடி

நீர்ப் பற்றாக்குறை, பருவமழை பொய்த்தது, இலங்கைத் தமிழர் துயரம் போன்ற பல பிரச்னைகள் இருக்கும்பொழுது உலகத் தமிழ் செம்மொழி மகாநாடு அவசரமாக நடத்த வேண்டிய அவசியம் என்ன?

! பிரச்னைகளே இல்லாத ஒரு கால கட்



★ காக்குமா தமிழ்!



● பெரிய சீனா!

டத்துக்காகக் காத்திருந்து மாநாடு நடத்துவது என்பது, அலை ஓய்ந்து சமுத்திர ஸ்நானம் செய்கிற மாதிரிதான். ஆனால், தமிழ் மாநாட்டுக்கு ஒரு தெளிவான இலக்கு, மக்கள் பங்கேற்பை ஊக்குவித்து அனுமதிக்கும் திட்டம், பட்ஜெட் போன்றவை முறையாக இருக்க வேண்டும். ஆட்சிக்கோ, கட்சிக்கோ, தலைவருக்கோ புகழும் பெருமையும் சேர்க்க எடுக்கப்படும் நடவடிக்கையாக அது அமைந்துவிடக் கூடாது. தமிழுக்குப் புகழ் சேர்க்க வேண்டும்.

● **கே.தெய்வசிகாமணி, சென்னை-82**

? பகுத்தறிவுக் கொள்கைக்கு முற்றிலும் எதிராக, தமிழக அரசின் கலைஞர் காப்பீடு திட்ட விளம்பரம் அமைந்து, கருணாநிதி கொள்கைப் பிடிப்பு இல்லாதவர் என்று வெளிப்படுத்தியிருப்பதாக ஜெ. அறிக்கை விடுத்துள்ளாரே?

! இந்த விஷயத்தில் ஜெயலலிதாவின் பகுத்தறிவு விவாதத்தை விடவும் விஜயகாந்தின் பொருளாதார ரீதியான எதிர்ப்பு அதிக அர்த்தமுள்ளதாக இருக்கிறது. எவ்வாறாயினும் கலைஞரின் பொருளாதாரச் சிந்தனை, பகுத்தறிவு வாதம் இரண்டுமே அடி வாங்கித்தான் இருக்கின்றன.

● **சீனு சந்திரா, சென்னை-4**

? 'இந்தியாவைவிட சீனாதான் பெரிய நாடு; ஆகவே இலங்கைப் பிரச்னையில் சீனா தலையிடுவதை வரவேற்கிறேன்' என்பதாக இலங்கை அமைச்சர் முத்து சிவலிங்கம் கூறியிருப்பது எப்படி இருக்கு?

! நன்றி கெட்டதனமாகவும், சிறுபிள்ளைத்தனமாகவும் ஆபத்தை விலைக்கு வாங்குவதாகவும் இருக்கு.

● **ஏ.எஸ்.யோகானந்தம், ஒளவையார்பாளையம்**

? தமிழ் செம்மொழி மாநாட்டில் பங்கேற்க விடுத்த அழைப்பை பா.ம.க. ஏற்றுக் கொள்கிறது என்று டாக்டர் ராமதாஸ் பல்டியடித்து கலைஞருக்குக் கடிதம் எழுதியிருப்பது பற்றி?

! கலைஞரின் துதிபாடும் மாநாடாக இன்றி, அரசியலுக்கு அப்பாற்பட்டதாக விளங்கி, உண்மையான ஆர்வலர்களின் தமிழ் ஆய்வு மாநாடாக அமைந்தால் ராமதாஸ் பல்டி

☐ ரூ.150/- பரிசு பெறுபவர்:
என்.மாணிக்கம், மின்னல்

அடித்தபோதிலும் காயம் படாமல் தப்பலாம்!

● என்.மாணிக்கம், மின்னல் ❒

? நடந்து முடிந்த மூன்று மாநிலத் தேர்தல்களில் பா.ஜ.க. தோல்வி அடைந்துள்ளதே. இனி அக்கட்சிக்கு எதிர்காலமே இல்லையா?

! உட்பூசல்களைத் தவிர்த்து, ஆத்ம பரிசோதனை நடத்தி, கொள்கைச் சீர்திருத்தம் செய்து, நல்ல முறையில் பிரசாரம் செய்தால் நிச்சயம் எதிர்காலம் உண்டு. சக்திமிக்க எதிர்க்கட்சியின் முக்கியத்துவத்தை இந்திய ஜனநாயகம் நன்றாகவே உணர்ந்திருக்கிறது.

● கே.ஏ.நமசிவாயம், பெங்களூரு-43

? கர்நாடகாவில் இப்படி ஒரு வெள்ளம் ஏற்படும் என்று ஜோதிடர்கள்கூட எச்சரிக்காமல் போய்விட்டார்களே என்று கர்நாடக அமைச்சர் ஒருவர் ஆதங்கப்பட்டுள்ளாரே? அவர் வானிலை மையத்தைக் கேட்டிருக்கலாமே?

! வருஷா வருஷம் பருவ மழை வலுப்பதும் அணைகள் உச்சகட்டம் வரை நிரம்புவதும் தெரிந்தவையே. இதற்கு முன்னெச்சரிக்கை எதற்கு? அணைக்கட்டு நிர்வாகம், மராமத்துப் பணிகள் முதலியவற்றில் ஒத்துழைப்பு இருந்து, ஊழலின்றி ஒழுங்காக நிறைவேற்றினாலே வெள்ளச் சேதம் கணிசமாகக் குறையும்.


● எஸ்.ஏ.கேசவன், குருமலை

? கடைக்கண் பார்வை என்பது கிட்டப் பார்வையா? தூரப் பார்வையா?

! இரண்டுமல்ல; இஷ்டப் பார்வை!

● கே.எஸ்.கோவர்த்தனன், சென்னை-42

? 'உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காதவர்களே நாக்ஸல்களாக மாறுகின்றனர்' என விருதுநகரில் நடந்த கல்விக் கடன் வழங்கும் விழாவில் உள்துறை அமைச்சர் சிதம்பரம் பேசியுள்ளாரே?



❋ நாட்டின் தேவை



❋ மறைத்தோ மறந்தோ...

! ஆந்திராவில் சரணடைந்த நாக்ஸலைட்டுகளில் பி.ஈ., எம்.பி.ஏ, படித்தவர்களும் அடக்கம். அதை மறைத்தோ மறந்தோ பேசுகிறார்.

● பா.சீனிவாசன், காகிதபுரம் ★

? முறையாக பட்டாசுக்கடை அனுமதி பெறப்படவில்லை என்றும் விதிகள் மீறப்பட்டன என்றும் தீ விபத்து நடந்து முடிந்த பிறகு அதிகாரிகள் கூறுகிறார்களே?

! வேறென்ன, தங்கள் மீது பழி-பாவமும் லஞ்ச-ஊழல் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டு விடக் கூடாதே என்பதற்காகத்தான்!

★ ரூ.75/- பரிசு பெறுபவர்:
பா.சீனிவாசன், காகிதபுரம்



ஆயுர்வேத அட்வைஸ்!


நிஷா - பொறியியல் கல்லூரி மாணவி. டிப் டாப் உடை, மிடுக்கான நடை என கல்லூரி யூத்துக்கே உரிய சர்வ சாமுத்ரிகா லட்சணங்களும் பெற்றிருந்தாலும் அவளது காலில் உள்ள பித்த வெடிப்பு தூக்கத்தைக் கெடுக்கும் மிகப் பெரிய கவலையாக உருவெடுத்து மிரள வைத்துக்கொண்டிருக்கிறது. ஏதேதோ ஆயின்மென்ட்களைத் தடவி, மருந்து, மாத்திரைகளை உட்கொண்டாலும் அப்போது மறையத் தொடங்கும். பிறகு திடீரென்று தலை காட்டித் தொல்லை கொடுக்கும். ஆயுர்வேத மருத்துவர் பி.சீனிவாசனைச் சந்தித்தோம்!

நமது உடல் வாகைப் பொதுவாகவே மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். வாதம், பித்தம் மற்றும் சிலோத்தமம் (கபம்). இதில் இந்த சிலோத்தம உடல் வாகைச் சேர்ந்தவர்களுக்குப் பித்த வெடிப்பு வரவே வராது.

உடலில் பித்த நீர் அல்லது உஷ்ணம் அதிகமாகி விடுவதன் அறிகுறிதான் இந்தப் பித்த வெடிப்பு. உடலுக்கு எதிர்ப்பு சக்தி தரக்கூடிய வெங்காயம், பூண்டு, கீரைகள் மற்றும் மலிவான விலையில் எளிதாகக் கிடைக்கக்கூடிய பேரீச்சம் பழம், பொட்டுக்கடலை, வேர்க்கடலை, சீம அத்திப்பழம், சைனா கற்கண்டு போன்றவற்றை அவ்வப்போது உட்கொள்ளும் உணவில் சேர்த்துக் கொண்டால், பித்தம் குறைந்து, பித்த வெடிப்பு வராது. காலேஜ் செல்லும் வயதினர் எதற்கெடுத்தாலும் நேரமில்லை, நேரமில்லை என நேரத்தின் மீது பழி போட்டுவிட்டுத் தங்கள் இளமையைத் தாங்களே உதறி விடுகிறார்கள்! அதன் ஒரு வெளிப்பாடுதான் பித்த வெடிப்பும்.

ஆயுர்வேத மருந்துகள் விற்கப்படும் கடைகளில் கிளிஞ்சல் மெழுகு என்ற ஒன்று கிடைக்கும். அதைப் பயன்படுத்தி வந்தால் பித்த வெடிப்பு நாளடைவில் மறையும். அதைப் போலவே, சிந்துராதி லேபத்தையும் பயன்படுத்தலாம். சோற்றுக் கற்றாழையின் சாற்றை அப்படியே பருகுவதும், அதைக் கொண்டு தயாரிக்கப்படும் மெழுகைத் தடவுவதும் பித்த ஆதிக்கத்தை ஒடுக்கக்கூடியது.''

❋ டாக்டர் பி.சீனிவாசன்



உதறாதீங்க

ஃபாஸ்ட் ஃபுட் கலாசாரத்தின் பரிசுதான் நினைவாற்றல் இழப்பு!

குதிகால் வலி?

''முன்பெல்லாம் வயதானவர்களுக்கு வந்துகொண்டிருந்த குதிகால் வலி இப்போது 14, 15 வயதிலேயே வந்துவிடுகிறது. காரணம் பித்த நீர் அதிகம் சுரந்து அப்படியே தேங்கி விடுவதுதான். இதை அலோபதியில் எலும்பு வளர்ச்சி என்று சொல்கிறார்கள். எங்கள் மருத்துவ முறைப்படி, எலும்பு வளர்ச்சி என்பது கிடையவே கிடையாது. குதிகால் வலி தீர பல வகையான செருப்புகள் பரிந்துரைக்கப்படுகின்றன. அவை தற்காலிக வலி நிவாரணிதான். ஆயுர்வேத மருத்துவத்தில், 'வாத குஜாங்கரஸ' மற்றும் 'வாத ராக்ஷஸ' எனும் மாத்திரைகளும் இதற்கென உள்ளன. மாதுளைப் பழங்களைச் சாப்பிட்டு வருவதும் குதிகால் வலியிலிருந்து விடுபட வழி வகுக்கும்.''

கல்லூரி கண்மணிகளுக்கு வேறு என்னென்ன உபாதைகள்?

''நினைவாற்றல் குறைவது, இள நரை, இவை எல்லாமே இளைஞர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன. Fast food கலாசாரத்தின் பரிசுதான் நினைவாற்றல் இழப்பு. இளநரை உருவாவதற்கு ஷாம்பூக்கள், மற்றும் தலைக்கு ஹீட்டர்களைப் பயன்படுத்துவதும் முக்கியக் காரணங்கள். கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, கறிவேப்பிலை இவற்றை உணவில் சேர்த்துக் கொண்டு ஷாம்பூக்கள் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொண்டாலே போதும். என்றும் இளமையாகவே இருக்கலாம்!''

- நளினி சம்பத்குமார்



இளமையே!

பகல் மீன்கள்

சென்னை நுங்கம்பாக்கம் கல்லூரிச் சாலையிலிருந்து இடப்பக்கம் திரும்பினால் எழும்பூருக்குப் போகிற வழியில் புதிதாகக் கட்டிய ஒரு மேம்பாலம் எதிர் வரும். அதில் ஏறாமல் அப்படியே பாலத்துக்குக் கீழே சென்று ஒரு யூ டர்ன் அடித்துத் திரும்பி, கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தால் ஒரு மூன்றடுக்கு உயர்தர வணிகவளாகம் தெரியவரும். அதன் மூன்றாவது தளத்தில் தெரியும் ஒரு பால்கனிதான் அருணாசலத்துக்கு உலகிலேயே மிகவும் பிடித்தமான இடம்.

அவரது நிறுவனமான Z பர்னிச்சர்ஸ் இயங்கிவரும் அந்தத் தளத்தில், குளிரூட்டப்பட்ட அவரது கார்ப்பரேட் அறைக்குப் பின்பக்கம் இருக்கும் பால்கனிதான் அது.

அங்கிருந்து பார்த்தால் எழும்பூர் மியூஸியத்தின் இரண்டு டினோசர்களும் அதற்குப் பின்னால் உயர்ந்து நிற்கும் புராதன செங்கட்டிடமும் தெரியும்.

அவ்வப்போது அதன் மாடங்களில் திரியும் புறாக்களின் அழகை ரசிப்பதற்காகவே அருணாச்சலம் தன் அறைக் கதவைத் திறந்துகொண்டு அங்கு வந்து நிற்பது வழக்கம். உண்மையில் அவர் அந்த இடத்தைத் தேர்வு செய்ததற்குக் காரணம் அவரது மூளைத் திசுக்கள். அவை மரபான பாரம்பர்ய பழைய பொருட்களைப் பார்த்துவிட்டால் குதியாட்டம் போடும் போல. அந்த அளவுக்குப் பழைமை விரும்பி. ஆனால் அவரது இண்டீரியர் டெக்கரேஷன் ஃபர்னிச்சர் தொழிலோ பழசை அழித்து அனைத்தையும் புதுசாக மாற்றும் வேலை. இதுக்குத்தான் ஐரணி என்று சொல்வார்கள் போல.

என்னதான் தொழில் நாகரிகத்தோடு அவரைக் கட்டிப்போட்டிருந்தாலும் மனசு சிதிலமான கோபுரங்களிலும், தேவார திருவாசகத்திலுமே ஊறிக்கிடந்தது. எதற்கும் அலட்டிக் கொள்ளாத மனுஷர். அதே சமயம் தொழிலில் முதலை கெட்டது. ஐந்து வருடத்துக்கு முன் பைக் ஓட்டிக்கொண்டிருந்த ஆசாமி ஐ.டி. இண்டஸ்ட்ரி சென்னையில் தடதடவென வளர்ந்தபோது பெரும்பாலான நிறுவனங்களின் ஆர்டர்களைக் கைப்பற்றி அசுர வேகத்தில் தம்மை வளர்த்துக் கொண்டார்.



இதோ இந்த நிமிடத்திலும் அவருக்கு மிகவும் பிடித்த அந்த பால்கனியில்தான் நிற்கிறார்.

உள்ளே அவருக்காக அறையில் அரசு ஒப்பந்தங்களுக்காக உயர் அதிகாரிகள் பலர் கோப்புகளுடன் காத்திருக்கின்றனர். தமிழ்



அஜயன் பாலா

4

அவருக்குக் காரணமே இல்லாமல் மகள் தேன்மொழியின் முகம் ஞாபகத்தில் வந்து போனது.

இந்நேரம் டிரெய்ன் வைசாக்குக்குப் போய்ச் சேர்ந்திருக்க வேண்டுமே... இறங்கியதும் ஃபோன் செய்கிறேன் என்றாள். யோசித்துக்கொண்டே அனிச்சை

ஒரு நிமிடத்துக்கு முன்தான் தேன்மொழியின் முகம் ஞாபகத்தில் வந்து போனது

யாக அவர் கை பாக்கெட்டிலிருந்த செல்லை எடுத்து மகள் தேன்மொழியின் நம்பரைத் தட்டத் தொடங்கியது.

அதற்குள் பாதிக்கதவு திறந்து வினோத் குறுக்கிட அருணாச்சலம் நிமிர்ந்தார். வினோத் அவரது கம்பெனியின் இளவரசன்.

''ஸார்... டீல் ஓ.கே. கடைசியா நீங்க பேசிட்டா

நாடு முழுக்க அரசு அலுவலகங்களைப் புனருத்தாரணம் செய்து புதுமைப்படுத்த வேண்டிய வேலை. ரேட் பேசிக் கட்டுபடியாகாத காரணத்தால் செக்ரட்டரியிடம் பேசச் சொல்லிவிட்டார்.

ஒரு நிமிடத்துக்கு முன்தான் சட்டென

லைன் பண்ணிடலாம்''

''டீல் எப்படி?''

''நீங்க சொன்ன மாதிரிதான். சிக்ஸ்டி ஃபார்ட்டி''

''ஒத்துக்கிட்டாங்களா...'' அருணாசலத்தின் கண்கள் மின்னின.

''ஒத்துக்க வைச்சாச்சு ஸார்...''

''அப்ப ஒரு நிமிஷம் வெய்ட் பண்ணச் சொல்லு. டாக்டர்கிட்ட பேசிட்டு வந்துட றேன்.''

நொடி நேரத்தில் அவரது கைபேசியிலிருந்து புறப்பட்டு, குறிப்பிட்ட எண்ணுக்கான ஒலியலைகள் செயற்கைக் கோளுக்குள் ஊடுருவி அங்கிருந்து வைசாக்கை நெருங்கிக் கொண்டிருந்த ஹவுரா மெயிலுக்குள் எஸ் 3 கோச்சின் பெட்டிக்குள் ஊடுருவி தேன்மொழியின்



''டாக்டர் கழுத்து சுளுக்கிக்கிச்சு!''
''அதனால் என்ன? கைலதானே ஃபீஸ் தரப் போறீங்க?''
- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்

எண் இணைப்பு கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிக் கொண்டிருந்தது.

தேன்மொழி சற்றுமுன்தான் அவசரமாக ஓடிக் கொண்டிருந்த ரயிலில் தாவி ஏறினாள். மூச்சு வாங்கியது. ப்பா... ஒரு நொடிதான்... கொஞ்சம் பிடிவிட்டிருந்தால்... நினைக்கவே மனசு படபடத்தது. வந்து தன் இருக்கையில் அமர்ந்தாள். மனது முழுக்க தொலைந்து போன பர்ஸையே நினைத்துக் கொண்டிருந்தது. அதைவிட முக்கியப் பிரச்னை. ரயில் டிக்கெட். பாதுகாப்பாக இருக்கும் என்றுதான் அந்த சிறிய பர்ஸில் டிக்கெட்டை மடித்து வைத்திருந்தாள். வழியில் டி.டி.ஆர். வந்து விட்டால், என்ன சொல்லிச் சமாளிப்பது? மனசு படபடத்தது. அவசரமாகத் துணிமணிகள் கொண்டு வந்திருந்த சிறிய சாம் சொனைட் லெதர் பேக்கின் ஜிப்பை எடுத்து பர்ஸ் இருக்கிறதா என நிதானமாகத் தேடிப் பார்த்தாள். அதில் இல்லை என நன்கு தெரியும். இருந்தாலும் ஒரு சமாதானத்துக்காகத் தேடி பார்த்தாள்.

அந்தப் பாட்டு கோஷ்டியிடம் போய்க் கேட்டுப் பார்க்கலாமா...? அந்தம்மா என்ன நினைப்பார்கள்... அவர்களிடம் போய் எப்படிக் கேட்பது... என் பர்ஸ் யாராவது எடுத்தீங்களா... சேச்சே இல்லை... பார்த்தீங்களா?

எப்படிக் கேட்டாலும் அநாகரிகம்தான்.

ச்சேச்சே... அதற்கு வாய்ப்பே இல்லை.

மனசில் கேள்விகள் குடைந்தன. என்னதான் தைரியசாலியாக இருந்தாலும் சட்டென ஒரு பதற்றம்.

பாட்டு கோஷ்டியிடம் தான் உருவாக்கிய பிம்பம் உடைந்து முட்டாள்தனமாக, பரிதாபமாகப் போய் நிற்க வேண்டும்.

பர்ஸ் காணாமல் போனதைவிட அசடுவழிந்து கொண்டு அப்படிப் போய் நிற்பதுதான் அருவையாக இருந்தது.

பணம் போனால் போகிறது. வைசாக் போனால் செலவுக்குக் கார்த்திகாவிடம் வாங்கலாம். ஆனால் இப்போது டி.டி.ஆர். வந்தால்...

'டிக்கெட் ஸார்... நான் பர்ஸ்ல வெச்சிருந்தேன் ஸார்... சார்ட்லகூட பேரைப் பாருங்க தேன்மொழி ஏஜ் 22. சீட் நம்பர் 72.'

கற்பனையில் தனக்குள்ளாக ஓட்டிப் பார்த்தாள்.

''சரிம்மா... நீதான் தேன்மொழிங்

'யூத்' துவம்



பூமியில் பிறக்கும்போது எதுவுமே யின்றி வந்தாலும், இறக்கும்போது நம் பெயர் மட்டும் நம்முடனே வருகிறது. அதனால்தான் வெறும் வார்த்தையாக இல்லாமல் வரலாறாக மாற்ற வேண்டும் நம் பெயரை!

- ஏ.ஆர்.ரஹ்மான்

கறதுக்கு அடையாளம் ஏதாவது காமிக்க முடியுமா?''

அப்போதுதான் பாக்கெட்டில் கைவைத்தாள். அதிர்ச்சியில் தலைமேல் கைவைத்துக் கொண்டாள். லைசென்ஸ், பான் கார்ட் எல்லாம் பர்ஸோடு போய் விட்டது.

கையில் பைசா, டிக்கெட் இல்லாமல் ஏ.டி.எம்.கார்ட் இல்லாமல் வெளியூரில்... நினைக்கவே அவளுக்குச் சங்கடமாக இருந்தது.

சட்டென உடலில் எதுவோ குறைந்து, உடல் பலவீனமாகிப் போனதுபோல உணர்ந்தாள். ஜன்னலோரமாக அமர்ந்து கொண்டிருந்தவள் நெற்றி வியர்வையை விரலால் நீவியபடி மெதுவாகத் திரும்பி கூபேவிலிருந்த மற்றவர்களை நோட்ட மிட்டாள்.

அவளுக்கே அவள் நிலை பரிதாபமாக இருந்தது. அப்பாவிடம் துணிச்சலாகத் தனியாகப் போகிறேன் என பந்தா பண்ணி யது எல்லாம் தவறோ? மனசு ஸ்லோ மோஷனில் பின்னால் ஓடியது. அப்பா எச்சரித்தது ஞாபகத்துக்கு வந்தது. 'தனியா போய் என்னைக்காவது கஷ்டப்பட்டா தான் உனக்குப் புத்தி வரும்...'

அப்பா சொன்னபோது ஏதோ ஆண் களால் வரும் பிரச்னையைத்தான் சொல் கிறாரென்றுதானே நினைத்தோம். ஆனால், இப்படியெல்லாம் மனிதர்களுக்குப் பிரச்னை வரும் எனத் தெரியாமல் போய் விட்டதே.

ஒருவேளை அப்பாவுக்கும் இதுபோல அனுபவங்கள் எல்லாம் நேர்ந்திருக்குமோ?

'அப்பா என்னை மன்னிச்சுடுங்கப்பா' அப்பாவின் மார்பில் கட்டிப்பிடித்து அழுவதாக நினைத்துப் பார்த்தாள். அவருக்கு ஃபோன் போட்டு ஆலோசனை கேட்டால் என்ன?

பாக்கெட்டிலிருந்து ஃபோனை எடுத் தாள்.

செல்ஃபோன் பேட்டரி இல்லாமல் முழுவதுமாய்ச் செத்துப்போயிருந்தது. அவசரமாக சார்ஜரைத் தேடியபோது எடுத்துவைத்து கடைசி நேரத்தில் மறந்து போய் விட்டுவிட்டு வந்தது ஞாபகத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியாகக் செருகியது. இது என்ன எல்லாம் இப்படி ஒன்றுசேர்ந்து யாரோ திட்டமிட்டு நடத்து வது போல... தன்மேல் பகடை உருட் டப்படுகிறதே!

எப்போதும் இல்லாத பயம் முதன் முறையாக அதிகரித்தது. தலை சுற்றியது. ரயிலில் யாரிடம் உதவி கேட்கலாம்?

அக்கம் பக்கம் பார்த்தாள்... சட்டெனத் துணிந்து கூச்சம் பார்க்காமல் தன் ஆப்பிள் ஐஃபோனைக் காண்பித்து, ''யாரிடமாவது சார்ஜர் இருக்கிறதா?'' எனக் கேட்டாள். அனைவரும் அவளைப் பார்த்து

விழித்தனர். சில படித்த நடுத்தர வயதினர் சிரித்துக் கொண்டே தலையசைத் தனர்.

ரயில் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

கார்த்திகா மணப்பெண்.

அனைவரும் இறங்கியபின் வாசலுக்கு வந்து பார்த்தாள். மனசு திக்திக் என அடித்துக் கொண்டது.



தன்னைத் தேடி ரயில் நிலையத்துக்கு வர சாத்தியமில்லை. தானும் அவளுக்கு ஃபோன் செய்ய முடியாது. கையில் தம்படி இல்லை. வைசாக்கில் அல்லது வழியில் டிக்கெட் கேட்டால்...? கால்கள் நடுங்கின.

பதற்றத்தில் இருக்கையிலிருந்து எழுந்து கொண்டாள்.

இம்முறை அவளது உடலில் துள்ளல் இல்லை. யாரையும் வீழ்த்த வேண்டும் என்ற மன அவசம் இல்லை. மனசுக்குள் முருகன் வந்து நின்றான். எப்போதுமே அவளுக்குள் பெரிதாக பக்தி எதுவும் இருந் தது இல்லை. ஆனால், இப்போது அவள் தீவிரமாக முருகனை நினைத்தாள். எழுந்து ரயிலில் பின்னோக்கி அந்த பஜனை கும்ப லைத் தேடி பெட்டிகளினூடே நடக்கத் தொடங்கினாள்.

இரண்டு பெட்டிதான் கடந்திருப்பாள். அதற்குள் பெட்டியில் பயணிகள் இறங்க ஆயத்தமாவதைக் கண்டு ஜன்னல் வழியாகப் பார்த்த வளுக்கு வைசாக் நகரத் துக்குள் ஹவுரா மெயில் ஊடுருவிக் கொண்டிருப்பது தெரிய வந்தது. பதற்றத்தில் அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் வேக மாகத் தன் பெட்டியை நோக்கி வந்தாள்.

தன் கூபேயினுள் வந்து லெதர் பேக்கையும் ட்ராலி வைத்த சிறிய சிவப்பு நிறப் பெட்டியையும் எடுத்துக் கொண்டாள். ரயில் முழுவதுமாக வைசாக் நகரத்தை அடைந்திருந்தது. உணவுப் பொருட்களை விற்பவர்கள் கூச்சல் அதிக மாக இருந்தது. அனைவரும் இறங்கியபின் வாசலுக்கு வந்து ஒரு நிமிடம் பார்த்தாள். பரபரப்பாக இருந்தது அந்த ரயில் நிலை யம். மனசு திக்திக் என அடித்துக் கொண் டது. கார்த்திகா வந்திருப்பாளா... பிளாட் ஃபாரத்தில் இறங்கலாமா வேணாமா? ஒரு நொடிதான் யோசித்தாள். சட்டென உருளைச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட சிவப்பு நிறப் பெட்டியையும், லெதர்பேக் கையும் எடுத்துக் கொண்டு பெட்டியி லிருந்து இறங்கினாள். ப்ளாட்ஃபாரத்தில் பேக்கும் கையுமாக அவளுக்கு முன் நகர்ந்து கொண்டிருந்த கூட்டத்தினூடே அங்குமிங்குமாக அலைந்தன கண்கள். செருப்புகள் தரையில் தேயும் ஓசை... வியா பாரிகளின் கூக்குரல்கள், இவற்றோடு சேர்ந்து ஒலித்த ஒலிபெருக்கியில் யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்... பெண்ணின் ஆங்கிலக்குரல் ஆகியவை அவளது பதற் றத்தைக் காரணமில்லாமல் அதிகரித்தன. ஒரு இடத்தில் சற்று தொலைவில் கறுப்பு கோட் அணிந்த இரண்டு பேர் பயணி களிடம் டிக்கெட் செக் பண்ணிக் கொண்டி ருந்தனர்.

(மீன்கள் துள்ளும்)



லவ் அட் ஃபர்ஸ்ட் ஃபைட்!



* யாமினி

"எதற்கெடுத்தாலும் எதிர்க் கேள்வி கேட்பதுதானே இளைஞர்களின் அடையாளம்?'' என்று சில கல்லூரி இளைஞர்களிடம் கேட்டோம்.

"சொல்றது ஈஸி... கேட்டுப் பார்த்தாதான் தெரியும்... கேள்வி கேட்கிறது எவ்வளவு கஷ்டம்னு'' என்று வரிந்து கட்டினர்.

"சரி... அப்படின்னா நீங்களே இந்த வாரம் கிரேஸியைக் கேளுங்க'' என்று களத்தில் இழுத்துவிட்டோம்.

அவர்களின் துடிப்பான கேள்விகளும், கிரேஸியின் துள்ளலான பதில்களும்...



* டி.சரண்யா

★ மஞ்சுப்ரியா

கமலிடம் நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

கமல் விடாமல் கற்றுக் கொண்டிருக்கும் வாத்தியார்; நான் அவரிடம் கற்றது கமலளவு... கல்லாதது உலக(நாயக) அளவு.

★ ராஹி ஜனார்த்தனன்

எந்த மாதிரி timing sense, humour ஆக மாறும்?

ஹ்யூமர் ராமர் போல cleanனாக இருத்தல் நன்று. டைமிங் ஸென்ஸைப் பொறுத்தவரையில் ராமர் வில்லை 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டனர்' போல, ஹ்யூமர் சொல்லை 'சொன்னது கேட்டனர் சிரித்தது கண்டனர்' வேகம் வேண்டும்... நிறுத்தி நிதானமாகச் சொன்னால் சிரிப்பு சமையல் குறிப்பு

கி ரே ஸி யை யக் கே ளு ங் க ள்

ஆகிவிடும்!

★ காவ்ய ப்ரியதர்ஷன்

மாணவர்களுக்கு உங்கள் அறிவுரை ப்ளீஸ்?

அறிவு என்ற வாளுக்கு உறையாக இருங்கள். அறிவு என்ற வாளை உடையவனே அறிவாளி. ரமணராகட்டும், ஏ.ஆர்.ரஹ்மானாகட்டும், பாரதியாராகட்டும், சச்சின் டெண்டுல்கராகட்டும் எல்லோரும் சாதித்தது இளமையில்தான். கற்றது இளமையில்தான் பயன்படும் வாளாக இருக்கும்; பயன்படுத்தாமல் போனால், வாள் வளைந்து முதுமையில் பதுங்கும் கேடயமாகிவிடும். இளமையில் வீர வாளாக இருங்கள்; ஓரமாக வளாயிருந்து விடாதீர்கள்!



★ கே.கலா

★ ராகேஷ்

பெண்களைப் பொறுத்தவரையில் காதல் என்றால் என்ன?

நீங்கள் சொன்ன அந்த 'பொறுத்த வரையிலேயே' பதில் இருக்கிறது. ஆண்களைப் பொறுத்தவரையில், 'பொருத்தம் பார்க்கும்' Love at first sight. பெண்களைப் பொறுத்தவரையில், தான் காதலிக்கும் ஆண் எவ்வளவு தூரம் தன்னைப் பொறுத்துக் கொள்வான் என்பதைச் சோதித்துப் பார்க்கும் Love at first fight. ஆணுக்குக் காதல் இதயத்தில். பின்னாள் மனைவியான 'இந்நாள் காதலிக்கு' காதல் கெட்டிக்கார மூளையில்!



★ தினேஷ்

"கற்றது கமலளவு... கல்லாதது உலக(நாயக) அளவு"

★ யாமினி

நீங்கள் விரும்பி ரசித்த ஜோக்?

டீச்சர்: கம்பராமாயணத்தை எழுதியது யார்?

ஒரு மாணவன்: கம்பர்...டீச்சர்.

டீச்சர்: மணிமேகலையை எழுதியது யார்?

அதே மாணவன்: மணி... டீச்சர்.

இந்த ஜோக்கை நான் விரும்பும் காரணம், அன்றைய மாணவரும் இன்றைய வழக்கறிஞருமான எனது நண்பன் 'வானவில் பண்பாட்டு மையத்தின்' தலைவர் சு.ரவியால் மாணவர்களுக்காக 70களில் நடத்தப்பட்ட 'மாணவரிஸம்' என்ற பத்திரிகையில் அடியேன் எழுதிய முதல் ஜோக்... சீமந்தப் புத்திரனின் சிரிப்பு...!

★ ராகேஷ்



★ வி.மஞ்சு ப்ரியா

★ சிவராஜ்

நீங்க சொல்ல வந்த விஷயத்தை ஆடியன்ஸ்கிட்ட சரியா கொண்டு போய் சேர்க்கற ஹீரோ யார்...?

இயக்குநர். சொல்ல வந்த விஷயம் என்னும் currentஐ, டைரக்டர் என்ற connecting wire நல்லபடியாகக் கொண்டு போய்ச் சேர்த்து Hero-Watts bulbஐ பிரகாசிக்க வைக்கிறார்.



★ தினேஷ்

வாரிசுகள் வளர்ச்சிக்கு இடையில் என்னை மாதிரி சாமானியர்கள்

எப்படி பிரகாசிப்பது?

பாரிச வாயுவைத் தடுக்கலாம்; வாரிச வளர்ச்சியைத் தடுக்க முடியாது. தந்தையால் மரபணுக்கள் வழியாக வாரிசுகளுக்குத் திறமை தாரை வார்த்துக் கொடுக்கப்படுகிறது. அது சரி... அப்துல் கலாம், ஆப்ரஹாம் லிங்கன், ரஜினிகாந்த், இளைய ராஜாக்கள் சாமானியர்களாகப் பிறந்து பிரகாசிக்கவில்லையா...! சுயம் பிரகாசமாக இருங்கள். முடியாவிட்டால் பிரகாசமான வாரிசுகளை உருவாக்கும், தந்தையாக இருந்து பிரகாசியுங்கள்!



★ கே.எஸ்.சுஜித்

★ ***கலா***

உங்கள் நாடகங்களில் நடிக்க மாணவர்களுக்கு வாய்ப்பு தருவீர்களா?

எங்கள் 'கிரேசி கிரியேஷன்ஸ்' குழுவில் இருப்பவர்கள் அனைவருமே மாணவர்கள்தான். combined study ஆக முதியோர் கல்வி பயிலும் முப்பதாவது ஆண்டு மாணவர்கள்!



★ ராஷி ஜனார்த்தனன்

★ ***டி. சரண்யா***

எந்தவிதமான பாடல்களை ரசிப்பீர்கள்?

கவிதைக்குத் திருப்புகழ். 'சந்தமான பாடல்கள்.. கர்னாடகம் மெல்லிசைக்கு, எனக்குப் பிடித்த நாதம் M.S. & விஸ்வநாதம்

"நாடகத்தில் குளத்துத் திமிங்கலம்; சினிமாவில் கடல் மீன்"

★ ***கே.எஸ்.சுஜித்***

சினிமா கவர்ச்சியால் இளைஞர்களுக்கு நெகடிவ் பாதிப்பு ஏற்படுமா?

விளக்குக்கும் திரியுண்டு. வெடி குண்டுக்கும் திரியுண்டு. எதைப் பற்ற வைப்பது என்பதில் இளைஞர்கள் பாஸிடிவ் வாக முதிர்ச்சியோடு இருந்தால் ஏது பாதிப்பு!

★ பி.எஸ்.ஸ்வர்ணமாலினி



★ ***ஸ்வர்ணமாலினி***

மேடை நாடகம், சினிமா எதில் உங்கள் ஒரிஜினாலிடியை மெய்ன்டெய்ன் செய்ய முடிகிறது?

நாடகத்தில் நான் குளத்துத் திமிங்கலம்; சினிமாவில் கடல் மீன்; நாடகத்தை நான் மெய்ன்டெய்ன் செய்கிறேன்... சினிமா என்னை மெய்ன்டெய்ன் செய்கிறது.

★ காவ்ய பிரியதர்ஷன்



★ ***கவிதா***

திறமை யாரிடம் அதிகம்... ஆண்களிடமா? பெண் களிடமா?

திறமை என்ற குணத்துக்கு ஆண், பெண் வித்தியாசம் கிடை யாது. ஆனால், அந்தக் குணம் வெளிப்படுத்தும் மனத்தில் வித்தி யாசம் தெரியும். திறமையைக் காட்டிக் கொள்வது ஆண்களின் திறமை; திறமையை மனசுக்குள் பூட்டிக் கொள்வது பெண்களின் திறவாமை! ○

கலைமுகம்

“அறையாறும் மடக்கிளியே இங்கே வா...'' என்று தான் வளர்க்கும் கிளியிடம் கெஞ்சியும் கொஞ்சியும் தன் காதல் நாயகனின் பெயரைச் சொல்லும்படி வேண்டுகிறாள் நாயகி. அந்த நாயகியின் நாணத்தையும் ஏக்கத்தையும் தன் அழகான முக பாவனையில் வெளிப்படுத்தும் அதே நேரத்தில், சிறகுகளைப் படபடவென்று அடித்துக் கொண்டு அவள் கைகளில் தத்தி ஏறி, தோளில் அமர்ந்து கன்னத்தை உரசும் அந்தப் பொல்லாத பச்சைக் கிளியின் அசைவுகளையும் தமது அங்க அசைவுகள் மூலமும் கை முத்திரைகள் மூலமும் வெளிப்படுத்துகிறார் கலைஞர். தூய்மையான பாணியும் முதிர்ந்து கனிந்த பாவமும் உடைய கலைஞர் பெயர் : அஞ்சனா ஆனந்த்.

அஞ்சனாவின் சுருக்கமான பயோடேட்டா அயல்நாடுகளில் ஆரம்பிக்கிறது. ஆரம்பக் கல்வியினூடே சிங்கப்பூரில்... ஷாந்தா பொன்னுதுரையிடம் பரதநாட்டிய வகுப்புகள். நாட்டிய பள்ளி பரீட்சைக்கு மதிப்பீட்டாளராக வருகிறார் லீலா ஸாம்ஸன். (கலாக்ஷேத்ராவின் தற்போதைய தலைமையாசிரியர்). அவரது நாட்டியமும் கலை நோக்கும் அஞ்சனாவை வெகுவாகக் கவர, பரத நாட்டியம் இந்த இளம் பெண்ணின் வாழ்க்கையை ஆக்கிரமிக்கிறது. மெடிகல் / ட்ரிபிள் ஈ படி என்று சம்பிரதாய கட்டாயத்துக்கு உட்படுத்தாமல் கலை ஆர்வத்தை மதித்து ஊக்குவித்த பெற்றோர், அக்கா. பிற்பாடு அதில் பெருமிதம் கொண்ட கணவர் ஆனந்த் என்று குடும்பச் சூழல் தந்த உரத்தில் அஞ்சனா சென்னை கலாக்ஷேத்ரா வந்து டிப்ளோமா முடித்து, பாரதியார் பல்கலையில் பரதத்தில் பட்ட மேல் படிப்பும் முடித்து இப்போது பரதத்தில் பி.எச்.டி..ஆய்வும் மேற்கொண்டிருக்கிறார்.

அஞ்சனா போன்ற இளம் பரத நாட்டியக் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் எப்படி இருக்கின்றன?

''மிகப் பிரகாசமாக இருக்கின்றன'' என்கிறார் உற்சாகமாக. சபாக்களில் தனி நிகழ்ச்சிகள் அதிகம் இல்லாவிட்டாலும் இப்போது பரதநாட்டியக் கலைஞர்களுக்கு பல்வேறு விதமான வாய்ப்புகள். உதாரணமாக கௌரி ராம்நாராயண் தமது மேடை நாடகங்களில் பரதநாட்டியக் காட்சிகளை ஓர் அங்கமாக்கி வழங்கியிருக்கிறார். அவரது தயாரிப்புகளில் ஆடும் வாய்ப்பு கிடைத்தது. பரத நாட்டிய நிகழ்ச்சிகள் வழங்கவே சில அமைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. இவை தரமான கலைஞர்களுக்கு வாய்ப்புகளைத் திறந்து விட்டுள்ளன'' என்று கூறும் அஞ்சனா, தமது நட்பு வட்டத்துடன் இணைந்து 'பிரயத்னம்' என்றொரு அமைப்பைத் தொடங்கியிருக்கிறார். தகுதியுள்ள, சிறந்த கலைஞர்களுக்கான ஒரு வேடந்தாங்கல் பிரயத்னம். மேடை வாய்ப்புகளை உருவாக்க முயற்சி செய்கிறது. இலக்கியம், கவிதை, இசை என்று பரதத்தை வளப்படுத்தும் கிளைக் கலை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.


தொலைக்காட்சி, சினிமா, மேடை நாடகம் என்று பரதக் கலைஞர்களின் கவனம் திசை திரும்பும்போது அவர்களுடைய சொந்தக் கலைத் திறனை ஆழப் படுத்திக் கொள்வது தடைப்படாதா?

''அது நமது தேர்வைப் பொறுத்திருக்கிறது. வருகிற எல்லா வாய்ப்புகளையும் அள்ளிப் போட்டுக் கொண்டாலும் அவஸ்தையாகிவிடக் கூடும். பரதநாட்டியம் என்கிற மையப் புள்ளியிலிருந்து விலகாமல், அதை வளப்படுத்தக்கூடிய வாய்ப்புகளை மட்டுமே கவனமாக ஏற்க வேண்டும்'' என்கிற அஞ்சனாவுக்கு ஒரு மகன் - கிருஷ்ணா. கலைச் சூழல் என்னும் கோகுலத்தில் வளர்ந்து வருகிறான்!

- சாயா


பொல்லாத
பச்சைக்கிளி!

வாசனுக்கு என்னாச்சு?



மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் எந்த வம்புதும்புக்கும் போகாதவர். நேரு குடும்பத்தின் மீது மாறாத விசுவாசம் கொண்டவர். மேலிடம் கிழித்த கோட்டைத் தாண்டாதவர். அதேசமயம், தமக்கும் தம் ஆதரவாளர்களுக்கும் வேண்டியதைச் சாதுர்ய மாகச் செய்து கொடுப்பார். அப்படிப்பட்ட ஜி.கே.வாசனைப் பற்றி, அரசல் புரசலாகச் சமீபகாலமாகச் சில செய்திகள்:

இப்பொழுது வகிக்கும் துறை மிகவும் வெயிட்டான துறையாக இருப்பதால், அது வேண்டாம் என்றும், லைட்டான வேறு ஏதாவது துறை ஒதுக்குமாறும் பிரதமர் மற்றும் சோனியாவிடம் கேட்டுக் கொண்டுள்ளார் என்றும், தமக்கு மத்திய அரசியல் வேண்டாம்; மாநில அரசியலுக்கே திரும்புகிறேன் என்று சொன்னதாகவும் பல செய்திகள்.

வாசனுக்கு என்னாச்சு?

இதுபற்றி டெல்லியில் உள்ள கப்பல் அமைச்சகம், சென்னை துறைமுக வட்டாரம் மற்றும் காங்கிரஸ் பிரமுகர்களிடம் பேசினோம்.

"ரொம்பவும் ஆர்வமாத்தான் இந்தப் பொறுப்பை எடுத்துக்கிட்டார் வாசன். ஒன்பது பெரிய துறைமுகங்கள், கப்பல் நிறுவனங்கள், கப்பல் கட்டும் பொதுத்துறை நிறுவனங்கள், சேது சமுத்திர நிறுவனம், கடல்சார் பல்கலைக்கழகம்... என்று பெரிய அமைச்சகம். ஆனால், இதற்கு முன் பதவி வகித்தவர்கள் இதை ஒரு பொக்கிஷமாகக் கருதி, சுரண்டத் துவங்கிவிட்டார்கள். அந்த வேலைகளுக்கு இடையேதான், பழையவர் போய் வாசன் வந்தார். சென்னை துறைமுகக் கழகத் தலைவர் வீட்டில் சி.பி.ஐ. சோதனை நடந்தது.


ஆனால் அதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. புதிய தலைவரையும் நியமிக்கவில்லை.

சென்னை துறைமுக விரிவாக்கப் பணிகளில் அமைச்சருக்குத் துணை நிற்காமல் கூட்டணி சக்திகள் தொல்லையாகவும் தொந்தரவாகவும் இருக்கின்றன. மேலும், நாடுமுழுக்க இருக்கும் துறைமுகங்களில், நிர்வாகக்குழு உறுப்பினர்களாக தி.மு.க.வினர் பலர் இருக்கிறார்கள். இதைத் தவிர, பல நிறுவனங்களில் பழையவர் நியமித்த தலைவர்களே நீடிக்கிறார்கள். இவற்றால், பழையவரின் ஆதிக்கம் கட்சி பலத்தால் இன்றும் நீடிக்கிறது. இதனால் ஆயிரக்கணக்கான கோடிகள் புரளும் இந்த இலாகாவில், மற்றவர்களின் தலையீட்டால், தமது பெயர் ரிப்பேர் ஆகிவிடுமோ என்று மிகவும் கவலைப்படுகிறார் அமைச்சர்" என்கிறார் டெல்லி அமைச்சக அதிகாரி ஒருவர்.

துறைமுகத் தொழிலாளர்களும், ஊழியர்களும் வாசன் செயல்பாடு குறித்து திருப்தி தெரிவிக்கின்றனர். நெடுநாட்களாக நிலுவையில் இருந்த ஊதிய உயர்வை வாசன்தான் சமீபத்தில் கொடுத்தாராம்.

'தலைவர் இது தொடர்பாக எதையும் பேசவில்லை. மீடியாதான் பரபரப்பைக் கிளப்பி விடுகிறது. தி.மு.க.வுடன் நல்ல உறவில் இருக்கிறார் வாசன். ஆனால், காங்கிரஸ் தலைமையில், தமிழ்நாட்டில் தனி அணி உருவாகும் போது, மேலிடம் இவரைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கும். ஏனெனில், அறுபது சதவிகித காங்கிரஸ்காரர்கள் அவரது ஆதரவாளர்கள்தான்" என்கிறார் வாசன் ஆதரவுப் பிரமுகர் ஒருவர். இதற்கிடையில், 'சோனியா, வாசனிடம், 'அவசரப்படவேண்டாம், நாளை அரசியல் எப்படி வேண்டுமானாலும் மாறலாம்' என்று சொல்லியிருக்கிறாராம்.

- ப்ரியன்



NOW ON SALE
Rs.10/- Only
My Pet Parrot...
Poster of the Month
Learn to Concentrate
November 2009
GOKULAM
THE Magazine for Children

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

